[illegible]

8 இதழ்-4

செப்டம்பர்-1978

JL
Y:52:5-211,N71
N78.8.6
16/8/72

# குடும்ப நலச் செய்திக்கதிர்

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
1 அக் 1978
EGMORE, MADRAS-8.














மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் உரை
ாற்றுகிறார்.

ாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி
ஆர். சௌந்திரராசன் அவர்கள் உரையாற்றுகிறார்.

ாண்புமிகு அமைச்சர்கள் கண்காட்சியைப் பார்வையிடு
கிறார்கள்.

ாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. பொன்னையன் அவர்கள் உரையாற்றுகிறார்.


திறப்பு விழாவில் கலந்து கொண்டோர்.







Registered No. TN/MS
Registered No. RN/280



800 008
161892
Y:52:5m211
N7?
JL



# செந்தமிழ் நாட்டார்க்கு உயிர் போன்றார்!

பாவேந்தர் பாரதிதாசன்

வயதில் அறிவில் முதியார்—நாட்டின்
வாய்மைப் போருக்கென்றும் இளையார்!
உயர் எண்ணங்கள் மலரும் சோலை!
ஓதும் இராமசாமிப் பெரியார் வாழ்க!



"சமயவெறி தணிக என்றார்;
சாதி வெறி தணிக என்றார்;
சகோதரர் போல்

அமைக என அறிவித்தார்!
பெண்களெலாம் நல்லுரிமை
அடைக என்றார்!

எமை அகத்தும் புறத்தினிலும்
திருந்துதற்கே எம்பெருமான்
சொன்னதெல்லாம்,

இமயமலை இல்லையென்று
சொன்னது போல் எண்ணினோம்;
பின் தெளிந்தோம்!

பயிர் போன்றார் உழவருக்குப்!
பால் போன்றார் குழந்தைகட்குப்!
பசும்பாற் கட்டித்

தயிர் போன்றார் பசித்தவர்க்குத்!
தாய் போன்றார் ஏழையர்க்குத்!
தகுந்த வர்க்குச்,

செயிர் தீர்ந்த தவம் போன்றார்!
செந்தமிழ் நாட்டிற் பிறந்த
மக்கட்கெல்லாம்,

உயிர் போன்றார்! இங்கு வந்தார்;
யாம் கொண்ட மகிழ்ச்சிக்கோர்
உவமை உண்டோ?



# நச்சுமரங்களை வீழ்த்திய பெருங்காற்று!

பேரறிஞர் அண்ணா

கல்லூரி காணாத கிழவர்! காளைப்பருவம் முதல் கட்டுக் கடங்காத முரடர். அரசியல் நோக்கத்துக்கான முறையிலே கட்சி அமைப்பு இருக்க வேண்டுமென்று அறியாத கிளர்ச்சிக்காரர். பொது மக்கள் மனம் புண்படுமே; புண்பட்ட மக்கள் தாறுமாறாகப் பேசுவரே; ஏன் வீணாக அவர்களது ஆத்திரத்தை கிளப்ப வேண்டும் என்று ஊகமாக நடந்து கொள்ள மறுப்பவர்—யார் யாரைத் தூக்கி விடுகிறாரோ அவர்களாலேயே தாக்கப்படுபவர்—கிளர்ச்சி என்ற கருத்து இனிக்கிறது இந்தக் கிழவருக்கு. இவ்வளவு வயதாகிறது! இவ்வளவு வருஷங்களாகப் பொது வேலை செய்தார்? ஒரு சர் பட்டம் பெற்றாரா? ஜினிவாப் போனாரா சர்க்கார் செலவில்? அமெரிக்கா போனாரா அரசாங்க செலவில்? எதைக் கண்டார்? எட்டு முறை சிறைக் கோட்டம் போய் வந்தார். இவர்தானய்யா இராமசாமி நாயக்கர்.

உலகிலே பலப்பல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் நமக்குத் தெரியும். நாத்திகம் பேசிய நாவலரையும் நாமறிவோம். நெருப்பாறு தாண்டும் வீரரும் நமக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்கும் பெரியாருக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை நாம் உணர வேண்டும். அவர்கள் படித்த பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர், எழுதினர்.

பெரியாரின் பணி தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே, கல்வீச்சு, மண்வீச்சுக்களிடையே என்பதை அறிய வேண்டும். அதிலும் சகலமும் உணர்ந்த சகலகலாவல்லவர்களும், வெறும் சாமியாடிகளைக் கூடக் கண்டித்துப் பேச சக்தியற்றுக் கிடந்த காலை, பெரியாரின் பெருங்காற்று தமிழகத்திலே வீசி நச்சு மரங்களை வேரோடு கீழே பெயர்த்தெறிந்தது என்பதையும் உணர வேண்டும். பெரியார் கிளர்ச்சி பல நடத்தி அனுபவம் பெற்ற கிழவர்! சீமான்களின் சீற்றத்தாலும் சுடப்பட முடியாத அளவு பொது மக்களின் தொடர்பு எனும் உரம் ஏறிய உள்ளமும், உடலும் படைத்தவர்! தமிழகத்தின் தன்மானத்திற்கே வித்தூன்றியத் தலைவர். அவர் களம் பல கண்டவர், போர் பல நடத்தியவர். போக வாழ்வை வெறுத்து, எளிய வாழ்வை நடத்தி வருபவர்.

உழைக்க வாருங்கள்; பிழைக்க வழி என்ன என்று என்னைக் கேட்காதீர்கள்! உங்கள் இனத்தை மீட்க வாருங்கள், அதற்கு ஏற்ற சக்தி உண்டா என்று என்னைக் கேட்காதீர்கள்! போருக்கு வாருங்கள் அது எப்போது முடியுமென்று என்னைக் கேட்காதீர்கள்! இதுவே பெரியாரின் அறிக்கை.

சாக்ரடீஸ், லெனின், பிராட்லா, பெர்னாட்ஷா, ரூஸோ முதலிய பேரறிஞர்களும் புரட்சிக்காரர்களும் எதற்காக உலகிலே போற்றப்படுகிறார்களோ, அவ்வளவையும் ஒருங்கே திரட்டி ஓர் உருவில் பார்க்க வேண்டுமானால் அது பெரியார்தான்!

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். அவருடன் மற்றப் பலரைவிட இடைவிடாது இருந்திடும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். இன்றும் நினைவில் கொண்டு வரும் போது இனிமை பெறுகிறேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிறார். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார். பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அகமகிழ்வும், மனநிறைவும் பெற்றிடச் செய்தார்.


நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான்.

'மனதிற்பட்டதை எடுத்துச் சொல்வேன், எது நேரிடினும்' என்ற உரிமைப் போர் அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி, மிகப்பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை. இன்று அனைவரும் பெற்றுள்ளனர், அந்த வெற்றியின் விளைவுகளை. இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றி இது. இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார். இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரிது.

எனவேதான், பெரியாருடைய பெரும்பணியை நான்—ஒரு தனி மனிதரின் வரலாறு என்றல்ல—ஒரு சகாப்தம்—ஒரு கால கட்டம்—ஒரு திருப்பம்—என்று கூறுவது வாடிக்கை.

அவர் கண்ட களம் பல; அவர் பெற்ற வெற்றிகள் பலப்பல. அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது.

அந்தப் போரில், ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் வசந்தம் என்று குறிப்பிட்டேன். ★





# பெரியார் சிலையை வழிபடும் காலம் வரவேண்டும்.

## முதல் அமைச்சர் திரு.எம்.ஜி.ஆர்.

அய்யாவுக்கு சிலை வைத்திருக்கிறது என்றாலே சிலருக்கு அச்சம் ஏற்படுகிறது. கடவுளைத் திட்டி எழுதியிருப்பார்களோ—உயர் சாதியினரைத் தாக்கி எழுதியிருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அப்படிப்பட்ட அச்சம் யாருக்கும் வரவேண்டாம். இங்கே நிறுவப்பட்டுள்ள அய்யா சிலையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களை தயவு செய்து படித்துப் பாருங்கள். பெரியாரின் சிறந்த கருத்துக்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

எத்தனை சாதிகள் என்று பேசும் போது இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சாதிகள் ஒழிவதற்கு அய்யா என்ன சொன்னார்களோ அந்தக் கருத்தினை நாம் எந்த அளவிற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். இன்னும் நாம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

யார் உயர்ந்த சாதி என்று சொல்கிறார்களோ அவர்கள் நம்மைவிட கலப்பு மணம் செய்து கொள்வதில் முன்னால் நிற்கிறார்கள். கலப்பு மணம் செய்து கொள்வதிலும், வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுவதிலும் நம்மவர்கள் இன்னும் பின்தங்கித்தான் நிற்கிறார்கள் என்பதை எண்ணும்போது வேதனையாக இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் இங்கே இருந்தால் உயர்வு இல்லை என்று எண்ணி கிறிஸ்துவமதத்தில் போய்ச் சேருகிறார்கள் என்றால், உயர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையில் சேருகிறார்கள். அங்கே மட்டும் என்ன? இதே நிலைமைதான்.



இங்கே ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். திருச்சியில் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களிடையே சாதிகள் தலை தூக்கியதைப் பார்த்தோம்.

மரணம் அடைந்த ஒருவரின் சடலத்தை அடக்கம் செய்வதில் கூட பாகுபாடுகள் உள்ளன. கிறிஸ்துவ மதத்தில் உள்ள உயர்ந்த சாதியினருக்கும், தாழ்ந்த சாதியினருக்கும் தனித்தனியே இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சடலத்தை அடக்கம் செய்வதில் பாகுபாடு ஏன்? எல்லோருக்கும் அது பொது இடம்தான் என்று தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் போராடினார்கள்.

சாதி வேறுபாடுகள் இந்து மதம் ஒன்றில்தான் இருக்கிறதென்று யாரும் தவறாகக் கருதிவிட வேண்டாம். எல்லா மதத்திலும் சாதி வேற்றுமை தலைதூக்கித்தான் இருக்கிறது.



தமிழ்நாடு முஸ்லீம் லீக் தலைவர் செய்குத் தம்பி இங்கே பேசும் போது நாங்கள் சிலையை வணங்குவதில்லை என்று குறிப்பிட்டார்.

அய்யா அவர்களுடைய சிலையை எதிர்காலத்தில் யாரும் கடவுளாக வழிபடமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்றார். அது அவருடைய கருத்தாக இருக்கலாம்.

பெற்ற தாயை கடவுளாக மதித்து வணங்குகிறோம். அதேபோல நம்மையெல்லாம் தலை நிமிர்ந்து நடக்கச் செய்த அய்யா அவர்களின் சிலையைக் கடவுளாகப்போற்றி வழிபடுகிற காலம் நிச்சயம் வரவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். ●

—பெரியார் சிலை திறப்பு விழாவில் பேசியது.

# 1931-ல் பெரியார் எழுதிய கர்ப்பத்தடை !

ஒரு தேசத்து ஜனங்கள் திரேக ஆரோக்கியமும், புஷ்டியும், பலமும், வீரமும், சுயமரியாதையும், அறிவுமுள்ளவர்களாக இருக்க வேண்டுமானல், குழந்தைப் பருவம் முதற்கொண்டே தங்கள் பெற்ருேர்களால் போஷிக்கப்பட்டும், கல்வி கற்பிக்கப்பட்டும், விசாரமில்லாமல் மன உல்லாசமாகவும் வளர்க்கப்பட வேண்டும். அவ்விதம் பெற்ருேர்களால் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டுமானல், பெற்ருேர்கள் தங்கள் சக்திக்கும் தகுதிக்கும் போதுமான அளவே குழந்தைகளைப் பெறுவதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல், சக்திக்கும், அளவுக்கும் மீறி பெற்ருேர்கள் அதிகமாகக் குழந்தைகளைப் பெறுவதால் பெற்ருேர்கள் கஷ்டத்திற்குள்ளாவதுடன், குழந்தைகளும் பலவீனர்களாகவும், சௌகரிய மற்றவர்களாகவுமாகி, அவர்களைக்கொண்ட தேசமும் தரித்திரத்தில் மூழ்கி மற்ற மக்களுக்கும் துன்பத்தை விளைவிக்க வேண்டியவர்களாகி விடுகின்ருர்கள்.

உதாரணமாக, நமது நாட்டையே எடுத்துக் கொள்ளுவோமேயானல் நாளுக்கு நாள் ஜனங்களின் எண்ணிக்கை அதிகமாகி, பெரும்பான்மையோர்கள் தொழிலில்லாமல், வாழ்வதற்கே வகையில்லாமல் மேலும் மேலும் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு, அவைகளைக் காப்பாற்றவும், படிப்பிக்கவும் சக்தியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு துக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதும் நாம் அனுபவித்தும், பார்த்தும் வருவதுமான சம்பவங்களாகும். சில குழந்தைகளைக் கொண்ட சிறிய குடும்பங்களுக்கும், அதிகமான பிள்ளைக் குட்டிகளைக் கொண்ட பெரிய குடும்பங்களுக்கும், உள்ள வித்தியாசங்களை, நாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிகின்ருேம். முதலாவது, பிள்ளைகளை அதிகமாகப் பெறப் பெற பெற்ருேர்களின் சுக போகங்கள் தானகவே குறைந்து கொண்டு வருகின்றன. அது போலவே தான், ஒரு நாடும் தனது சக்திக்கு மேற்பட்ட மக்களை உடையதாக ஆகி விட்டால் அது சதாகாலமும் பஞ்சத்திலும், நோயினலும் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கவேண்டியதோடு, அதுதன் அழகையும் முற்போக்கையும் இழந்து சுயமரியாதையையுமிழந்து தயங்க வேண்டியதாகி விடுகின்றது.

இந்த உண்மையை அறியாமலே இதுவரை அனேக சமூக சீர்திருத்தக்காரர்கள் என்பவர்களும், பொருளாதார சீர்திருத்தக்காரர்களென்பவர்களும் தங்கள் நாட்டின் — மக்கள் சமூகத்தின் முற்போக்கிற்கும், பொருளாதார முற்போக்கிற்கும், வேறு எத்தனேயோ துறைகளில் உழன்று கஷ்டப்பட்டும் பயனடையாமல் சலிப்பின் மீது கடைசியாக ஒரு நாட்டுமக்களை மற்ருெரு நாட்டு மக்கள் வெறுக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். சதாகாலமும் பிறர் மீதே குற்றம் சொல்ல வேண்டியவர்களாகவுமாகிவிட்டார்கள். நன்ருய் வாழ்பவர்களின் மீது பொருமைப்பட வேண்டியவர்களாகவும், மற்றவர்களைப் பட்டினி போட்டால்தான் தாம் வாழலாம் என்று நினைக்க வேண்டியவர்களாகவும் ஆகி விட்டார்கள்

ஆனலும் சமீப காலத்தில் சில நிபுணர்கள் இவ்விஷயங்களை நடுநிலைமையிலிருந்து ஆராய்ச்சி செய்து பார்த்து, இவ்விதக் கொடுமையான நிலைமைக்கு உண்மையான காரணங்களைக் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

அஃதென்னவென்ருல், முதலில் குறிப்பிட்டதான அதாவது ஜனங்கள் அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்று, ஜன சமூகத்தை அதிகப்படுத்திவிடக் கூடாது என்பதேயாகும்.



ஆகவே, இந்த முடிவானது இப்போது மேல்நாட்டின் அறிவாளிகள் பலராலும், மற்றும் பொது நல சேவைக்காரர்கள் பலராலும், வைத்திய நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, இத்துறைகளில் இறங்கி மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து, மிக்கமுற்போக்கான மார்க்கங்களையும் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

அன்றியும், இந்தத் தத்துவத்தை அநேக அறிஞர்கள், தங்கள் வாழ்க்கைகளில் அமுலுக்கு கொண்டு வந்து கொண்டும் இருக்கிருர்கள். அதாவது மேல் நாட்டார்களில் படித்தவர்கள் என்று சொல்லப்படும் கூட்டத்தார்களிலேயே, அநேகர் கர்ப்பம் தரிக்காமல் இருக்கத்தக்க பல உபாயங்களைக் கையாண்டு வருகின்ருர்கள். இதற்காகப்பல சாதனங்களையும் கண்டுபிடித்து, பொது ஜனங்களுக்கு அறிவித்து, சில சாதனங்களை வினியோகித்தும் வருகின்ருர்கள். ஆனல் சாதாரண ஏழை ஜனங்களும், பாமர ஜனங்களும் இதன் உண்மைத் தன்மையை உணரவோ, பயன் அடைய முடியாமலோ இருந்து வருகிருர்கள். உண்மையிலேயே, இம் மாதிரி அதிகமான பிள்ளைகளைப் பெருமல்—கருத்தரிக்க விடாமல் இருக்க கவலை எடுத்துக் கொள்ள வேண்டியவர்கள் மிக்க ஏழை மக்களே யாவார்கள். ஆனல், இவர்களோ இம்மாதிரியான, அதாவது கருத்தரிக்காமல் இருப்பதற்கான காரியங்களைப்பற்றிப் பேசுவது கூட நாகரீக விரோதமான பேச்சென்று கருதுகிருர்கள். அறிவில்லாத பொது ஜனங்களும், மத விஷயத்திலும், கடவுள் விஷயத்திலும் கண்மூடித்தனமான மூட பக்தியுள்ளவர்களும், இதை மத விரோதமானதென்றும், பாவகரமானதென்றும், கடவுள்கோபத்திற்கு இலக்கான காரியமென்றும் பேசி, இந்தத் தத்துவங்களை எதிர்த்து வருவதால் ஏழை மக்களும், பாமர மக்களும், இப்படி ஒரு மார்க்கம் இருக்கின்றது என்று அறியக்கூட சௌகரியமில்லாமல் போய் விட்டது. ஆனல் மேல் நாட்டில், டாக்டர் மாரீஸ்டோப்ஸ் என்கின்ற ஆங்கில பெண் ஒருவர், தைரியமாக முன்வந்து, எவ்வித பழிப்புக்கும், எதிர்ப்பிரசாரத்திற்கும் அஞ்சாமல், இவ்விஷயத்தை, கர்ப்பத்தடையை, பிரசாரம் செய்யத் துணிந்ததின் பயனய், இப்போது இவ்விஷயம் மேல் நாட்டில் எங்கும் சாதாரணமானதும், சகஜமானதுமான விஷயமாய்ப் பேசிக்கொள்ளப் படும்படியாக ஆகிவிட்டது. அதுமாத்திரமல்லாமல், மேல் நாடுகளில் பல இடங்களில் பிள்ளைப்பேற்றைத் தடுக்கும்படியான வசதிகள் சம்மந்தமாக, பல வைத்தியசாலைகள் ஏற்படுத்தப் பட்டும் இருக்கின்றன. கருத்தரிக்காமல் இருக்க வேண்டுமென்ற ஆசை உடையவர்களுக்கு அம்மார்க்கங்களைக் கற்றுக் கொடுப்பதுடன், அதற்கு வேண்டிய சாதனங்களையும், கையாளும் முறைகளையும் போதிக்கின்ருர்கள். மருந்து வியாபாரக் கடை முதலியவைகளில் கர்ப்பத்தடைக்கு அனுகூலமான மருந்துகளும், சாதனக் கருவிகளும் விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் செய்திருக்கின்ருர்கள்.

இவைகள் வைத்திய நிபுணர்களாலும், சமூக சீர்திருத்த ஆராய்ச்சிக்காரர்களாலும் ஒப்புக் கொள்ளப் பட்டு விட்டதால் இதை சட்ட விரோதமென்றும் யாரும் சொல்லத் துணியவில்லை. இது எவ்விதத்திலும் சட்டவிரோதமான காரியமுமல்ல என்பதை யாவரும் உணரவேண்டும். ஏனெனில், சட்டவிரோதமான காரியமென்பதெல்லாம் அன்னியனுக்கும், தனக்கும் துன்பத்தையும் நஷ்டத்தையும் கொடுக்கக்கூடிய காரியங்களைத்தான் சொல்லலாம். இதனல் யாருக்கும் எவ்வித நஷ்டமோ, கஷ்டமோ, அதிருப்தியோ ஏற்படுவதற்கில்லை.

தேசப் பொது நன்மையும், சமூக நன்மையையும் மாத்திரமே உத்தேசித்து, அறிஞர்கள் கர்ப்பத்தடையைக் கண்டு பிடிக்கவில்லை. மற்றும் என்னென்ன காரியங்களுக்கு கர்ப்பத்தடை அவசியமென்பதையும் சற்று விளக்குவோம்.



பெண்ணனவள் திடசரீரியாயில்லாமலும், கல்யாணமாவுடனும், சரியான அமைப்புப் பொருந்திய சரீரமாயில்லாமலும் இருக்கின்ற சமயத்தில் கர்ப்பம் தரித்து, பிள்ளைகளைப்பெறுவதென்பது அவளுக்கு மிகவும் அபாயகரமானதாகவும், கஷ்டமானதாகவும் இருக்கும்.

உதாரணமாக, க்ஷயரோகத்தாலும் நீரழிவு வியாதியாலும், நெஞ்சு துடிதுடிப்பினலும் பீடிக்கப்பட்டிருக்கின்ற பெண்களும், பிள்ளை பெறும் துவாரம் அதிகமாக சிறுத்து இருக்கும் பெண்களும் கர்ப்பம் தரிப்பது மிக்க ஆபத்துக்கும், கஷ்டத்திற்கும் உள்ளான கெடுதியாகும்.

தொத்துவியாதி, மேகசம்பந்தமான வியாதி, காக்கை வலிப்பு, பைத்தியம், கேனம் முதலிய வியாதியுள்ளவர்கள் கர்ப்பம் தரிப்பதும் பயனற்றதும் வாழ்க்கையில் மிக்க கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதுமாகி விடும்.

பிரசவத்திஞல் சரீர மெலிவும், பலக்குறைவும் ஏற்படுகின்ற சுபாவ சரீரமுடையவர்கள், மறுபடியும் மறுபடியும் கர்ப்பமாஞல், சரீரம், மிகவும் பலவீனமடைந்து விடும். ஒரு ஸ்திரி ஒரு குழந்தையைப் பெற்று அது நன்ருகப்பால் குடித்து வளர்வதற்கு முன்னலும், முதலில் கர்ப்பமாகி பிள்ளைப் பெற்ற பலவீனம் நீங்குவதற்கு முன்பும் கர்ப்பமாகி விட்டால் முதல் குழந்தைக்கு சௌகரியமில்லாமல் போவதோடு, மறு குழந்தையைப் பெறுவதற்கும் போதிய சக்தியில்லாமல் போய் விடும்.

பெண்ணும் ஆணும் தகுந்த வயது அடைவதற்குமுன் அதாவது பெண்கள் 22 வயதுக்கு முன்னும், புருஷர்கள் 25 வயதுக்கு முன்னும் சதிபதிகளாயிருக்கும் போது பெண்கள் கர்ப்பம் தரித்து விட்டால், அந்தக் குழந்தைகள் மிக்க இளமைப் பருவத்தின் காய்ப்பாகி, உறுதியற்ற சரீரக் கட்டுடையதாகி விடும். குடும்பத்திற்கு போதிய வரும்படி இல்லாத நிலையில், பெண்கள் பிள்ளைகளைப்பெற்று விட்டால் குடும்பத்திற்கு தரித்திரமும், கஷ்டமும் அதிகமாகி வாழ்க்கை திருப்தியற்றதாகி விடும்.

அன்றியும், ஆண் பெண் ருதுசாந்தியானவுடன் பெண் கர்ப்பமாகி விட்டால், கொஞ்சகாலமாவது தம்பதிகள் இயற்கை இன்பம், கலவி இன்பம் அடைவதற்கு சாவகாசமில்லாமல் போய் விடும்.

இவ்வளவு விஷயங்களில், பெண் கர்ப்பமாவது அசம்பாவிதமாயிருப்பதுடன், பெண்களின் சுதந்தர வாழ்வுக்கும் இந்த கர்ப்பமானது பெரிய இடையூருயிருக்கின்றது. என்னவெனில், பெண்களுக்கு கர்ப்பத்தை உண்டாக்குகின்ற பொறுப்பு மாத்திரம் ஆணைச்சேர்ந்ததாயிருக்கின்றதே தவிர, மற்றபடி, கர்ப்பமான நிமிஷம் முதல் பிள்ளை பெறும்வரை அதன் பொறுப்பு முழுவதும் — பிள்ளை பெறும்போது அடையும் பிரசவ வேதனையும், அதனல் உண்டாகும் ஆபத்துகளும் பெண்களே அடைகின்ருர்கள். பிள்ளையைப் பெற்ற பின்பும், தாயானவள் தான் தனது இரத்தத்தைப் பாலாக்கி, குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்கின்ருள்.

குழந்தைக்கு வரும் வியாதிகளுக்கும் தானே பத்தியமிருக்க வேண்டியவளாகிருள். அதைச் சுமந்து, போஷிக்கும் வேலை முழுவதும் தாயே செய்ய வேண்டியவளாகிருள்.

பெண்ணனவள் ஒன்று இரண்டு பிள்ளைகளை பெற்றவுடனேயே சகல வித சுகபோகங்களிலும் விரக்தியுடையவளாகிவிட வேண்டியவளாகிருள்.

குழந்தை பெற்ற உடனே குழந்தையின் போஷணையையும், வளர்ச்சியையும் உத்தேசித்துத் தனது சுதந்திரத்தை விட்டு, புருஷனுக்கும், குடும்பத்திற்கும் அடிமையாகிவிட வேண்டியவளாகிருள். புருஷன் தனக்கு இஷ்டமான பெண்ணை மணந்து கொள்வதற்கும் பெண்ஜாதி ஒரு புருஷனைத் தவிர வேறு புருஷனை எந்தக் காரணம் கொண்டும் மணந்து கொள்ள முடியாததற்கும், இக்குழந்தைகளைப் பெறுவதே பெருத்த தடையாயிருக்கின்றது. பிள்ளைகளைப் பெறுவதாலேயே பெண்களுக்குச் சுதந்திரம், மானம், அறிவு எல்லாவற்றையும் விட்டுவிட நேரிடுகின்றது. சிறிதளவாவது சுயேச்சையுள்ள பெண்ணய் விளங்குவதைவிட, பிள்ளைகளைப்பெறும் அடிமையான இயந்திரமாகவே இருக்கவேண்டியதாய் இருக்கினறது. இதுவரை கூறி வந்தவைகளாலும், இன்னும் பல காரணங்களாலும் பெண்கள் கர்ப்பத்தடையை அனுசரிக்க வேண்டியது முக்கியமான காரியமாகும் என்று சொல்லுகின்ருேம். ●

# மதுவை நான் தொட்டதில்லை!

பெரியார்

சுற்றுச் சார்புதான் ஒரு மனிதன் வாழ்க்கை, லட்சியம், கொள்கை ஆகியவைகளுக்குக் காரணமானது என்று சொல்லப்படுகிறது. அனுபவத்தில் பெரிதும் அப்படித்தான் இருந்து வருகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரு துறையிலாவது சுற்றுச் சார்பு என்னை அடிமைப் படுத்தியதாகச் சொல்வதற்கு இடமே கிடைக்கவில்லை. நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு தன்மை என்னைச் சுற்றியிருந்த சுற்றுச் சார்பு சுகவாசம் ஆகியவைகளுக்கு மாறுகவே இருந்து வந்திருக்கிறேன்.

உதாரணமாக எனது நல்ல வாலிபப் பருவத்தில், 20 முதல் 32 வயது வரையில் சகபாடிகள் ஏறக்குறைய அந்தரங்க சகபாடிகள் எல்லோரும் மது அருந்துபவர்கள் ஆவார்கள். அது மாத்திரமா? என்னிடம் அதிகம் காதல் உள்ள சர்க்கார் அதிகாரிகள், ஜமீன்தார்கள், மிராசுதாரர்கள் ஆகியவர்களும் மது அருந்துபவர்கள். மேற்கண்ட வயதில் அநேகமாக இரவெல்லாம் இந்தக் கூட்டத்தாருடனேயே கோலாகலமாய் இருந்து காலை 6 மணிக்கு வீட்டிற்கு வந்து கொத்துச் சாவியை எடுத்துக் கொண்டு கடை திறக்கப் போய்விடுவேன்.

ஒரு ராத்திரிக்கு 4 அல்லது 5 பாட்டில் பிராந்தி உடைபடும். எனக்கும் மாதத்தில் இந்தச் செலவு சுமார் 40 50 ரூபாய் ஆகும். என் வீட்டில் சதா 4,2 பாட்டில்கள் இருக்கும். நானே என கையால் டம்ளரில் ஊற்றிச் சோடா கலந்து கொடுப்பேன். சிலர் அதிகம் குடித்து விட்டு என் மீது துப்புவார்கள். ஒரு காலத்தில் ஒரு டிப்டி கலெக்டரும், ஒரு சால்ட் அசிஸ்டெண்ட் கமிஷனரும் நான் ஊற்றிக் கொடுத்ததையே சாப்பிட்டு விட்டு, என்னை பிடித்துக் கீழே தள்ளி, என் வாயில் பலவந்தமாக ஊற்றினார்கள். அப்படி எல்லாம் இருந்தும் என்னை அந்தச் சகவாசமும் சுற்றுச் சார்பும் அது (மது அருந்தினால்) எப்படியிருக்கும் என்று யோசிக்கக் கூடத் தூண்டவில்லை. என் மனைவியாருக்கு அடிக்கடி சந்தேகம் தோன்றும். என் வாயை ஊதிக்காட்டச் சொல்லுவார்கள். நான் கிராக்கி செய்வேன். பலாத்காரத்தால் என் வாயை முகர்ந்து பார்த்துத் திருப்தி அடைவார்கள்.


இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், சுற்றுச் சார்பு எதுவும் என்னை வசப்படுத்திக்கொள்ளவில்லையென்பதற்காகவேயாகும். ★



சேலத்தில் பெரியாருக்கு அளிக்கப்பட்ட சிம்மாசனம்.




ஐயா அவர்கள் சென்னையில்



# தலையெழுத்தை மாற்ற முடியாதா?

பெரியார் கேள்வி

[18-8-72-அன்று வேலூர் முனிசிபல் சுற்றுலா மாளிகையில் குடும்ப நலத்திட்ட உதவி இயக்குநர் டாக்டர் வேணுகோபால் அவர்களும், மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் ராம்நாத் அவர்களும் தந்தை பெரியாரிடம் குடும்பநலத் திட்டத்தைப் பற்றி நடத்திய உரையாடல்:]

டாக்டர் வேணுகோபால்: வணக்கம், ஐயா. நாங்கள் குடும்ப நலத் துறையிலிருந்து வந்திருக்கிறோம். தாங்கள் நல்ல பகுத்தறிவு கருத்துக்களை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி வருகின்றீர்கள். அதனாலே நம் நாட்டிலே, அதிலும் முக்கியமாக தமிழ்நாட்டிலே, மக்கள் பயனடைந்து இருக்கிறார்கள். இப்போது இந்தக் குடும்பநலத் திட்டம் தீவிரமாக நடக்கிறதைப்பற்றி உங்களுக்கு நன்றாக தெரிந்திருக்கும். அதிலே நல்ல புதிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன். எங்களையும் ஊக்குவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார்: 1929-லேயே ஆரம்பிச்சேன். ஒரு அளவுக்கு அது பழகி வருது. இப்பொழுது மக்களுடைய உள்ளத்திலே கொஞ்சம் பரவி இருக்கிறது, குடும்பப்பளு குறைய வேண்டுமென்று! இது உண்மையிலேயே, காரியத்திலேயே குறைய வேண்டுமென்று, வெறும் பிரச்சாரத்திலேயே முடியும் என்று சொல்ல முடியாது. அதற்கு வேண்டிய நிர்ப்பந்தங்கள், திட்டங்கள் இருக்க வேண்டும், அப்படித்தான். முதலாவது இதிலே (மக்கள் தொகை) குறைய வேண்டுமென்று சொன்னால், பொம்பிளைக்குக் குறைஞ்சது 22 வயதுக்கு முன்னால் கல்யாணம் இல்லாமல் பண்ணணும். சரி, 3 அல்லது 4 பிள்ளையாவது குறையும். 16-லியே பண்ணிட்டா 20 முடிவதற்குள், 4 வருடத்திற்குள் 3 அல்லது 4 பிள்ளைகள் ஆயிடும்.

இரண்டாவது, பெண்களுக்கு விகிதாச்சார உத்தியோகம் கொடுத்து விட வேண்டும். மற்றதுக்கெல்லாம் (கம்யூனல் ஜி. ஓ.) போட்ட மாதிரி பெண்களுக்கு 50 சத விகிதம் உத்தியோகம் கொடுத்து விட வேண்டும். எந்த உத்தியோகமாயிருந்தாலும் சரி, வாத்தியாரம்மா வேலை முதற்கொண்டு மற்றவர்களுக்குக் கிடைக்கிற உத்தியோகம் வரைக்கும் உத்தியோகம் சரியாகொடுத்துட்டோமானா அவர்களுக்கு எங்கேஜ்மெண்ட் சரியா இருக்கும். இப்ப உத்தியோகம் இல்லையானா அந்தப் புருஷன் பெண்டாட்டி முறையைத் தவிர வேறு ஒரு சந்தோஷம் என்ன இருக்கிறது? ஆகையினால் பிள்ளையைப் பெறுகிற வேலை இருக்கிறது! கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தருக்குச் சில திட்டம் போடணும். இத்தனை பெத்தவங்களுக்கு உத்தியோகம் இல்லையென்று சொல்ல வேண்டும். நான் ஏற்கனவே சொல்லிருக்கிறேன்.

உத்தியோகத்திலே இருக்கிறவங்களுக்கு 3 பிள்ளை, 4 பிள்ளை ஆயிட்டுதுன்னா பிரமோஷன் கட் ஆப் பண்ணிடணும். இதனாலே எல்லாம் தப்பில்லை! இயற்கையாவே நமக்கு அறிவிருக்கிறது. மன்னிக்கணும். உங்களுக்கு ரூ. 250 சம்பளம், 6 பிள்ளை பெத்திருக்கீங்கன்னு வச்சுக்குங்கோ, நீங்க நாணயமா இருப்பீங்க என்று எப்படி நம்புவது? இல்லை, என்ன காரணத்தைக் கொண்டு சொல்ல முடியும்? பிள்ளையைக் கொண்டுபோய்க் குழியிலேயா போடுவீங்க? இல்லாட்டா நோவு வந்தா சாகவா விட்டு விடுவீங்கள்? அல்லது படிக்கவைக்காம விட்டுவிடு

வீங்களா? உலகத்திலே கெட்டகுணம் பரவுதுன்னு, பிள்ளை பெத்தவங்க கிட்டே இருந்துதானே?

எல்லோருக்குமா ரூ. 1,500 சம்பளம்? இல்லே எல்லோருக்குமா ரூ. 800 சம்பளம்? ரூ. 150, 200, 250 தான்! 4 பிள்ளை, 5 பிள்ளை, 6 பிள்ளை இருந்ததுன்னு அவன் எப்படித் திருடாம காலங்கடத்த முடியும். அதனாலே அரசாங்கத்துக்கு, மனுஷனை ஒழுக்கமா கட்டுப்படுத்தறதுக்கு அதிகாரம் இருக்குது. அதனாலே இந்தக் காரியங்களெல்லாம் நாம் செய்தோமானால் கொஞ்சம் குறையும். குறைஞ்சா என்ன ஆகும்? மனுஷன் மனுஷனா இருக்க முடியும்.

தலைஎழுத்தை யாரும் மாத்திட மாட்டாங்கன்னு பிள்ளை பெத்தவன் சொல்லுவானே தவிர, இனிமேல் கல்யாணம் பண்ணிகிட்டு பிள்ளை பெறுகிறவன் அப்படியெல்லாம் தகராறுக்கு வரமாட்டான். எல்லாருக்கும் ஒத்தது நமக்கும்னு போய்விடுவான். அதனாலே அந்த மாதிரி சில காரியங்களெல்லாம் சர்க்கார் செய்யணும். முதல்லே எடுத்ததும் இந்த உத்தியோகம் கொடுக்கறதிலே துணியணும். பெண்களுக்கு கொடுத்தது போக மீதிதான் ஆண்களுக்கு கொடுக்கணும். சில உத்தியோகங்களிலே அவங்களுக்குன்னு பிரிச்சே விட்டுடவேணும். பள்ளிக்கூடத்திலே எல்லாம், எஸ். எஸ். எல். ஸி. வரைக்கும் பொம்பிளைங்கதான் வாத்தியாரா இருக்கணும். நிறைய எங்கேஜ்மெண்ட் இருக்கும். இந்தக் குழந்தைகளைப் பற்றிய உணர்ச்சி வராது. அந்த வேலையும் குறைஞ்சு போகும். அரசாங்கம் பாலிஸியாவது வச்சிக்கணும். இந்தப் பெத்துக்கிறவனுக்குக் கொஞ்சம் யோசித்து உத்தியோகம் கொடுக்கணும். பிரமோஷன் அதுக்கெல்லாம் தெரிஞ்சா அவங்களுக்கும் கொஞ்சம் எண்ணம் வரும். பிரச்சார முறையிலே இதுதான் சொல்லியிருக்கிறேன். அதுக்கு அவங்களைக் கட்டுப்படுத்த வேணும். அவங்க அதிகமா சுதந்திரமா இருக்கிறதுக்கு இல்லாம கட்டுப்படுத்தணும்.

குடும்ப இன்ஸ்டிடூஷனையே மாத்திடணும். பொம்பிளையா பொறந்தா ஒரு புருஷன் இருக்கணுங்கறதும், ஒரு ஆம்பிளையா பொறந்தா அவனுக்கு ஒரு வேலைக்காரி மாதிரி ஒரு பொம்பளைட்டி இருந்துதான் ஆகணும் என்று இருப்பதையும் மாத்த வேணும். காதலியா இருக்கலாம். இந்த அடிமை, பொறுப்பு— இது ரெண்டும் மனுஷனை விட்டு விலகணும். அப்போ பிரியா இருக்கிறதுக்கு முடியுது. இரண்டாவது இந்தக் குழந்தைப் பைத்தியம், மனுஷனுக்கு வரத்துக்கு காரணம் (பிராபர்டி) சொத்து. சொத்து சேர்க்க உரிமை கொடுத்துட்டோம். அந்தச் சொத்துக்குப் பாத்தியம் வேணுமே! அதனாலே அந்தச் சொத்துக்கு ஒரு பிள்ளை வேணும்னு கவலைப்படறான். இல்லாட்டி தத்தாவது எடுக்கணும்ங்கிறான். அதுக்காக அந்தச் சொத்தினுடைய உரிமையைக் குறைக்கிறதுக்குப் பாடுபடணும். மக்களுக்கு பொது தர்மத்தைப்பற்றி நாம் இன்று சொல்லிக் கொடுக்கிறது இல்லை. மனுஷனுக்கு பொழுதெல்லாம் என்னடான்னா, கோயில், குளம், சத்திரம், அவங்க ஜாதி சம்பந்தமான கருமங்கள் பண்ணுவது, அந்த எண்ணமெல்லாம் மாறி பப்ளிக் சர்வீஸ் அல்லது வேறு விதமான சில காரியங்களைக் கொடுத்திட்டா அந்த எண்ணம் மாறிடும். இந்தமாதிரி செய்யறதுக்கு அவசரமா ஒன்று செய்யணும்னா, கல்யாண வயசை குறைந்தது ஒரு 20 வருஷமாகவாவது பண்ணச் சொல்லுங்க. 22 ஆகப் பண்ணமாட்டாங்க, 18 பண்றேன்னு ஒத்துக்கிட்டாங்க. 20 பண்ணியிருக்கணும். ஓரளவுக்கு நல்லா குறைந்து போகும். 20ன்னு பண்ணினா, பொம்பிளைக்கும் கொஞ்சம் பக்குவ புத்தி வரும். இப்போ அவங்களுக்கு உலகமும் தெரியாது. புத்தியுமில்லை. குடும்பந்தான் அவங்களுக்கு. படிச்ச பொண்ணுங்க எல்லாம் வெறும் டிப்ளமோ படிப்பே பத்தாது. படிச்சபொண்ணுன்னா அதுக்கு ஒரு தொழில் இருக்கணும். அதாவது, படிச்ச உடனேயே உத்தியோகம் பண்ணித்தான் சம்பாதிக்கணும்னு தானே இப்ப இருக்குது. அதனாலே அவங்களுக்கு வாய்ப்பில்லே. படிச்ச படிப்பு முடிஞ்சுது. 20 வருஷம் ஆச்சுன்னா ஒரு உத்தியோகத்துக்கு வேண்டிய படிப்புத் தவிர, ஜீவனத்துக்கு வேண்டிய ஒரு தொழில் கையிலே இருக்கணும். அவங்களும் ஆத்திரப்பட மாட்டாங்க—புருஷன் புருஷன்னு! அடிக்கடி அடிபட்டாவது பிள்ளையைப் பெத்து காப்பாத்த வேண்டுமென்ற எண்ணம் வராது. தொழில் கையிலே இருந்தா, அவங்க எப்படியாவது யுத்தியா இருப்பாங்க!





மாவட்ட மருத்துவ அதிகாரி: ஆப்ரேஷன் பற்றி ஐயா அபிப்பிராயம் என்ன?

பெரியார்: அதைப் பற்றி ஒன்னும் தப்பில்லை. நமக்கு அறிவு வர்றவரைக்கும் செஞ்சிதான் ஆவணும். அதனாலே தவறு ஒன்னுமில்லை. ஏதாவது மெடிக்கலா கெடுதிவந்ததுன்னு சொன்னா தவிர, என்றுமே அதைச் சாதாரணமா செஞ்சிட்டுதான் ஆவணும். அப்படி ஒன்னும் இல்லேன்னா அதைச் சாதாரணமா செஞ்சிக்கலாமில்லே?

உதவி இயக்குநர், மாவட்ட மருத்துவ அதிகாரி: நம்ப அரசாங்க உத்தியோகஸ்தர் தவிர சாதாரண ஏழை மக்கள், பாமர மக்கள், கூலி வேலை செய்யறவங்க இருப்பாங்க இல்லையா? அவங்களுக்கு ஐயா என்ன சொல்றீங்க? வேண்டிய அறிவுரை ஏதாவது இருக்கா? இப்போ அதை நம்பறதில்லே, அதைக் கைக்கொள்ளலாம்னு ஐயா சொன்னாதான் நம்புவாங்க.

பெரியார்: ஆப்ரேஷன் பண்ணணும். பொதுக் கூட்டங்களில் இதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லணும். ஏதோ இப்போ கொஞ்சம் கொஞ்சம் காரியம் ஆயிட்டு வருது. இது 1929-லே போட்டேன். இப்ப போட்டதில்லே. ஆப்ரேஷன் செய்ய வேண்டியதுதான்.

மாவட்ட மருத்துவ அதிகாரி: வட ஆர்க்காட்டிலே இப்போ ஒரு தீவிரத் திட்டம் போட்டிருக்காங்க. அதுக்காக ஐயா ஒரு அறிவுரை கொடுத்தாக்கா நல்லா இருக்கும்.

பெரியார்: மன்னிக்கணும். பள்ளிக்கூடத்திலே அதைச் சொல்லிக் கொடுக்கணும். பொம்பிளைங்க படிக்கணும். அந்த வாத்தியாருக்கெல்லாம் சொல்லணும். அவங்க மற்றவங்களுக்குச் சொல்லி பிரச்சாரம் பண்ணினா அவங்களுக்குப் புரியும்.

மாவட்ட மருத்துவ அதிகாரி: அப்படித்தான் செய்றாங்க!

உதவி இயக்குநர்: ஆசிரியர்களுக்கு அதை எப்படிச் செய்யலாம் என்பதை ஒவ்வொரு ஜில்லாவிலேயும் சொல்லிட்டுத்தான் வர்றோம்.



பெரியார்: அதிகமா குழந்தை பிறந்தா அதிகமான பேருக்கு உத்தியோகம் கொடுக்கணும். இந்தத் தொல்லைகளெல்லாம் அவங்களுக்கும் வரும். அனாலே அவங்க ரொம்பப் பிரயத்தனப்பட்டு அதைக் குறைக்கணும். குறைச்சால்தான் குறையும். விஷயத்தை எடுத்துச் சொன்னோமானா, அவங்களே அதிகப் பிள்ளைகளை வெறுப்பாங்க. அவங்க வரைக்கும் சங்கதி போகணுமே? போகலே! என்னமோ சர்க்கார் தொல்லை பண்றாங்க பண்றாங்கன்னு, பர்த் கண்ட்ரோல் பண்ணிக்கிறவங்க 60% பணத்துக்காகவும், லாபத்துக்காகவும் பண்ணிக்கிறாங்க. அதனாலே அவங்களுக்குத் தெரியறாப்போல சர்க்கார் செய்யணும். பொம்பிளைங்களையும் பிரச்சாரம் பண்ணிப் பக்குவப் படுத்தணும். சம்பளம் கொடுத்தாவது, போய் இந்தப் பிரச்சாரம் பண்ணிட்டுவர அனுப்பி வைக்கணும். பண்ணினா பிடிக்கும். ரொம்ப சந்தோஷம்.



# பொன்னடியில்...... வாடா மலர்கள்!



## ஒரு நாளும் மறக்க முடியாது!

தமக்கு நியாயமென்று பட்ட கருத்துக்களை அஞ்சாது வெளியிடுவதில் ஸ்ரீ நாயக்கர் முதல் ஸ்தானம் பெற்றவர் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. சமய—சமூக—அரசியல் துறைகளில் ஸ்ரீ நாயக்கர் செய்துள்ள தியாகமும், ஊழியமும், அவர் பட்டுள்ள கஷ்டங்களும் இத் தேசத்தினர் ஒரு நாளும் மறக்க முடியாதென்பதே நமது கருத்தாகும்.

—'தமிழ் நாடு' தலையங்கத்தில்
டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு (1934)



## உண்மைக் களஞ்சியம்!

நமது பெரியார் அவர்கள், ஒரு மகாத்மாவல்ல! ஆனால், நாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. அவருடைய அபிப்பிராயங்கள் ஆணித்தரமானவை. ஆனால் அவர் பிடிவாதக்காரரல்ல. தம் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக, அவர் பட்டினி கிடப்பதில்லை. "சாகும் வரை உண்ணாவிரத"மிருப்பதில்லை. நேர்மையான வழியிலேயே பாடு படுவார். காங்கிரஸ்காரருக்கு வார்தா எப்படியோ, அப்படியே திராவிடருக்கு ஈரோடு. அவர்கள் வார்தா போவதுபோல, நாம் அறிவுரை கேட்க ஈரோடு வருகிறோம். பெரியார் தமிழ் நாட்டின் உண்மைக் களஞ்சியம்.

—சர் ஏ. டி. பன்னீர்செல்வம்
(1938)



## புத்தகம்! சூறாவளி! போர்வாள்!

தென்னாட்டுப் புரட்சி என்னும் புத்தகத்தில், புது ஏடு சேர்க்கப்படுகிறது! பழங்காலக் கோட்டைகளைச் சாய்த்து விட்ட சூறாவளியில், மற்றுமொரு சுழல் — புத்தம் புதிய சுழல் பிறந்திருக்கிறது! ஆயிரங் காலத்துக் கொடுங்கோன்மைகளை வெட்டி வீழ்த்திய போர்வாள், இன்னொரு புது வீச்சுக்குத் தயாராகிறது! அந்தப் புத்தகத்திற்கு—சூறாவளிக்கு—போர் வாளுக்குரிய பெயர் தான், பெரியார் இராமசாமி என்பது.

—'போர் வாள்' ஆசிரியர்
காஞ்சி—மணிமொழியார்



## வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர்!

செல்வம் முதலிய மாயைகளை மறந்து, வறியோர் போல் எளிய உடைதரித்து, எளிய உணவு உண்டு, இரவு பகல் ஓயாது தேசத் தொண்டிற்கே தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த பெரியாரின் பிறந்த நாள், மலாய் நாடெங்கனும் கொண்டாடப்படுகிறது. 'பெரியார் வாரம்' மலாய் நாடெங்கும் கொண்டாடப்பட்டிருக்கும் சிறப்பைக் கவனித்தால், பெரியாரின் கொள்கைகள் இந்நாட்டுத் தமிழ் மக்களிடையே எவ்வளவு ஆழம் வேரூன்றி விட்டதென்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

—சிங்கப்பூர் 'தமிழ் முரசு' ஆசிரியர்
கோ. சாரங்கபாணி (1940)





## சாக்ரடீசைக் கண்டோம்!

மேனாட்டில் அன்று பிறந்து வளர்ந்த சாக்ரடீஸ் என்ற ஓர் அறிஞரைப் பற்றிக் கேட்டோம். ஆனல் கண்டோமில்லை. இவ்விந்தியாவிலேயே, அங்ஙனம் கண்டதாகக் கூறுவாருமில்லை. எனினும், இத் தமிழ்நாட்டில் அரும்பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீசைக் கண்டோம். தாடியோடு கண்டோம். அவர்தான், நம் ஈ. வெ. இராமசாமிப் பெரியார்!

—கே. வி. அழகிரிசாமி



## பிரமித்துப் போனேன்!

முதன் முறையில் அவர் பிரசங்கத்தைக் கேட்டபோது, நான் பிரமித்துப் போனேன். அவருடைய பேச்சில் ஆற்றல் தொக்கி நிற்கிறது. 'குடி அர'சின் பெருமை மிக ஆகும். ஆடாததையெல்லாம் ஆட்டி வைத்த பெருமை, குடி அரசுக்கே உரித்தானதாகும். இதற்குக் காரணம் பெரியாரின் சொல்லும் எழுத்தும் வன்மை கொண்டதாக இருந்ததே.

—ரசிகமணி டி. கே. சி. (1927)



## காந்தியடிகளால் பாராட்டப்பட்டவர்!

தற்காலத் தமிழகத்தில் தலைநின்று, ஒல்லும் வகை ஓயாது உழைத்து, தமிழர் வாழ்வுயர் வளம் சிறக்க உரிமைப் போர்த் தலையணியில் பொருது வரும் ஒப்புயர்வற்ற தலைவர், இராமசாமிப் பெரியார் காந்தியடிகளாலும் பாராட்டப் பெற்றுப் பொது நலம் பேணும் அறம் திறம்பா அருண் மறவரிவர்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் (1942)



## கன்பூசியசுக்கு நிகரானவர்!

சீன தேசத்துச் சன்-யாட்-சென் என்பவரைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். அவருடைய குருவான கன்பூசியஸ் என்னும் பேரறிஞருடன், பெரியார் இராமசாமி அவர்களை ஒப்பிடலாம்!

—சீனப் பேராசிரியர் சி-எஸ்-ஸீ (1939)



## அடிப்படை உறுதியானது!

பெரியாரோ, "நான் அவதாரமல்ல, கடவுள் தூதனல்ல, உன்னைப் போல் மனிதன்!" என்று கூறி, பகுத்தறிவின் அடிப்படையில் அமைத்திருக்கிருர், தமது கொள்கைகளையும், திட்டத்தையும். அடிப்படை உறுதியானது; அழித்து விடுவது முடியாத வேலை.

மூவலூர் ஆ. இராமாமிர்தத்தம்மாள்



## இந்த ஒரு குணத்தைப் பெற்ருல் கூடப் போதும்!

ஒரே ஒரு சிறு எடுத்துக்காட்டு. வெள்ளையர் ஆட்சியினுல் ஏற்பட்ட பல்லாயிரக் கணக்கான நன்மைகளில் "காலந்தவருமை" என்பது ஒன்று. குறித்த நேரத்தில் ஒரு காரியத்தைத் தொடங்க வேண்டும் என்பதில், பெரியாரவர்கள் அளவு கவலையுடையவர் என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர். 'எந்தக் காரியத்திற்கும் காலந் தவறிச் செல்லும் குணமுடைய 100க்கு 99 பேர், இந்த ஒரு குணத்தை இவரிடமிருந்து கற்றுக் கொண்டால் கூடப் போதும் என்றே கூறுவேன்.

—'விடுதலை' ஆசிரியர் சா. குருசாமி (1947)



## மற்றவர் உணர்ச்சியை மதியார்!

அவர், மற்றவர்களுடைய உணர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கொஞ்சமும் மதியாது, தமக்குச் சரியென்று பட்டதை வலியுறுத்தி வந்த ஒரு காரணத்தாலேயே நான் அவரிடம் மாருத அன்பு கொண்டேன். அத்தகைய ஒரு சிறந்த குணமே, இப்போது நம் மக்களின் முற்போக்குக்கு அவசியமாயிருக்கிறது.


—முன்னுள் முதலமைச்சர் டாக்டர் பி. சுப்புராயன் (1928)



## உண்மையான சிங்கம்!

தோழர் இராமசாமி நாயக்கர் அவர்களின் தைரியத்தைப் பற்றி அதிகம் விவரிக்க வேண்டியதில்லை. அவர் ஓர் உண்மையான சிங்கம். சிங்கத்தின் இருதயத்தைப் பெற்றிருக்கிருர்! வாழ்க்கையில் பயமென்பது அவருக்கு இன்னதென்றே தெரியாது. அத்தகைய பயமின்மை இருந்தாலொழிய, இத்தகைய சமுதாய சீர்திருத்தக் காரியங்களில் யாரும் வேலை செய்ய முடியாது.


—முன்னுள் ஆளுநர் சர். கே. வி. ரெட்டி நாயுடு (1928)



## நியாயமான கோபாவேசம்!

நாட்டிற்குத் தொண்டு புரிவதற்காகவே தம்முடைய வாழ்க்கையைப் பயன் படுத்துவதிலுள்ள அவரது ஆர்வமும், இந்திய சமுதாயத்திலுள்ள கேடுகளை ஒழிப்பதற்காக அவைகளுக்கு எதிராய்ச் செய்து வரும் பிரசார முறைகளும், அவற்றின் மீது அவருக்குள்ள நியாயமான கோபாவேசமும், இக் காரணங்களுக்காக அவர் செய்துள்ள மகத்தான தியாகங்களும், தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தில் பெரியாருக்கு ஒரு நிரந்தரமான இடம் கிடைக்குமாறு செய்து விட்டன.

—சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் (1939)



## உயிரைக் கொடுக்கவும் தயார்!

மதிப்பு வாய்ந்த எனது நண்பர் தோழர் இராமசாமி நாயக்கர் அவர்கள் தற்காலத்திய பெரிய சமூக சீர்திருத்தக்காரராவர்..... அதற்கான அவர் பல தடவை சிறை சென்றதும் உங்களுக்குத் தெரியும். சமூக சீர் திருத்தக் கொள்கை முற்போக்கடைய, இன்னும் எத்தனைதரம் வேண்டுமாளுலும் சிறைக்குப் போகவும், மற்றும் தமது உயிரையே கொடுக்கவும் அவர் தயாராயிருக்கிருர்.

—முன்னுள் முதலமைச்சர் பனகல் அரசர் (1928)



## அப்பப்பா, செப்புந்தரமன்று!

பழமைப் பாம்பு படுத்துறங்குகிறது. பல வேளை படமெடுத்தாடுகிறது. விஷத்தைக் கக்குகிறது. பேதா பேதம் கற்பிக்கிறது. கூடி வாழும் மனித வர்க்கத்தைப் பிரித்து வைத்து, கொலைகளுக்கு ஏதுவாக நின்று, அது கண்டு மகிழ்கிறது. மதத்தின் பேரால் படு கொலைகள்!

இந்த நாகப் பாம்பைத் தலையிலடித்துக் கொல்ல வேண்டும்! சீர்திருத்த வீரர்கள் வீறு கொண்டெழுந்து, இந்நற்றொண்டைச் செய்து வருகிருர்கள். நாட்டின் முன்னேற்றத்துக்கு முதல் தொண்டு, முக்கியமான தொண்டும் கூட. இதற்கு விதை போட்டு, வீறு கொண்டுழைத்தவர் நமது பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களென்பதை, மறுக்கவோ — மறைக்கவோ எவராலும் இயலாது. இதற்காகப் பெரியார் அடைந்த இன்னல்கள், இகழ்ச்சிகள் ...... அப்பப்பா, செப்புந்தரமன்று!

—நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் (1947)





## ஒரு பொல்லாத கிழவர் !

தோழர் இராமசாமி ஒரு பொல்லாத கிழவர்; மகா பிடிவாதக்காரர். எதில் தலையிட்டாலும், பிறர் பின்தொடர முடியாத ஒரே ஓட்டந்தான்! பொது சேவையில்தான் இப்படி என்று நினைக்கிறீர்களா? அல்ல, அவர் செய்த மிளகாய் வியாபாரத்திலும், அதே ஓட்டந்தான். மது விலக்குப் போராட்டத்தில் முதல் மெடல் பெற்றவர், இந்தத் தாத்தாதான். ஒத்துழையாமைக் காலத்திலும், அவரால் நடத்தப்பட்ட ஈரோடு 'டீம்'தான் ஜெயித்தது. தீண்டாமையைத் தொலைக்க வைக்கத்தில் நடந்த பந்தயத்திலும் ஈ. வெ. ரா. வுக்குத்தான் கெலிப்பு. இன்னும் சொல்ல வேண்டுமா? ஒரு பானை சோற்றுக்கு இரண்டொரு பருக்கை மட்டும் பதம் பார்த்தால் போதும்!

—'நகர தூதன்' ஆசிரியர்
மணவை ரெ. திருமலைசாமி (1984)

## ஐரோப்பாவில் பேசப்படுபவர்!

திரு. இராமசாமி நாயக்கரைப் பற்றி, நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப் படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது !

அவரும் நானும் ஒரே இயக்கத்தில் வேலை செய்து வந்தோம். அந்த இயக்கத்தில் (காங்கிரஸ்) நேர்மையற்றவர்கள் சிலர் வந்து புகுந்தபின் நானும் அவரும் விலகி விட்டோம். பிறகு நாயக்கர் அவர்களால் ஆரம்பித்து நடத்தப் பெறும் சுயமரியாதை இயக்கத்தைப் பார்த்து, இது எல்லா இயக்கங்களிலும் நல்ல இயக்கமாக இருப்பதால், நானும் என்னாலான உதவியை அவ்வியக்கத்துக்குச் செய்து வருகிறேன். சுருங்கச் சொல்லின் நாயக்கரவர்கள் தமிழ் நாட்டின் எல்லாத் தலைவர்களையும் விடப் பெரிய தியாகி என்று தான் சொல்ல வேண்டும்.

— கப்பலோட்டிய தமிழர்
வ. உ. சிதம்பரம் (1928)

## ஐயாவுக்கு அண்ணாவின் கடிதம்!

பேரன்புடைய பெரியார் அவர்கட்கு,

வணக்கம்.

என் உடல்நிலை நல்லவிதமாக முன்னேறி வருகிறது. வலியும், அதற்குக் காரணமாக இருந்து வந்த நோய்க் குறியும் இப்போது துளியும் இல்லை. பசியின்மையும் இளைப்பும் இருக்கிறது. டாக்டர் மில்லரின் யோசனையின்படி இத்திங்கள் முழுவதும் இங்கு இருந்துவிட்டு, நவம்பர் முதல் வாரம் புறப்பட எண்ணியிருக்கிறேன். இங்கு ராணி பரிமளம், செழியன், ராஜாராம், டாக்டர் சதாசிவம் ஆகியோர் உடனிருந்து கனிவுடன் என்னைக் கவனித்துக் கொள்கிறார்கள். சென்னை மருத்துவ மனையிலும், விமான தளத்திலும் தாங்கள் கவலையுடனும், கலக்கத்துடனும் இருந்த தோற்றம் இப்போது என்முன் தோன்றியபடி இருக்கிறது. ஆகவே தான் கவலைப்பட வேண்டிய நிலை முற்றிலும் நீங்கி விட்டது என்பதனை விளக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் அன்புக்கு நன்றி. தங்கள் பிறந்த நாள் மலர் கட்டுரை ஒன்றில், 'மனச்சோர்வுடன் துறவியாகிவிடுவேனோ என்னவோ' என்று எழுதியிருந்ததைக் கண்டு மிகவும் கவலை கொண்டேன். தங்கள், பணி மகத்தான விழிப்புணர்ச்சியைச் சமூகத்தில் கொடுத்திருக்கிறது. புதியதோர் பாதை மக்களுக்கு கிடைத்திருக்கிறது. நான் அறிந்தவரையில் இத்தனை மகத்தான வெற்றி வேறு எந்த சமூக சீர்திருத்தவாதிக்கும் கிடைத்ததில்லை; அதுவும் நமது நாட்டில், ஆகவே, சலிப்போ, கவலையோ துளியும் தாங்கள் கொள்ளத் தேவையில்லை. என் வணக்கத்தினை திருமதி மணி அம்மையார் அவர்களுக்குத் தெரிவிக்கவும். அன்பு வணக்கங்கள்.

நியூயார்க், தங்கள் அன்புள்ள
10—10—68 அண்ணாதுரை



## அய்யா தானே!

**கவிஞர் கா. வேழவேந்தன்**

என் அறையில் மாட்டிவைத்த பெரியார் தோற்ற
எழிற்படத்தை நான்கூர்ந்து பார்த்திருந்தேன்!
''என்னப்பா புதிதாகப் பார்க்கின் றீர்கள்?
எதில் உங்கள் சிந்தனையோ'' என்றே கேட்டு
புன்னகையோ டென்மைந்தன் எதிரே வந்தான்.
''போர்ச் சிங்கம் ஈரோட்டுத் தலைவர் மீண்டும்
இன்னுமொரு முறை இங்கே வரக்கூடாதா?
எனஏங்கி நிற்கின்றேன்'' என்றேன் நானும்!

ஏழ்வயது மகன் அவனோ ''ஏன், ஏன்?'' என்றான்.
எதற்கென்பேன் ? ஒன்றிரண்டா ஐயா தொண்டு?
தாழ்ந்துவிட்ட தமிழரினம் தலைநிமிர்த்திச்
சரித்திரத்தை மீட்பதற்கு முயன்றோர் யார், யார்?
வீழ்த்திவிட்ட நரிப்பகையின் விலாநொறுக்கி
வீறுகொண்டு எழுந்தவர்யார் அவரே யன்றோ?
பாழ்ச்சாதி மடமைப் பேய் மீண்டு மிங்கே
படிதாண்டி வரும்போது நினைக்கின் றேன் நான்!

சிந்தனையே மூலதனம் என்றார்! வாழ்வின்
செல்வமெலாம் பகுத்தறிவே என்றார்! வீட்டில்
வெந்ததனைத் தின்றுவிட்டு பஞ்சாங்கத்தை
வீணாகப் புரட்டியிங்கே பாழாய்ப் போன
செந்தமிழர் நிலைமாற்றப் பாடுபட்டார்!
சிவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு
எந்திரம்போல் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளும்
இழிநிலையின் கொடுமைதனை இடித்துச் சொன்னார்.

'புத்' என்னும் நரகத்தைத் தவிர்ப்ப தற்கு
புத்திரர்கள் தேவையென்று சொல்லிக் கொண்டு
பத்தென்றும் பதினைந்தே என்றும் வீட்டில்
பள்ளிகளை உருவாக்கல் சரியா? என்றார்!
கொத்து கொத்தாய்ச் சோலையிலே கனி தொங்கட்டும்!
குடும்பத்தில் குசேலரினம் பெருகி டாமல்
சொத்தாக ஒன்றிரண்டு போதுமென்று
சுயமரகச் சொன்னவரும் ஐயா தானே!

'அவன்' தந்தான் பலபிள்ளை என்றே சொல்லும்
அடி மடையன்தனைத் தட்டி எழுப்பி விட்டு,
'அவன்' தருவான் எனச் சொன்னால் நீயும் சென்று
அன்றாடம் திண்ணையிலே தனியாய்த் தூங்கு!
'அவன்' தந்தால் பார்த்திடுவோம்! என்றே சொன்னார்!
'அளவற்ற உன்மக்கள் பிச்சை கேட்டால்
'அவன்' வந்தா ஊட்டுகிறான்?' என்றே கேட்டு
அறிவியக்கம் பரப்பியவர் ஐயாதானே!

ஆலமரம், அரசமரம் சுற்றி வந்தே
அடிவயிற்றைத் தொடுகின்ற பேதைப் பெண்ணும்
காலத்தால் கருவாகி, ஈசலைப்போல்
கணக்கின்றிப் பெற்றுவிட்டால், அவளைப் பார்த்து
ஆலமரம், அரசமரம் தடுப்பதுண்டா?
அறிவுள்ள மருத்துவரே தடுப்பார் என்று
காலமெலாம் ஓயாமல் சொல்லிச் சொல்லி
கண்திறக்க வைத்தவரே ஐயாதானே!



# மதுவிலக்குப் பிரச்சாரத்தைவிட குடும்பநலப் பிரச்சாரம் முக்கியமானது!

## பெரியார்

கர்ப்பத்தடை என்பது பற்றிச் சில வருஷங்களுக்கு முன் நாம் கூறியது அநேகருக்குத் திடுக்கிடும்படியான செய்தியாயிருந்தது, ஆனால், இப்போது சிறிது காலமாய் அது எங்கும் பிரஸ்தாபிக்கப்படும் ஒரு சாதாரணச் செய்தியாய் விட்டது. வரவர அது செல்வாக்குப் பெற்றும் வருகின்றது. பெரிய உத்தியோகத்தில் இருந்த சர். பி. சிவசாமி அய்யரும், பெரிய உத்தியோகத்தில் இப்போதும் இருக்கும் ஜஸ்டிஸ் ராமேசம் அவர்களும் மற்றும் பலரும் இதுவிஷயமாக அடிக்கடி பேசி வருகின்றதையும், எழுதி வருகின்றதையும் பத்திரிகையில் பார்த்து வருகின்றோம். சென்னை சட்டசபையிலும் கர்ப்பத்தடை விஷயமாய்ப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று பிரஸ்தாபிக்கப்பட்டதையும் நேயர்கள் கவனித்து இருக்கலாம்.

ஆனால், கர்ப்பத்தடையின் அவசியத்தைப்பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்றவர்கள் கருதும் காரணங்களுக்கும் அடிப்படையான வித்தியாசமிருக்கின்றது. அதாவது, பெண்கள் விடுதலையடையவும், சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம். மற்றவர்கள், பெண்கள் உடல்நலத்தை உத்தேசித்தும், பிள்ளைகளின் தாட்டிகத்தை உத்தேசித்தும், நாட்டின் பொருளாதார நிலையை உத்தேசித்தும், குடும்ப சொத்துக்கு அதிகப் பங்கு ஏற்பட்டுக் குறைந்தும், குலைந்தும் போகாமல் இருக்க வேண்டுமென்பதை உத்தேசித்தும், கர்ப்பத்தடை அவசியமென்று கருதுகிறார்கள். இதை மேல்நாட்டில் பலர் கூட ஆதரிக்கின்றார்கள். ஆனால், நமது கருத்தோ இவைகளைப்பிரதானமாய்க் கருதியதன்று. மற்றதைக் கருதியதென்றால், முன் சொன்னதுபோல, பொதுவாகப் பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாயிருப்பதால், சாதாரணமாய்ப் பெண்கள், பிள்ளைகளைப் பெறுவது என்பதையே அடியோடு நிறுத்திவிட வேண்டும் என்கிறோம். அது மாத்திரமல்லாமல், பல பிள்ளைகளைப் பெறுகின்ற காரணத்தால் ஆண்களும் கூட சுயேச்சையுடனும், வீரத்துடனும், விடுதலையுடனும் இருக்க முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். இதன் உண்மை, சாதாரணமாய் ஒவ்வொரு மனிதனும், மனுஷியும் தங்கள் தங்கள் சுதந்திரங்களுக்குக் கஷ்டம் வருகின்ற காலத்தில் பேசிக் கொள்வதைப் பார்த்தாலே தெரியும்.

ஒரு மனிதன், தான் கஷ்ட நிலையில் பேசும் போது "நான் தனியாய் இருந்தால் ஒரு கை பார்த்து விடுவேன். 4, 5 குழந்தையும் குட்டியும் ஏற்பட்டு விட்டதால், இவைகளைக் காப்பாற்ற வேண்டுமே என்கின்ற கவலையால் பிறர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும் நிலைக்கு ஆளாயிருக்க நேர்ந்திருக்கின்றது" என்றே சொல்லுகின்றான். அதுபோலவே, ஒரு ஸ்திரீ, புருஷனாலோ அல்லது வேறு எதனாலோ சங்கடம் ஏற்படும் போது, "நான் தனியாய் இருந்தால் எங்காகிலும் தலையின் மேல் துணியைப் போட்டுக் கொண்டு போய் விடுவேன்; அல்லது ஒரு ஆற்றிலாவது, குளத்திலாவது இறங்கி விடுவேன் ; இந்தக் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு அரை நிமிஷமும் இருக்க மாட்டேன். ஆனால் இந்தக் குழந்தைகளையும், குஞ்சுகளையும் நான் எப்படி விட்டு விட்டுப் போக முடியும்?" என்றே சொல்லுகின்றாள். ஆகவே, இந்த இருவர்களுக்கும் அவர்களது சுயேச்சையையும், விடுதலையையும் கெடுப்பது இந்தக் குழந்தைகள், குஞ்சுகள் என்பவைகளேயாகும்.


உலகத்தில் மக்கள் தங்கள் உடலாலும் அறிவாலும் கஷ்டப்பட்டுத் தம் தம்ஜீவனத்திற்குப் பொருள் தேடுவதற்கே சுதந்திரத்தை விற்று, சுயமரியாதையைப் பலி கொடுத்து அடிமைகளாக வேண்டிய நிலையில் இருக்கும் போது, பிள்ளைகளையும் குட்டிகளையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் தலைமேல் இருக்குமானால், அந்த இடத்தில் எப்படிச் சுயேச்சை இருக்கமுடியும்? ஆகையால் இன்றைய நம் உலகில் ஆண், பெண் இருவர்களினுடையவும் சுயேச்சைக்கே கர்ப்பமாவதும், பிள்ளைகளைப் பெறுவதும் இடையூறான காரியமாகிறது. அதிலும் பெண்கள் சுயேச்சைக்குக் கர்ப்பம் என்பது கொடிய விரோதமாயிருக்கின்றது. பெண்களும் சொத்தும், வருவாயும், தொழிலும், இல்லாததால், குழந்தைகளை வளர்க்க மற்றவர்கள் ஆதரவை எதிர்பார்த்தே தீரவேண்டியிருக்கின்றது. அதனால் தான் நாம், கண்டிப்பாய்ப்பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்தியே ஆகவேண்டும் என்கின்றோம். அன்றியும், பெண்கள் வியாதியஸ்தர்கள் ஆவதற்கும், சீக்கிரம் கிழப்பருவம் அடைவதற்கும், ஆயுள் குறைவதற்கும், அகால மரணமடைவதற்கும் கர்ப்பம் என்பதே மூல காரணமாயிருக்கின்றது. தவிரவும் ஆண்களில் பிரம்மச்சாரிகளும், சன்யாசிகளும், சங்கராச்சாரியார்களும், தம்பிரான்களும், பண்டார சன்னதிகளும் ஏற்பட்டிருப்பதுபோல், பெண்களில் பிரம்மச்சாரிகளும், சங்கராச்சாரி முதலியவர்களும் ஏற்படுவதற்கும், சுதந்திரத்தோடு வாழவும். பலகோடி ரூபாய்க்கு அதிபதியாகவும், பல ஆண்களும் பெண்களும் போற்றிப் புகழ்ந்து வணங்கும்படியான ஸ்தானத்தைக் கைப்பற்றவும் இந்தக் கர்ப்பமே தடையாயிருந்து வருகின்றது. இந்நிலையில் தான் பெண்கள் விடுதலைக்கும், சுயேச்சைக்கும், முன்னேற்றத்திற்கும் அவர்கள் பிள்ளை பெறுவது என்பதை நிறுத்த வேண்டும் என்று நாம் சொல்லுகின்றோம். இந்தப்படி நம்மில் ஒருவருக்கொருவர் கர்ப்பத்தடை விஷயமாய்க் கருதும் காரணம் எப்படி இருந்த போதிலும் நமக்கும் மற்றைய கர்ப்பத்தடைக்காரருக்கும் கர்ப்பத்தடை அவசியம் என்பதில் அபிப்பிராய பேதமில்லாதிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆனால், இந்த முக்கிய காரணங்களில் கொஞ்ச காலத்திற்கு முன் சட்டசபையில் அரசாங்கத்தினர் சார்பாய்ச் சுகாதார மந்திரி கர்ப்பத்தடை பிரச்சாரத்தை எதிர்த்ததும், பெண்கள் சார்பாய்ச் சட்டசபைக்குச் சென்ற டாக்டர் முத்துலட்சுமி அம்மாளும், அவருக்கு அனுசரணையாய் இருந்ததும் நமக்கு மிக்க ஏமாற்றத்தையே கொடுத்து விட்டன. இந்த தேசத்தில் பிறக்கும் குழந்தைகளையெல்லாம் இந்த அரசாங்கமே வளர்த்து அவர்களுக்குக் கல்வி கொடுத்து, மேஜர் ஆக்கிவிட வேண்டும் என்கின்ற ஒரு நிபந்தனை இருந்திருக்குமேயானால், சுகாதார மந்திரி அரசாங்கத்தின் சார்பாய்க் கர்ப்பத்தடையை எதிர்த்திருக்கமாட்டார். அப்படியில்லாமல் யாரோ பெற்று, யாரோ சுயமரியாதை இழந்து, யாரோ அடிமையாய் இருந்து வளர்த்து மக்களைப் பெருக்கி விடுவதானால், சர்க்கார் அதை எப்படி வேண்டாம் என்று சொல்ல முன் வருவார்கள்? உண்மையான சுகாதாரத்தில் பிள்ளைப் பேற்றைத் தடுப்பது முக்கியமான சுகாதாரம் என்று சுகாதார மந்திரிக்கும், பெண்மணியாய் இருந்தும் டாக்டா பட்டம் பெற்ற முத்துலட்சுமி அம்மாளுக்கும் தெரியாமல் போனது வருந்தத்தக்க காரியமேயாகும். இந்த விஷயத்தில் அரசாங்கத்தார் விபரீதமான அபிப்பிராயப்பட்டாலும் கூட, பொது ஜனங்கள் அதை லட்சியம் செய்யாமல் ஒவ்வொருவரும் இதைக் கவனித்து, அவரவர்களே தக்கது செய்து கொள்ள வேண்டியது மிக்க அவசியமான காரியமாகும். மது விலக்குப் பிரச்சாரத்தைவிட தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரச்சாரத்தை விட, இந்தக் கர்ப்பத்தடை பிரச்சாரம் மிகவும்முக்கியமானதென்பதே நமது அபிப்பிராயம்.

ஆதலால், இந்தக் கர்ப்பத்தடைக்கு நமது நாட்டில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி, அதன்மூலம் துண்டுப் பிரசுரங்களும் பத்திரிகைகளும், புத்தகங்களும் வெளியிடுவதுடன், கர்ப்பத்தடை சம்பந்தமாய் ஆங்கிலத்திலும், பிற பாஷைகளிலுமுள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதுடன், கர்ப்பத்தடை யால்—நாடும், நம் பெண்களும், நலத்தையும் சுதந்திரத்தையும் பெறுவதான நாடகம், சினிமா முதலியவைகள் மூலமாய்ப் பிரச்சாரம் செய்ய பொது ஜனங்களில் சிலராவது இது சமயம் முன்வர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.











## தேசத் தொண்டிற்காக வாழ்வை அர்ப்பணித்தவர்!

''ஸ்ரீமான் நாயக்கர் செல்வமெனும் களியாட்டில் அயர்ந்தவர். உண்டாட்டில் திளைத்தவர். வெய்யில் படாது வாழ்ந்தவர். ஈரோட்டு வேந்தரென விளங்கியவர். ஸ்ரீமான் நாயக்கர் தமது செல்வம் முதலிய மாயைகளை மறந்து, வறியார் போல எளிய உடை தரித்து, எளிய உணவு உண்டு, இரவு பகல் ஓயாது தேசத் தொண்டிற்கே தமது வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளதை எவரே அறியார்?''

—தமிழ்த் தென்றல் திரு. வி. க. 24-5-1924-ல் பெரியார் அவர்கள் சிறைப்பட்டபோது நவசக்தியில் எழுதியது.


## பிளேக் நோயும் பெரியார் தொண்டும்!

ஒரு சமயம் ஈரோட்டில் 'ப்ளேக்' நோய் வந்து விட்டது. அதனால் மக்கள் பலர் மடிந்தனர். மற்றவர்கள் அஞ்சி ஊரை விட்டு ஓடி விட்டனர். செல்வர்கள் அனைவரும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு எல்லோருக்கும் முந்தி ஓடி விட்டனர். போக்கிடமில்லாத ஏழை மக்களே ஊரில் தங்கி உள்ளம் நடுங்கியிருந்தனர். அச்சமயம் ஈ.வெ.ரா. ஊரை விட்டு வெளியே போகாமல், தமது தோழர்களுடன், சிறிதும் அஞ்சாமல் ஊரிலிருந்து அவ்வேழை மக்களுக்கு உதவி செய்து வந்தார். இச்சமயத்தில் அவர் நடந்து கொண்ட தைரியத்தை இன்றும் பலர் புகழ்வர். அநேக பிணங்களைத் தாமே தூக்கிக் கொண்டு போவார். இந்நிகழ்ச்சியால் அவர் பலராலும் போற்றப்பட்டார்.



## பிள்ளை இல்லாதவர் சுவீகாரம் எடுக்கலாம்!

''ஈ.வெ.ரா. வின் தந்தையாருக்கு சிற்றன்னை ஒருவர் இருந்தார். அவர் விதவை. பிள்ளையில்லாதவர். அதிகச் செல்வமுடையவரும் அல்லர். ஆயினும் தனக்கோர் பிள்ளை வேண்டும் என்ற ஆவல் அந்த அம்மாளுக்கு இருந்தது. ஆதலால் இராமனைத் தத்துப்பிள்ளையாகக் கொடுத்தும் விடும்படி வேண்டினார். பெரியாரின் தந்தை வெங்கட்டப்ப நாயக்கர் இதற்கு இசைந்தார். இராமசாமியைத் தத்துப் பிள்ளையாகக் கொடுக்க எண்ணினார். ஆனால் அவரது அன்னை சின்னத் தாயார் அம்மாள் இதற்கு இசையவில்லை. என்றாலும் இராமசாமி குழந்தைப் பருவம் முதலே அந்தப் பாட்டியின் வீட்டிலேயே தாய்ப்பால் அருந்தாமல் ஆட்டுப்பால் குடித்துச் சுவீகாரப் பிள்ளையாக வளர்ந்து வந்தார்.





## புதிய பழக்கத்தைப் புகுத்தியவர் பெரியார்!

பெண்களை பொதுக்கூட்டங்களுக்கு அழைத்து வருவது, மாநாடுகளுக்கு அழைத்து வருவது என்ற வழக்கத்தைத் தமிழ் நாட்டில் புகுத்தியவர் ஈ.வெ.ரா. அவர்களேயாவார்.

—சாமி சிதம்பரனூர்

# பெரியார் தீங்கனித் திரட்டு!

## பிள்ளை வளர்ப்பு

நான் சில படித்த பெண்களைப் பார்க்கிறேன். வயிற்றில் ஒரு குழந்தை, கட்கத்தில் ஒரு குழந்தை, இவ்வளவோடு சிலருக்கு முன்னால் ஓடும்படியான ஒரு குழந்தையை விட்டு விட்டு இப்படியாக படைகளோடு நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் கூட்டங்களுக்கு வந்து, நடுவிலிருந்து கொண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையூறும், தொல்லையும் கொடுப்பதைப் பார்க்கிறேன். இதற்காக அவர்கள் வெட்கப்படாததையும், சிலர் வருத்தப் படுவதையும் பார்க்கிறேன். இது மனித சமூகத்தில் இருக்கத்தக்கதா? அதுவும் நாகரீக சமூகத்தில், படித்த பெண்கள், படித்தவர்கள் வீட்டுப் பெண்கள் என்கிறவர்களிடையில் இருக்கத்தக்கதா என்று கேட்கிறேன். இந்த லட்சணத்தில் நகைகள், விலையுயர்ந்த துணிகள் அணிந்த குழந்தைகள் கூட்டத்தில் மலஜலம் கழிக்கும், கத்தும். ஆபாசம்! இவை ஏன்?

நகைக்கும் துணிக்கும் போடும் பணத்தை பாங்கியில் போட்டு குறைந்த வட்டியாவது வாங்கி— குழந்தை பிறந்தவுடன் அதை எடுக்க அந்த வட்டியில் ஒரு ஆள் வைத்தாவது அதைப் பார்த்துக் கொள்ளச் செய்தால் அன்பு குறைந்து விடுமா? பெற்றத் தகப்பன் குழந்தையைத் தன்னுடன் கூடவே வைத்துத்தானா அழகு பார்க்கிறான்? அன்பு காட்டுகிறான்? கொஞ்சி விளையாடுகிறான்? ஆகையால் குழந்தையை ஆண்கள் மூலம் வளர்க்க வேண்டும். சமையல் ஆண்கள் மூலம் செய்விக்க வேண்டும். பெண்கள் ஆண்களைப்போல் உயர் வேலைகள் பார்க்க வேண்டும். சர். ராமசாமி முதலியார் தங்கை சர். ஏ. லட்சுமணசாமி முதலியார் போல் ஆக வேண்டும். சர். சண்முகம் தங்கை ஆர். கே. வெங்கடாசலம் செட்டியார் போல் ஆகவேண்டும். குமார ராஜா தங்கை ராமநாதன் செட்டியார் போல், சிதம்பரம் செட்டியார் போல் ஆக வேண்டும். பொம்மைகளாக, நகை மாட்டும் ஸ்டாண்டுகளாக ஆகக் கூடாது என்கிறேன்.

ஆண்கள் பார்க்கும் எல்லா வேலைகளையும் ஆண்கள் செய்யும் எல்லாத் தொண்டுகளையும் பெண்கள் பார்க்கச் செய்யமுடியும்; உறுதியாய் முடியும் என்பேன். ஆனால் நகைப் பைத்தியம் துணி அலங்காரப் பைத்தியம் அணிந்து கொண்டு, சாயல் நடை நடக்கும் அடிமை இழிவு, சுயமரியாதையற்ற தன்மை பைத்தியம் ஒழிய வேண்டும்.



திருச்சியில் அய்யாவின் எடைக்கு எடை பெட்ரோல் கொடுத்த விழா.

பெற்றோர்கள் பெண்களைப் பெண் என்றே அழைக்காமல், ஆண் என்றே அழைக்க வேண்டும். பெயர்களும் ஆண்கள் பெயர்களையே இட வேண்டும். உடைகளும் ஆண்களைப் போல் கட்டுவித்தல் வேண்டும். சுலபத்தில் இது ஆணா, பெண்ணா என்று மற்றவர்கள் கண்டுபிடிக்க முடியாத மாதிரியில் தயாரிக்க வேண்டும். பெண்களை புருஷனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும், கீர்த்தி புகழ்பெறும் பெண்மணியாக்கவும் வேண்டும். பெண்ணும் தன்னைப் பெண்ணினம் என்று கருத இடமும் எண்ணமும் உண்டாக்கும்படியாக நடக்கவே கூடாது. ஒவ்வொரு பெண்ணுக்கும், நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? உயர்வு தாழ்வு? என்ற எண்ணம் எழ வேண்டும். ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், நம் பெண்கள் வெறும் போகப் பொருள்களாக ஆக்கப்படக் கூடாது; அவர்கள் புது உலகம் சித்தரிக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து.

## பெண்கள் படிப்பு

பெண்கள் படிப்பு என்பது சுத்த முட்டாள்தனமான முயற்சியாகவே பெரிதும் இருக்கிறது.

''பெண்களைப் படிக்கவைப்பது வீண் பணச்செலவு, நாட்டு வரிப்பணத்தின் வீண்'' என்று ஒரு சமயத்தில் ஈரோட்டில் மணியம்மை சொன்னது போல் உண்மையில் பெரிதும் வீணாகவே ஆகிறது. கோபிக்காதீர்கள். இதை கீழ்வரும் உதாரணத்தைக்கொண்டு ஒப்பிட்டுப் பாருங்கள். அதாவது ஒரு குடும்ப வாழ்க்கைப் பெண்ணுக்கு

பெரியார் எடைக்கு எடை 'பிஸ்கட்' தரும் காட்சி.



அவள் தாய்—தகப்பன், பாட்டு, பிடில் வீணை, நாட்டியம் கற்றுக் கொடுத்து இற்றில் வெற்றியாய் தேற வைத்தனர் என்று வைத்துக் கொள்ளுங்கள் (பலர் இன்னும் செய்கிறார்கள்). அதை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்த பின்பு, அதாவது திருமணம் ஆன பின்பு அந்த பாட்டு, பிடில், வீணை யாருக்கு என்ன பயன் கொடுக்கிறது என்று கேட்கிறேன். புகுந்த வீட்டில் சங்கீதம் பாடினால் ''இது என்ன குடித்தன வீடா?'' என்று மாமியார் கேட்பார்கள். வீணை, பிடில் தூசி அடையும்.

ஆகவே, இந்தப் படிப்பு நல்ல மாப்பிள்ளை சம்பாதிக்க ஓர் அட்வர்டைஸ்மெண்டாக (விளம்பரமாக)ப் பயன்பட்டதே தவிர மற்றபடி வீணாகப் போய் விட்டதல்லவா? செலவும் தண்டம் தானே என்கிறேன். அது போல்ஒரு பெண்ணை தாய்—தகப்பன் பி.ஏ. படிக்க வைத்து ஒருவன் கையில்பிடித்துக் கொடுத்து, அந்த பெண் சமையல் செய்யவும் குழந்தை வளர்க்கவும், நகை, துணி அலங்காரங்களுடன் மக்கள் கவனத்தை ஈர்க்கவும் செய்தால், பி.ஏ. படிக்க வைத்த பணம் வீண் என்பதோடு அதற்காக சர்க்கார் செலவழித்த மக்கள் பணமும் வீண் தானே? இது தேசிய குற்றமாகாதா?



ராஜாஜி அவர்களுடன் .....

இந்தத் துறையில் எந்த அறிஞர்களும், சீர்திருத்தவாதியும் கவலை செலுத்தாமல் எவராலும் இனப் பெருக்கத்திற்கே பெண்கள் ஆளாக்கப்பட்டுவிட்டார்கள்.

## பொது சுபாவம்

இரு ஆண்கள் சேர்ந்தோ, இரு பெண்களே சேர்ந்தோ ஒருபோதும் கூட்டுறவு வாழ்க்கை — குடும்ப வாழ்க்கை நடத்த முடியாது. இயற்கையும் அதற்கு இடம் கொடாது.

இயற்கையாக ஒரு ஆணும் பெண்ணும் சேர்வது ஜீவ சுபாவத்தை ஒட்டியதுதான். எந்த ஜீவனும் தன் இனப் பெருக்கத்துக்காக ஆணும் பெண்ணுமாக, இயற்கையால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அவை ஒன்றோடொன்று ஒட்டித்தான் தீரும். உயிருள்ள பிராணிகள் மட்டுமல்ல, தாவரங்கள் கூடத்தான் ஒன்றுக்கொன்று ஒட்டி தம் இனத்தை, தம் வர்க்கத்தை விருத்தி செய்து வருகின்றன. விதையிலிருந்து முளை முளைக்கிறது, இலை விடுகிறது, செடியாகிறது, தழைக்கிறது, பூக்கிறது, பிஞ்சு விடுகிறது, காயாகிறது, கனியாகிறது, மறுபடி செடியாகிறது. இப்படியாக இச்செடி தன் இனத்தைப் பெருக்கி வருகிறது. உலகில் காணப்படும் சகல உயிருள்ள, உயிரல்லாத தாவர வர்க்கத்துக்கும் பொது சுபாவம் இனப் பெருக்கம் தான்.

## உயர்வு தாழ்வு இல்லை

பொதுவாக இல்வாழ்க்கை என்பது தனிப்பட்ட ஒரு ஆணுக்கோ ஒரு பெண்ணுக்கோ மட்டும்சொந்தமில்லை. ஒரு ஆண் ஒரு பெண் இருவருக்கும் சொந்தமானது. குழந்தையும் அப்படித்தான். பெற்றக் குழந்தையானது ஒரு ஆணுக்கு மட்டுமோ அல்லது ஒரு பெண்ணுக்குமட்டுமோ சொந்தம் கிடையாது. இந்த இருவரில் யாராவது ஒருவர் இல்லையேல் குழந்தையும் இல்லை. எனவே இருவரும் குழந்தை மீது உரிமைப் பாராட்டத்தக்கவர்கள். அப்படி இருக்க இவர்கள் இருவரில் ஒருவர் உயர்வு மற்றவர் தாழ்வு என்று கூறுவதற்கில்லை. இல்வாழ்வில் ஆணுக்கு பெண் துணை, பெண்ணுக்கு ஆண் துணை. துணை என்றால் நட்பு—உதவி—சமபங்கு என்பதைத்தான் கூறலாம்.

## சமுதாயத்திற்கு நட்டமா? இல்லையா?

நம் பெண்கள் உலகம்பெரிதும் மாற்றமடைய வேண்டும். நம் பெண்களைப் போல் பூமிக்குப் பாரமானவர்கள், மனிதனுக்குத் தொல்லையானவர்கள், நல்ல நாகரீகமான வேறு நாடுகளில் கிடையாது. இங்கு படித்த பெண், படியாத பெண் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் பெற்றோர்களும் கணவன்மார்களும் அவர்களது(பெண்ணை) அழகிய பொம்மைத் தன்மையைக் கொண்டே திருப்தி அடைகிறார்கள் — பெருமையடைகிறார்கள். பெண்களைத் திருப்தி செய்ய, அவர்களை நல்ல பெண்களாக ஆக்க விலையுயர்ந்தநகையும் துணியும் கொடுத்து அழகிய சிங்காரப்பதுமையாக்கி விட்டால் போதும் என்று நினைக்கிறார்கள்.

பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்களுடன் .....



பெண் பெருமை, வருணனை ஆகியவைகளில், பெண்கள் அங்கம், அவயவங்கள், சாயல் ஆகியவைகளைப் பற்றி ஐம்பது வரி இருந்தால், அவர்களது அறிவு அவர்களால் ஏற்படும் பயன், சக்தி, திறமை பற்றி ஒரு ஐந்து வரி கூட இருக்காது. பெண்களின் உருவை அலங்கரிப்பது, அழகை மெச்சுவது, சாயலைப் புகழுவது ஆகியவை பெண்கள் சமுதாயத்திற்கு அவமானம், இழிவு, அடிமைத்தனம் என்பதை ஆயிரத்தில் ஒரு பெண்ணாவது உணர்ந்திருக்கிறார் என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.



இலங்கை தமிழர் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களுடன்

'பெண்களுக்கு தகப்பன் சொத்தில் உரிமை கிடையாதது ஏன்' என்று எந்தப் பெண்ணாவது காரணம் கேட்டாளா? 'பெண்களை அனுபவிக்கிறவன், வேலை வாங்கிப் பயனடைகிறவன் காப்பாற்றமாட்டானா' என்பதுதான். அதற்கு ஏற்ற நகை அணி ஆகியவையே போதும்.

அலங்காரம் ஏன்? மக்கள் கவனத்தை ஈர்க்கும்படியான நகை, துணிமணி, ஆபரணம் ஏன்? என்று எந்தப் பெண்ணாவது,பெற்றோராவது, ''கட்டினவனாவது'' சிந்திக்கிறார்களா? பெண்கள் அஃறிணைப் பொருள்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? தன்னை அலங்கரித்துக்கொண்டு மற்ற மக்கள் கவனத்தை தன் மீது திருப்புவது இழிவு என்றும், அநாகரீகம் என்றும் யாருக்கும் தோன்றாததற்கும் காரணம் அவர்கள் போகப் பொருள் என்ற கருத்தேயாகும். இது பரிதாபமாகவேயிருக்கிறது.

நல்ல கற்புடைய பெண்களுக்கு உதாரணம் ''மற்றொருவர் உள்ளம் புகாள்'' என்பது திராவிட மரபு நூல்களின் கூற்று. அதாவது ஒரு பெண் இயற்கையில் கற்புடையவளாக இருந்தால் தன் கணவன் தவிர மற்றவர்கள் நினைவிற்குகூட ஆளாக மாட்டாள், ''பிறர் நெஞ்சு புகாள்'' என்பதாகும். நாம் நம் பெண்களை மற்றவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் பல தடவை திரும்பித்திரும்பிப் பார்க்கும்படி, அவர்கள் கவனத்தை நம் மீது திருப்பும்படி அலங்கரிக்கிறோம், அலங்கரிக்க அனுமதிக்கிறோம். அதில் நமதுபணம், உழைப்பு, நம் வாழ்க்கைப் பயன் முதலியவைகளை செலவழிக்கிறோம். இது ஏன், எதற்காக என்றுசிந்திக்காததால் அதைத் தவிர வேறு காரியத்திற்கு நம் பெண்கள் பயன்படாமல் போய் விட்டார்கள்.

நான் பாமர மக்களை மாத்திரம் சொல்லவில்லை; நம் அறிஞர்,செல்வர் தனக்கென வாழாப் பிறர்க்குரியரானவர்கள் என்று சொல்லப்படும் பெரியோர்கள் யோக்கியதைகளையும் அவர்கள் பெண்கள் உலகத்துக்கு ஆற்றும் தொண்டுகளைப் பற்றியுமே சொல்லுகிறேன். சர். சண்முகம், சர்.குமாரராஜா முதலாகிய திராவிடப் பேரறிஞர் செல்வர்களின் மனைவிகள், தங்கை, தமக்கைகள், பெண்கள் எங்கே? எப்படிப் பிறந்தார்கள்? எப்படி வளர்ந்தார்கள்? எப்படி தகுதியாக்கினார்கள்? எப்படி இருக்கிறார்கள்? ஷாப்பு கடைகள், ஜவுளிக் கடைகள் ஆகியவற்றிற்கு விளம்பரத்திற்கு வைத்திருக்கும் அழகிய பொம்மைகள், உருவங்கள் போல் அல்லாமல் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, பெண்கள் உலகத்துக்கு இவர்கள் என்ன மாதிரியில் தொண்டாற்ற அல்லது தாங்களாவது ஒரு புகழோ கீர்த்தியோ பெறத்தக்கபடி வைத்தார்களா? என்றுகேட்கிறேன். இவர்களே இப்படி இருந்தால் மற்ற பாமர மக்கள் தங்கப் பெட்டியினுள்ளே வெல்வெட் மெத்தைப் போட்டு பூட்டித்தானே வைப்பார்கள்.

ஒரு பீகம் அமீருதீன் அம்மையார் முஸ்லீம் கோஷா இனம், அவர்கள் எவ்வளவு தொண்டாற்றுகிறார்கள்! நம் பெண்கள் மாத்திரம் நகைகள் மாட்டும் ஸ்டாண்டா என்று கேட்கிறேன். இந்த பிரபல ஆண்கள் பிறந்த வயிற்றில்தான் இவர்கள் தங்கை, தமக்கையர் பிறந்தார்கள். இவர்கள் தகப்பன்மார்கள்தான் அவர்களுக்கும் தகப்பன்மார்கள். அப்படி இருக்க இவர்களுக்கு இருக்கும் புத்தி திறமை அவர்களுக்கு ஏன் இல்லாமல் போகும்? இதை பயன்படுத்தாதது நாட்டுக்கு—சமுதாயத்திற்கு நட்டமா? இல்லையா? என்று கேட்கிறேன்.

## கல்யாணம் பற்றிக் கேட்பது காட்டு மிராண்டித்தனம்!

பெண்களைப் படிக்க வைப்பதுடன் நன்றாக அறிவு உள்ளவர்களாக்க வேண்டும். மேல் நாட்டில் ஒரு வெள்ளைக்காரனை, 'உன் பிள்ளைக்கு எப்போது கல்யாணம்? உன் பெண்ணுக்கு எப்போது கல்யாணம்?' என்றால், 'நீ என்ன காட்டுமிராண்டியாக இருக்கிறாய்?' என்பான். பிள்ளை என்றால் அவன் கல்யாணம் எப்போது என்று அவனுக்குத் தெரியும். அவரவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். தனக்கு ஒழுக்கமான, குணமுள்ள ஒருவனைப் பார்த்து பெண்ணே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான அறிவு பெறஅவர்களைப் படிக்க வைத்து அறிவுள்ளவர்களாக்க வேண்டும். ●

தொழில் மேதை திரு. ஜி. டி. நாயுடு அவர்களுடன் .....



# அண்ணாவின் இதயக் குரல்!

## குருவும் சீடனும்!

நாம் மனித இயற்கையின்பாற்பட்டு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து கொண்டிருக்கிறோம். நான் பெரியாருடன் இருந்தபோது, பல ஆண்டுகளுக்கு முன் அரித்துவாரத்திற்குப் பெரியாருடன் நானும் சென்றேன். கங்கைநதி தீரத்தில் அவர் கம்பீரமாக நடந்து செல்கையில் வீசிய தென்றல் பெரியாரின் வெண்தாடியைத் தழுவி அசைத்து, அவர் மேல் போட்டிருந்த மஞ்சள் சால்வையையும் அசைத்துச் சென்றது. எனக்கு அவர் கம்பிளிக்கோட்டு வாங்கிக்கொடுக்காத காரணத்தால் நான் குளிரால் கைகளைக் கட்டிக்கொண்டு அவர் பின் சென்றேன். அது குருவுக்குப்பின் சீடன் மிகுந்த பயபக்தியுடன் செல்வது போல் இருந்தது. பெரியாரைக் கண்டதும் மக்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்திருக்கும் பெரிய சாமியார் என்று அவரையும், அவருக்குப்பின் கை கட்டிச் சென்ற என்னை அந்த சாமியாரின் (பெரியாரின்) சீடன் என்றும் கருதி, வழி நெடுக எங்கள் காலில் விழுந்தனர். பெரியார் என்னைப் பார்த்து 'நம் நாட்டு மக்கள் யாரையெல்லாம் சாமியாராக்குகிறார்கள் பார்' என்று சொன்னார்கள்.

## வாழ்க்கை முழுவதும் போராட்டக் களத்தில் நின்றிருக்கிறார்!

எந்த் நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை இருபதே ஆண்டுகளில் அவர்கள் செய்துமுடித்திருக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்தை எடுத்துக்கொண்டால், நாட்டினுடைய விழிப்பிற்கு 50 ஆண்டுகள் அமைந்த ஆட்சியை மாற்றுவதற்கு 50 ஆண்டுகள் என்ற அளவில் ஒரு பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக ஒரு வால்டேர், ரூஸோ இப்படித் தொடர்ச்சியாகப் பலர் வந்து வந்து இரண்டு மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டுத்தான் பகுத்தறிவுப் பாதையில் அந்த நாடுகள் செல்ல முடிந்தது. இப்படி இரண்டு நூற்றாண்டுகளில் செய்ய வேண்டிய காரியங்களைப் பெரியார் அவர்கள் இருபதே ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டுமெனக் கிளம்பினார்கள். திட்டமிட்டார்கள்; அந்த திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் "Putting centuries into capsules" என்று. சில மருந்துகளை உள்ளடக்கிச் சில மாத்திரைகளிலே தருவதுபோல, பல நூற்றாண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து, அவர்கள் தம்முடைய வாழ்நாளிலேயே சாதித்துத் தீர வேண்டுமென்று, அறிவோடும், உணர்ச்சியோடும், நெஞ்சு ஊக்கத்தோடும் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதைக்கூட இரண்டாந்தரமாக வைத்துக் கொண்டு, எந்த அளவு முன்னேறுகிறோம் என்பதைக் காண்பதிலேயே அவர்கள் வாழ்க்கை முழுவதும் போராட்டக் களத்தில் நின்றிருக்கிறார்கள்.

## அறிவுப் புரட்சியின் உருவம்தான் பெரியார்!

பெரியார் அவர்களைப் பொறுத்த வரையில் மொழிப் பிரச்சினை, மிகச் சாதாரணமான பிரச்சினை. அவர்கள் முக்கியமாகக் கருதுவது தமிழ் நாட்டு மக்களிடையே மனிதத்தன்மை வர வேண்டும்; அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற காட்டுமிராண்டித் தனமான கொள்கைகள், நாட்டைக் கடக்கத்தக்க கொள்கைகள், மனிதனை மிருக மயமாக்கத்தக்க கொள்கைகள், வெளி உலகத்தாராலே இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே உதறித் தள்ளப்பட்ட உருப்படியற்ற கொள்கைகள் மறைய வேண்டும்; இவைகள் நீக்கப்பட்டுத் தமிழக மக்கள் துல்லியமான எண்ணத்தில்—செயல்—திறனில் பகுத்தறிவாளர்களாக, பண்பாளர்களாகத் திகழ வேண்டும்; அதற்கு ஒரு அறிவுப் புரட்சி தேவை என்பதிலே அவர்கள் நாட்டம் அமைந்திருக்கிறது; அந்த நாட்டத்தின் உருவம்தான் பெரியார் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

## பெரியாரின் அறிவுப் புரட்சி வெற்றி பெற்றே தீரும்!

பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப்புரட்சி சுலபத்தில் நிற்கப்போவதில்லை. அது போக வேண்டிய தூரத்துக்குப் போய், அடைய வேண்டிய சக்தியை இலக்கைத் தொட்டுத்தான் நிற்கும். எப்படி வில்லை விட்டுக் கிளம்பிய கணை அடையவேண்டிய இடத்தில் பாய்ந்தால்தான் அதன் வேகம் நிற்குமோ அதைப்போல அவர்களிடத்தில் இருந்து பிறந்த அறிவுக் கணை எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ அதையடைந்தே தீரும்; அதில் ஐயம் யாருக்கும் இல்லை; அதில் கால அட்டவணையைக்கூட நாம் கருதத் தேவையில்லை. அந்த பாதையிலே நாம் நடை போட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆந்திரப் பெரியார் கோரேக் அவர்களுடன்......



## பெரியாரும் காந்தியும்!

காந்தியார் பெரியாரின் மாளிகையிலே தங்கியிருக்கிறார். காந்தியின் நினைவாக தம் தமக்கையின் பெண்ணுக்கு 'காந்தி' என்றே பெயர் வைத்திருக்கிறார்.

## புத்தர் குணம் பெற்ற பெரியார்!

### பெரியார் குடும்பத்தில் சிறப்பு!

பெரியார் குடும்பத்தின் நிலை எப்படிப்பட்டது? எந்தப் பக்கம் திரும்பினாலும் குடும்பச் செல்வாக்கு; எப்பக்கம் திரும்பினாலும் வாணிபத்தில் ஆதாயம்; நிலபுலன்கள், வீடு வாசல்கள் இவைகள் எல்லாவற்றையும் பார்த்து, 'இவைகள் எனக்குத் தேவையில்லை' என்றார். 'என் நாட்டு மக்களுக்கு —நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப்போயிருக்கும் மக்களுக்கு வேறு ஒரு செல்வத்தைத் தருவேன்; அறிவுச் செல்வத்தைத் தரப்போகின்றேன்; சிந்தனைச் செல்வத்தைத் தரப் போகிறேன்; அவற்றை ஏற்று நடக்கத்தக்க துணிவைத் தரப் போகிறேன்; அதைத் தடுப்பார் எவரேனும் குறுக்கிடுவார்களானால் அவர்களுடைய ஆற்றல் களையும் முறியடிப்பேன் — இதுதான் என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள்' என்று அவர்கள் கிளம்பினார்கள். அதுதான் வாழ்க்கையின் முதல் போராட்டத்தில் அவர் பெற்ற வெற்றி!

### வட நாட்டினரை வியப்புறச் செய்த பெரியார்!

20 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களோடு நான் வடநாட்டிற்குச் சென்றிருந்த நேரத்தில் வடநாட்டில் பல தலைவர்கள், இந்தியப் பேரரசில் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர்களெல்லாம்—பெரியாரைப் பார்த்து, "பெரியார் அவர்களே! உங்களை இன்னுமா விட்டு வைத்திருக்கிறார்கள்?" என்று கேட்டார்கள். அதற்குப் பெரியார் அவர்கள், "நான் என்ன தவறு செய்தேன்? எதனால் எனக்கு ஆபத்து வரப் போகிறது?" என்று சொல்லிய நேரத்தில், "நீங்கள் பேசுவதில் பத்தாயிரத்தில் ஒரு பகுதியை, செய்வதில் ஆயிரத்தில் ஒரு பகுதியை நாங்கள் சொன்னாலும், செய்தாலும் எங்களை அடியோடு அழித்திருப்பார்கள். நீங்கள் எப்படித் தப்பிப் பிழைக்கிறீர்கள்?" என்று சொன்னார்கள். அப்படிக் கூறும் அளவுக்கு வீரமிக்க காரியங்களை, வேறு யாரும் எண்ணிப் பார்க்க முடியாத காரியங்களை, நடத்திக்காட்ட முடியாத காரியங்களை நடத்திக் காட்டி, அதில் பெற்ற வெற்றிகளை நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அவர் சாதித்த காரியங்கள் மிகப் பெரியவை. என்றாலும் அவர் துணையோடு நாம் சாதிக்கவேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன; பெரிய மலை பிளக்கப் பட்டிருக்கின்றது, கற்பாறைகள் எல்லாம் கீழே உருண்டு வந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் பக்குவப் படுத்தி, அவைகளை எந்தெந்த வடிவத்திலே நாம் செதுக்க வேண்டுமோ, அதில் நாம் நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். பெரியார் அழைப்பைக் கேட்காத தமிழ் மக்கள் என்றுமே இருந்ததில்லை. அவர்கள் கூப்பிடும் குரலுக்கு ஓடிவரத் துடிக்காத இளைஞர்கள் இருந்ததில்லை. அப்படிப்பட்ட மாபெரும் தலைவருடைய 89-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்வதில் மிகுந்த



பெங்களூரில் 15—11—64-ல் நடைபெற்ற தந்தை பெரியார் அவர்களின் பிறந்த தின விழாவில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்னாடை போர்த்தல்.

திரு. பாலதண்டாயுதம் அவர்களுடன் . . . . .





பெரியார் அவர்களின் குடும்பத்தின் ஈரோடு மாளிகை.

மகிழ்ச்சி அடைகின்றேன்; பெருமையடைகின்றேன். என்னுடைய நண்பர்கள் என்னை இவ்விழாவிற்குத் தலைமையேற்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், திராவிடர் கழகம் நடத்துகின்ற இந்த விழாவில் தலைமை வகிக்க வேண்டுமென்று கேட்டார்கள் — அவர்களுக்குத் திராவிடர் கழகத்தின் வரலாறு தெரியாத காரணத்தால்! திராவிடர் கழகம் என்று பெயர் வைத்தவனும் நான்தான். அதைக் கொண்டு நாட்டிலே பெரிய புரட்சியை உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கையையும் திரம்பப்பெற்றவன் நான்! ஆகையினுல், நான் இங்கே தலைமை வகிப்பது இயற்கைக்கு மாருனதல்ல.

## பெரியார் வாழ்வே தமிழினத்தின் பெருவாழ்வு !

பெரியார் அவர்களை மறக்கிற நேரத்தில் நம்மையறியாமல் ஒரு பலவீனம் நமக்கு வருகிறது. அவர்களை எண்ணிக்கொள்கிற நேரங்களில் நமக்குத் தைரியம் வருகிறது. அவர் இருக்கிருர் என்ற நினைவு வரும் போது, அவர் இருக்கிருர் என்றவுடன், பரவாயில்லை பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியமும் நமக்கு வருகிறது. அந்த நினைவு அரசியல் துறையில் உள்ள என் போன்ருேர்க்கு மட்டுமல்ல; வணிகத் துறையில் தமிழர்கள் சங்கடப்படும் போது பெரியாரைத்தான் எண்ணிக் கொள்கிருர்கள். பெரியார் சொல்கிறபடி நடந்தால் நாம் பிழைக்க் முடியும் என்று தமிழ்ப்புலவர்கள் கருதுகிருர்கள்.

## எதிர்காலம்தான் முக்கியம்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் எப்படி இருக்கும் என்ற சிந்தனையும், கண்ணும் கொள்ள எனக்கு விருப்பமேயொழிய இரண்டாயிரம் ஆண்களுக்கு முன்பு இருந்ததைப் பற்றிய அக்கறை கிடையாது.

## பெரியாரது வேலையை நாம் மேற்கொள்ள வேண்டும்!

கோலாரிலே தங்கம் கிடைக்கிறது என்ருல், பூமியை வெட்டியவுடன் அது பாளம் பாளமாகக் கிடைப்பதில்லை. கல்லைவெட்டி, அதைக் கறைத்து அரைத்துக் காய்ச்சியபின் தான் மின்னும் தங்கத்தை எடுக்கின்றனர். அவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதுபோன்றுதான் சமுதாய சீர்திருத்தப்பணியாகும். பெரியார் அவர்களுக்கு நாம் தந்துள்ள சமுதாய சீர்திருத்தவேலை அவர் இறுதி முச்சுள்ளவரை செய்து தீரவேண்டிய வேலை. ஏனென்ருல், அந்தப் பணியைச் செய்வதற்கு அவரைத் தவிர வேறு ஆள் இல்லை. நேற்று இருந்ததில்லை; நாளைக்கு வருவார்களா என்பதும் ஐயப்பாட்டிற்குரியது. பெரியார் அவர்கள் செய்யும் வேலையில் மனநிம்மதியோடு இருக்கலாம். தமிழகம் இன்று எந்தப் புதுக் கருத்தையும் ஏற்றுக்கொள்வதற்கும், தாங்கிக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறது. அது செயல் வடிவத்திலே வருவதற்குச் சில ஆண்டுகள் பிடிக்கலாம். அவரது கருத்துக்களும், கொள்கைகளும் இன்னும் முற்றும் செயல்படவில்லை; அது செயல் வடிவத்திற்கு வருவதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கலாம். ஆனுல் அது செயல்பட்டே தீரும். பெரியாரவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பணி மிகச் சிறந்த பணி; நம் நாட்டிற்கு மிகத் தேவையான பணி! அதனை நிறைவேற்றக் கூடிய ஆற்றல் பெரியாரவர்களுக்கே உண்டு. ஆனுலும் அவருக்கு ஓய்வு கொடுத்து அவரது வேலையை நாம் மெற்கொள்ள வேண்டும்.

## முதன் முதல் பெரியார் பேச்சைக் கேட்ட நான்...

பெரியார் அவர்களின் கருத்துக்களை நான் முதன் முதல் 40 வருடங்களுக்குமுன் கேட்க நேர்ந்தபோது, என்ன இவர், இப்படிப் பச்சையாகப் பேசுகிருரே' என்று நினைத்தேன். பின் அவரது கருத்துக்களைச் சிந்தித்து, அவரோடு தொண்டாற்ற தொடங்கிய பிறகு, அவர் பேசும் போது அதை விட்டுவிட்டாரே, இதை விட்டு விட்டாரே என்ற உணர்வு ஏற்பட்டது. அப்படித்தான் எல்லோருக்கும் முதலில் கசப்பாகத் தோன்றும்; சிந்தித்தால்தான் உண்மையை உணர முடியும். நான் பொறுப்பேற்றுள்ள தமிழ் நாட்டரசு மக்களிடையே பரவியிருக்கும் மூடப் பழக்க வழக்கங்களை நீக்கப் பாடுபடும். நாம் மட்டுமில்லாமல், நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள், ஒன்றியங்கள், பகுத்தறிவு வளர்வதற்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவைகள் கண்காட்சிகள் நடத்த வேண்டும். கண்காட்சியில் கடைத்தெருக் கடைகளை ஒரு பந்தலில் கொண்டு வந்து வைப்பதாக இருக்கக் கூடாது. உலகின் முன்னேற்றத்தையொட்டி கல்வி—போக்குவரத்து — ஒழுக்கத்துறை — முன் நம்பிய கடவுள், இப்போது எப்படி அக்கடவுள்களை மக்கள் விட்டார்கள் என்பனவற்றை விளக்கக் கூடியதாக அமையவேண்டும். பெரியார் அவர்கள் சுட்டிக் காட்டியதைக் கவனத்தில் கொண்டு நகராட்சியினர் தங்களால் இயன்றஅளவு தொண்டு புரிய வேண்டுகின்றேன்.



## தமிழகத்தின் முதல் பேராசிரியர் பெரியார்!

பல ஆண்டுகளுக்கு முன், என் 'திராவிட நாடு' பத்திரிகையில் ஆண்டு மலருக்காக ஒரு கட்டுரை எழுதினேன். அதில் பல நாட்டுக் கவிஞர்கள், பல நாட்டுப் பேராசிரியகளைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'நமது தமிழகத்தின் முதல் பேராசிரியர் பெரியார்' என்று எழுதியிருக்கின்றேன். அவர் சமுதாயத்தில் செய்த தொண்டு மிக அதிகம். அவரது கருத்துக்களை, கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளுமளவிற்கு மனவளம் பெறவில்லை. நிலத்தினுடைய வளத்திற்குத் தக்கபடி தான் பயிர் வளர முடியும். அது போல, மனவளம் பெற்றவர்களால் தான் பெரியாரின் கருத்துக்களை ஏற்க முடியும். ஆனுல், அவரது தொண்டு வீண்போக வில்லை. பெரியார் அவர்களின் 30, 40 ஆண்டு தொண்டுகளுக்குப் பிறகு, புதியதாகக் கட்டப்பட்ட கோயில்கள் எத்தனை? பள்ளிகள் எத்தனை? என்ற கணக்கில் பார்த்தால், தமிழகத்தில் அறிவுப் புரட்சி நடைபெற்றிருப்பதும், வெற்றி பெற்றிருப்பதும் தெரியும். பெரியார்* அவர்களின் பகுத்தறிவுப் பிரசாரத்தின் வலிமை எவ்வளவு என்பதும் தெரியும். அவர் பிரசாரத்தைத் துவங்கிய காலத்தில் பல வகுப்பார படிப்பதற்கே அருகதையில்லாதவர்களென்று ஏட்டிலே எழுதி வைக்கப்பட்டது மட்டுமல்ல, நாட்டிலே சொல்லப்பட்டும் வந்தது. அந்த வகுப்பாரேகூட நம்பினுர்கள் நமக்குப் படிப்பு வராது என்று! நாம் எதற்காகப் படிக்க வேண்டுமென்று அவர்கள் தெரியாமல் தடுமாறினுர்கள். நான் கல்லூரியில் பொருளாதார 'ஆனர்சு' வகுப்பை எடுக்கச் சென்றபோது, அங்கு ஆசிரியராக இருந்த ஒரு பார்ப்பனர், இந்தப் பொருளாதாரப் பாடம் உனக்கு வருமா? உனக்கேன் இது? வேறு ஏதாவது எடுத்துக்கொள்!' என்று கூறி, என் ஆர்வத்தைக் குறைக்கப் பார்த்தார். நான் பொருளாதாரத்தையே எடுத்துச் சிறந்த முறையில் தேர்வும் பெற்றேன்.

நான் 36 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழக அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, அது எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதை உணர்கிறேன்.

## பெரியார் அறிவுரைதான் சமூகத்தை முன்னேற்றுகிறது!

பெரியார் அவர்கள் தரும் பெரும் பேருரைகளால், அவருடைய சலியாத உழைப்பினுல், அவர் தந்துள்ள பகுத்தறிவுக் கருத்துக்களினுல்தான் இன்றைய தினம் நம் சமூகம் மிக நல்ல அளவிலே முன்னேறிக்கொண்டு வருகிறது. அவருக்குத் திருப்தி ஏற்படுகிற வகையிலே இல்லாமலிருந்தாலும், என்னைப் போன்றவர்கள் இந்த அளவுக்குக் கூட மாறுவார்களா என்று எண்ணிப் பார்க்காத அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## தமிழ்ச் சமுதாயத்தின் உயிர்ச்சக்தி பெரியார்!

ஒரு சமூகத்தை, நாட்டுமக்களை ஆளாக்கி விட்ட பெருமை உலகத்தில் பல தலைவர்களுக்குக் கிடைத்ததில்லை. நம்முடைய தமிழகத்தில் பெரியார் அவர்களுக்குத்தான் அந்தத் தனிப் பெருமை சேர்ந்திருக்கிறது; அந்தப் பெருமைக்குரியவர்களாக நாம் நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும். அவர் அளித்துள்ள செல்வம்—அவர் நமக்குக் காட்டியுள்ள லட்சியப் பாதையில் நடந்து செல்லுதற்கேற்ப ஆற்றல் நமக்கு வரவேண்டுமென்று அவர் இன்றைய தினம் நமக்கெல்லாம் வாழ்த்துச் சொல்ல வேண்டும். அந்த வாழ்த்து நமக்குப் புதிய வல்லமையை, புதிய உற்சாகத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை.



பெரியார் அவர்களுடன், டாக்டர் அம்பேத்கார், முகமது அலி ஜின்னு, திரு. டி.ஏ.வி. நாதன், சண்டே அப்சர்வர் திரு. பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர்.



## பெரியாரைப் பின்பற்றுவோம்!

நெடுங்காலமாக பழைய முறைகளிலேயே ஊறி, அவற்றைத் தாங்கி, அவற்றுக்கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக்கூறி, காலத்தைக் கழித்திருக்கிருேம்.

இதே காலத்தில் உலகத்தின் ஏனைய நாட்டவர்கள் எல்லாம் உண்மையை நாடி, பொறுமையோடு தங்களது இடைவிடா ஆராய்ச்சி சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தியதுடன் உயர்வு பெற்றுள்ளனர். நாம் பண்டைய பழம்பெருமையில் அமர்ந்திருப்பதில் திருப்தி கொள்கிறோம். நன்மையறியாமல் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருந்து வந்துள்ளோம். இந்த வகையில், புரையோடிய சமூகக் கருத்துக்களைச் சாகடிக்கும் வீரர் பெரியாரைக் குறைகூறத் துணிவதில் சிறிதுகூட அறிவுத் தெளிவு இல்லை. பழம்பெருமை பேசிக்கொண்டு, மூடப் பழக்கங்களில் ஆழ்ந்து அடிமைப் பட்டிருக்கும் சமுதாயத்தைச் சீர் திருத்தி, புரையோடிய சமுதாயக் கருத்துக்களை ஒழித்துப் போராடும் வீரரான பெரியாரைக் குறைகூறிப் பயன் என்ன? பகுத்தறிவே எல்லோருடைய உள்ளங்களையும் தங்கு தடையின்றி ஆளவேண்டும். சாதி ஒழிந்த சமத்துவ சமுதாயம் அமைக்கும் போர் வீரர்களாக எல்லோரும் முன் வர வேண்டும். நாட்டில் புத்துயிர் ஊட்டிப் பகுத்தறிவாளர்களைப் பெருக்க வேண்டும்.

## சாதி முறையை எதிர்த்துப் போர் தொடுங்கள்!

பகுத்தறிவு மூலம் சமுதாயத்தினைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட வேண்டும். பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்று வெளியேறுவோர் இப்பணிக்குத் தூதுவர்களாக விளங்க வேண்டும். சாதி முறையை எதிர்த்துப் போர் தொடுத்திடுங்கள் என நான் உங்களை அழைக்கிறேன். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ முடியாத மூடப் பழக்கங்களுக்கு எதிராகப் போர் தொடுக்கும்படியும் உங்களை வேண்டுகிறேன்.''




நாவலர் அவர்களுடன் ......



பெரியார் அண்ணா அவர்களுடன் திரு. ராஜாராம் அவர்கள்





# மனதிற்கு மகிழ்ச்சி தருவது குடும்பநலம்

### பெரியார் அவர்களுடன் டாக்டர் சந்திரசேகர் பேட்டி



பெரியார் அவர்களுடன், டாக்டர் சந்திரசேகர், திருமதி மணியம்மையார், திருமதி சந்திரசேகர் ஆகியோர் உள்ளனர்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பல்லாண்டுகளாக சமூகச் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு அத்துறையில், வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். சென்னைக்கு 1970 மார்ச் திங்கள் 9-ஆம் நாள் வருகை தந்திருந்த அன்றைய மத்திய குடும்ப நலத்துறை ராஜாங்க அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் தேசிய குடும்ப நலத் திட்டம் பற்றி பெரியார் அவர்களைப் பேட்டி கண்டார். அது பின்வருமாறு :

டாக்டர் சந்திரசேகர் : குடும்பநலத் திட்டப் பிரச்சாரப் பணியில் தாங்கள் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறீர்கள். நான் நினைப்பது சரியாக இருந்தால், தாங்கள் முதன் முதலாக 1928-லேயே குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டு இருந்தீர்கள். அந்தப் புத்தகத்தை எழுத வேண்டும் என்ற கருத்து தங்களுக்கு எப்படித் தோன்றியது என்று கூறினால் பரவாயில்லை.

பெரியார் : எனக்கு சின்ன வயதிலேயே ரொம்ப செல்லப்பிள்ளை மாதிரி எல்லாரிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருந்தது. அதிலே எனக்குக் கொஞ்சம் ரொம்ப வேகமான கருத்துகளெல்லாம் தோன்றும். அது தப்பு, இது தப்பு என்ற கருத்துக்களெல்லாம் எனக்குத் தோணும். அதிலே நான் சாதாரணமா, தைரியமா வெளியிடுவேன். அந்த முறையிலே மத சம்பந்தமா, இலக்கிய சம்பந்தமா, அது அது சம்பந்தப்பட்டவர்களிடம் வாதாடி வாதாடி ஒரு மாதிரி—பொதுவா சொன்னா—ஒரு வாயாடி என்ற நிலைமைக்குப் பேரு வர்றபடி வாதாடிட்டு இருந்தேன். அதே போக்கிலே தான் ஜனங்களிடம் பழகுகிறபோது இந்தப் பிள்ளைகுட்டி அதிகமாப் பெத்துக்கிட்டு இருக்கிறவங்க படற கஷ்டம் நம்மகிட்ட வந்து முறையிடுற முறை, புருஷன் பெண்சாதி சண்டை போட்டுகிட்டு வர்ற கலவரம், இதுகளையெல்லாம் நான் சீரியஸா கவனிக்கிற போது—இந்தப் புள்ளைகளால் பெரிய தொல்லை படறாங்க. இயற்கையா இருக்கிற தொல்லை தவிர, புள்ளை குட்டிங்களாலும் வேற தொல்லை படறாங்க, வேடிக்கையா சொல்றேன். குடியரசு ஆபீசிற்கு எதிர்த்தாப்பலே ஒரு வீடு, குடுத்தனக்காரர் வீடு. அவங்க நம்ம ஜாதியில்லை. எங்களுக்கும் அவங்களுக்கும் ஒரு மாதிரியான முறை. அண்ணன் தம்பி, மாமன் மச்சான்னு கூப்பிடுவோம். அந்த முறையிலே எதிர்த்த வீட்டுக்காரன் ஒருத்தன்; அவன் எனக்கு மாப்பிள்ளையா வேண்டும். அவன் மனைவிக்கு நான் அண்ணா வேணும். இந்த மாதிரி இருக்கும். அவனுக்கு நாலு குழந்தை; , கைக் குழந்தை ஒன்று; அந்த நிலையில் அவன் கோபம் வந்து பொண்டாட்டியைப் போட்டு அடிச்சுப்புட்டான்' அப்போ நான் இங்கிருந்து சிபாரிசுக்குப்போயி ''என்னடா இந்த மாதிரி பண்றியே குழந்தை குட்டிகளுக்கு இந்த மாதிரி பண்றியே?'' அப்படின்னு ரொம்பக் கடினமா கேட்டதுக்கு, இதைப்பத்தி எல்லாம்

நீ கேக்காதேங்கிற அளவுக்கு வந்திட்டான். அந்த கோவத்திலே அந்தம்மா அழுதுகிட்டு சொல்ற போது, ஒரு வார்த்தை சொன்ன. ''இந்த மாதிரி இவருகிட்டே இன்றைக்கு நேத்திக்கல்ல நான் படற அவஸ்த்தை! கொஞ்ச நாளாவே உதை தின்னு தின்னு எனக்கு ரொம்ப வேதனையா போச்சு! அதனலே போயி எங்காவது ஆற்றிலே குளத்திலே இறங்கிடலாம்னு முடிவு! இதுகளை வச்சுகிட்டு நான் என்ன பண்ணட்டும்? நான் ஒருத்தி விழறதா இருந்தா, இதுங்க கதி என்னவாகும்? இல்லாட்டா, இதுங்களையும் தள்ளிப் போட்டுட்டுல்ல, நான் விழ வேண்டும். இந்தக் கொலைக்கு நான் ஏன் பாகப் படணும்னு இந்த ஆளுகிட்ட உதை தின்னுகிட்டிருக்கேன்! இல்லாட்டா நான் போய் விழுந்திடுவேன், ஆற்றிலே!'' அப்படின்னு அவள் சொன்னள். வாய்த்துடுக்கு முறையில், ''சரி ஏன் இப்படிபெத்தே நீ? உன்னை யாரு இவ்வளவு பெத்துக்கச் சொன்ன? பெத்துக்கிட்டியே, வேதனை படறியே!'' அப்படின்னேன். அப்ப அந்த அம்மா பேச்சோட பேச்சா, '' அது நம்ம செயலில் லேண்ண, அது பகவான் செயல்! அப்படி பண்ணிட்டது! நான் என்ன பண்ணட்டும்?'' அப்படின்னு சொன்ன. அப்பத்தான் அந்தப் பகவான் செயலைக் கண்டிச்சுப்போட்டு நான் அன்னிக்கே வந்து எழுதியிருக்கிறேன். இந்த 'மாதிரி குழந்தைகளைப் பெத்துகிட்டுச் சங்கடப் படருங்க. இப்படி கிணத்துலே விழுந்துட துணிஞ்ச பொம்பிளைகூட ''இந்தப் புள்ளைகளை வெச்சுகிட்டு, எப்படி நான் விழுகிறது? இதையும் போட்டுட்டு விழுகிறதுன்ன, புள்ளையைக் கொல்றதுன்ன எனக்கு இதா இருக்குதேன்னு விசனப்படறன்னு வேடிக்கையா அப்ப வந்ததுதான். வந்ததுக்கப்புறம் நாம் சீரியஸா எழுதிட்டு இருந்தமா? பிரிட்டிஷ் நியூஸிலே வந்தது இந்த சங்கதி, இங்கிலீஷ் பத்திரிகையிலே! அதை எடுத்துதான் எழுதிகிட்டிருக்கேன். நம்ம கருத்துக்குச் சரியா இருந்தது. அப்ப எங்கிட்ட இருக்கிற கிளார்க் ஒருத்தர் கொஞ்சம் இங்கிலீஷ் தெரிஞ்சவர். அவருகிட்டே சொன்னேன், இதை மொழிபெயர்த்திடலாம்னு. அதைத்தான் முதல் முதல்லே... அப்படியே எண்ணம் வளர்ந்து போச்சு. எனக்கு முதல் மனைவியாயிருந்த நாகம்மைக்குக் கல்யாணமான கொஞ்ச வருஷம் ஆனவுடனே ஒரு குழந்தை பொறந்து செத்துப் போச்சு. இந்தக் குழந்தையை நான் பார்க்கவும் இல்லே. ஐந்து மாதம் ஆச்சு. ஐந்து மாசமா நான் அதை பார்க்கக் கூடவில்லே. எனக்கு அவ்வளவுதான். மறுபடியும் அம்மாகிட்டே சொன்னேன். எனக்கு குழந்தை இல்லேங்கிற பேச்சே நாம வைச்சுக்கக்கூடாது இங்கே! அப்படி இப்படின்னு அந்தம்மா கெஞ்சு வாங்க. ஒரு புள்ளை மாத்திரம் இருக்கட்டும், வேறு இல்லாட்டி போகட்டும். நம்ம குடும்பத்துக்கு ஒன்னுன்ன நூறு புள்ளை நாம எடுத்து வளர்த்துடலாம்னு சொன்னேன். அதனலேயே ரெண்டு மூன்று புள்ளை வளர்த்தேன். அதுக்கு நான் ரொம்பவும் உபதேசம் பண்ணினேன். நமக்கு குழந்தை வேண்டாம்னு அப்படியே அந்த எண்ணம் வளர்ந்தது. அந்தக் குழந்தை பெக்கறது ஒரு நியுசன்ஸ்ன்னு எனக்குப் பட்டது. அது என்னவோ பிராக்டிகலா ரொம்ப வளர்ந்து போச்சு, அந்த எண்ணம்.



டாக்டர்: அந்தக் காலத்திலே குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்னமாவது எதிர்ப்பு இருந்திருக்கும் இல்லியா?

பெரியார்: எங்க ஜனங்க சொல்வாங்க, அவனுக்கு புள்ளையில்ல. அதனலே அவன் எல்லாத்துக்கும் வேணும் வேணும்னு சொல்றன். 'இராசி'ன்னு அவ்வளவுதான் சொன்னங்க. கல்யாணம் ஆனவர்களுக்கெல்லாம் நான் உதவி பண்ணுவேன். புள்ளைதாச்சி ஆனவங்களுக்கெல்லாம் அதுக்குள்ளவா ஆயிடுச்சு, அப்படி இப்படின்னு பரிகாசம் பண்ணுவேன். அப்ப சின்னவங்க எதிர்த்துப் பேசமாட்டாங்க; பெரியவர்களா இறக்கிறவங்க, அவன் முரடன் முரடன்னு சொல்லுவாங்க, அதுக்கு!

டாக்டர்: சர்க்காருடைய 'புரோகிராம்' இருக்கிறது பாருங்க. இந்த 'பேமலி பிளானிங்'. உலகத்திலேயே பெரிய 'புரோகிராம்' இதுதான். பணம் செலவு பண்றதிலேயோ. வேலை பண்றதிலேயோ ஒரு 130 நாடுகளை கம்பேர் பண்ணின—நம்முடைய புரோகிராம் — டெல்லி கவர்ன்மெண்ட் புரோகிராம்தான் பெரிய புரோகிராம். அதுக்கு உங்க 'ஒப்பீனியன்' வேணும். உங்க அபிப்பிராயம் என்னன்னு கேட்கிறேன்.

பெரியார்: ரொம்ப நல்ல காரியம் தான். இந்த மாதிரி அரசாங்கம் ஆரம்பித்து இருக்கிறது. சமுதாயத்திலேயே ஒரு பெரிய நல்ல காரியம். ரொம்ப அது ஜனங்களுக்கு தொந்தரவு இல்லாம மனசுக்கு சந்தோஷமா வாழ்வு கொடுக்கக்கூடிய ஒரு காரியம்தான். அதிலே இன்னென்று எனக்கு என்ன தோணுதுன்ன, இந்தப் பெண்களை இதிலே பிரச்சாரம் பண்றதுக்கு ரொம்ப பக்குவப்படுத்தி சொன்ன நல்லா இருக்கும் அப்படின்னு. பொம்பிளைக்கு ரொம்ப ஆசை, பிள்ளை பெக்க வேணுமென்னு. ஆம்பிளைக்கு ஒரு அளவிருந்தாலும், பொம்பளைக்கு கூடுதலா இருக்கும் அது. அவங்களண்டை போயி நெருங்கி அந்த விஷயங்களை எடுத்துச் சொல்றப்பலே, கொஞ்சம் நல்ல பொம்பிளைங்களை விட்டு அதிகமா



பழகிச் சொன்னு கொஞ்சம் அவங்க கேப்பாங்கன்னு நினைக்கிறேன்.

டாக்டர் : நாங்க வந்து பெண்களுக்குச் சொல்றதுக்குப் பொம்பிளைங்களைத்தான் டிரெயின் பண்ணி 'பேமலி பிளானிங் ஆபீஸர்ஸ்'ன்னு அவங்க கிராமத்துக்கும், டவுனுக்கும் போய் சொல்லுவாங்க; ஆண்களை அனுப்பறதில்லே.

பெரியார் : அதோடு கூடவே இந்த 'ரெலிஜியஸ் பெயித்' இல்லாத பொம்பிளைகளையே அனுப்பணும். ஆம்பிளைகளைப் போட்டாலும், கூடுமான வரைக்கும் அவனைப் பகுத்தறிவு வாதியாகவே போடணும். பெண்ணை போட்டாலும், ஆம்பிளையா போட்டாலும், மத நம்பிக்கையில்லாதவங்களா பார்த்துப் போடணும்.

டாக்டர் : இவ்வளவு பெரிய புரோக்கிராமிலே மத நம்பிக்கையில்லாத அதிகாரிகளைக் கண்டு பிடிக்கிறது கொஞ்சம் கஷ்டம் எங்களுக்கு. ரெண்டாவது, ஒன்னு பண்றேன் இப்போ. இப்போ ஆண்கள்-பெண்கள் கல்யாணம் பண்றதுக்கு வயது 'லிமிட்' ஒன்னு இருக்கு. அது வந்து ஆண்களுக்கு 18, பெண்களுக்கு 15. எனக்கு அது திருப்தியா இல்லே. ஆண்களுக்கு 21, பெண்களுக்குக் குறைந்தது 18 ஆவது இருக்கணும்னு பண்ணணும். அதை ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு எழுதுகிறோம். 17 ஸ்டேட் கவர்ன்மெண்டும் ஒப்புக்கொள்ளணும், ஒப்புக்கொண்டால்தான் மத்திய சர்க்காரிலே சட்டம் உண்டாக்க முடியும். அதுக்குரொம்ப வாதம் நடக்குது. ''யெஸ்! நோ! யெஸ்! நோ!'' சொல்லிக் கொண்டிருக்காங்க. உங்க அபிப்பிராயம் என்னன்னு கேக்கறேன்.

பெரியார் : ஐயா சொல்றது ரொம்ப சரி. 18 வயது கூடப் பத்தாது. பெண்களுக்கு 20 வயசு இருந்தால்தான், அது ஏதாவது பயன்படும். 18 வயசுன்னு ஏதோ ஜனப் பெருக்கத்திலே கொஞ்சம் குறையுதுன்னு சொல்றீங்க.

டாக்டர் : இப்ப இருக்கிறதிலே 3 வயசு கூடுது. இப்ப 15 இருக்குது. நான் 18 பண்ணணும்னு பார்க்கிறேன். உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் ஹிந்தி பேசும் நாடுகளிலெல்லாம் 12, 13, 14 வயசிலே கல்யாணம் பண்ணிடருங்க.

பெரியார் : அதெல்லாம் பெண்களை ரொம்ப அடக்க வேணும்கிறதுக்காக ஏற்பட்ட 'ஏஜே' தவிர, வேற எந்த ஒரு காரணத்தையும் கொண்டு அது ஏற்படலலே, 20 வைச்சமானு ரெண்டு காரியம் 'சால்வ்' ஆகும். அவங்களா பார்த்து ஒரு சுதந்திரமான புருஷனைப் பார்த்துக்குவாங்க.

டாக்டர் : பெண் வந்து 20 வயசாச்சுன்னு படிச்சிட்டு அவளா பார்த்து இஷ்டப்பட்டுக் கல்யாணம் செய்துக்கிடுவா. இப்ப வந்து அப்பா அம்மா யாராவது தேடிப் பிடிச்சு கல்யாணம் பண்ணருங்க.



பெரியார் : அந்தமாதிரி தேடிப் பிடிப்பாங்க. பெண்களுடைய வாழ்க்கைத்தரம் கொஞ்சம் உயரும். 20 வயசு வரைக்கும் அவங்க படிச்சாங்கன்னு, வேலைக்கு லாயக்கு ஆகருப்பலே ஒரு படிப்பு அவர்களுக்கு வந்து சேரும். இந்த 18-லே கொண்டு போயிட்டா, எஸ். எஸ். எல். சி. பாஸ் ஆயும் பெயில் ஆயும் இருக்கிற நிலைமை வரும். அவங்க புருஷனுக்கு என்னமா பாடுபட முடியும்? அவங்களுக்குத் தொழில்தான் என்ன வரும்? எனக்கென்னமோ, எவ்வளவு நாளைக்குக் கல்யாணத்தைத் தள்ளிப் போடறமோ, அவ்வளவு நாளைக்கு நல்லது. பின்னலேயும் ரொம்ப உபயோகப்படுவாங்க அவங்க. இப்ப என்ன பண்றது? 18-லியே கல்யாணம் பண்ணினு 19-லியே குடும்பப் பொம்பிளையா போயிடரு. குடும்பத்தைக் காப்பாத்தற வேலையே அவளுக்கு சரியா போகுது. 20-லே ரெண்டு பிள்ளையாயி போகுது. புருஷனுக்கும் குடும்பத்தைக் காப்பாத்தறதுக்குத்தான்வேலை வேண்டியிருக்குது. சம்பாதனைக்கும் குடும்பத்தைக் காப்பாத்தறதுக்குந்தான் வேலையே. இதுக்குத் தகுந்தபடி தன்னுடைய ஒழுக்கத்தையும் கெடுத்துக்கிருன். அவன் கேரக்டரும் கெட்டுப் போகுது. அதெல்லாம் இல்லாம இருக்கணும்னு ஒரு 20, 22 வயசாவது இருக்கணும்.

டாக்டர் : அப்புறம், முன்னே என்னபண்ணினோம்னு ஒரு 4 வருஷத்துக்கு முன்னே ஒரு தம்பதி 2, 3, 4 குழந்தை பெத்துக்கலாம். அவங்களுக்கு பணம் இருந்தால் சௌகரியமாயிருந்தால் குழந்தைகளுக்குத் துணிமணி கொடுத்துக் காப்பாத்த முடியுமானு 5, 6 குழந்தை கூட பெத்துக்கலாம்னு ஒரு தடவை சொன்னோம். அப்புறம் சொன்னோம், அதெல்லாம் முடியாது, ரெண்டு குழந்தைங்க... இல்லேன்னு மூனு. இப்ப நான் கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தா அதுவும் கொஞ்சம் அதிகமா போச்சு. அப்புறம் நாங்க சொன்னோம், ஒரு ரெண்டு குழந்தை போதும்னு சொல்ரோம். அதிலே என்ன கடஷ்டம்னு இப்போ ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை பொறந்துட்டுதுன்னு கஷ்டம் இல்லே. ரெண்டும் பெண்ணு போயிடுத்துன்னு இன்னும் ஒன்றுக்கு 'ட்ரை' பண்ருரு ஆளு! அதுக்கு எப்படி அவங்களை 'எஜுகேட்' பண்றதுன்னு எனக்குத் தெரியல்லே. பெண் குழந்தை பொறந்தாலும் அதோடு நிறுத்திக்கலாம், ஒன்னும் கஷ்டம் இல்லே. பெண்ணும் ஆணும் ஒண்ணுன்னு சொல்றதுக்கு நம்மாலே முடியலே, நம் நாட்டிலே. நான் சொல்றது என்னன்னு 2 குழந்தை இருந்தாப் போதும். 2 ஆண் குழந்தை இருந்தா சரிதான். 2 பெண் குழந்தை இருந்தாலும் நிறுத்திடணும்னு சொல்லணும். அதை எப்படிச் சொல்றது மக்களுக்கு?

பெரியார் : நான் சொல்றேன். அந்த எண்ணம் மக்கள் மனசிலேயிருந்து மாற வேணுமானு 50.% பெண்களுக்கு உத்தியோகம்; 50% ஆம்பிளைக்கு உத்தியோகம். ஒரு ஆபிஸ்லே 100 பேர் உத்தியோகஸ்தர் இருந்தா, 50 பேர் பெண்கள் இருக்காங்களான்னு கேக்கணும். இல்லாவிட்டா அதைப் போடுன்னு சொல்லணும். அப்ப பெத்தவங்களுக்கு ஆண் இருந்தாலும் ஒன்னு, பெண் இருந்தாலும் ஒன்னு! இப்ப ஆம்பிளையெல்லாம் உத்தியோகம் பார்க்கருங்க. பொம்பிளைங்க எல்லாம் வீட்லே இருக்காங்க. அதனலேயே நமக்கு ஆம்பிளை பிள்ளை ஒன்னு வேணும்னு தோனுது. அவன் சம்பாதிக்கிருன்னு தோனுது. அதனலே நாம் 'ஈக்குவலேஸ்' பண்ணிட்டா உத்தியோகத்தை ஆளுக்கு சரி பகுதின்னு...

டாக்டர் : அப்ப ஆம்பிளைங்க கொஞ்சம் 'அப்போஸ்' பண்ணுவாங்களே? எதிர்பாங்களே?

பெரியார் : ஏன், எப்படி 'அப்போஸ்' பண்ணுவாங்க? எப்படி நீங்கதான் 'அப்போஸ்' பண்ணமுடியும். உங்க மகளுக்கும், உங்க தங்கச்சிக்கும் உத்தியோகம் தர்றப்போது— நீங்க ஏன் 'அப்போஸ்' பண்றீங்க?


டாக்டர் : ரொம்ப சரி.

பெரியார் : உங்க பொண்ணுக்கும் வருது உத்தியோகம். உங்க தங்கச்சிக்கும் வருது!

டாக்டர் : ரொம்ப சரி.

பெரியார் : அதனலே அப்படின்னு சட்டம் போட்டுடுங்க — இப்ப ஆதி திராவிடருக்குப் போட்ட மாதிரி. 50% 'பீமேலுக்கு' உத்தியோகம் ஒதுக்கி வைக்கணும் அப்படின்னு.

டாக்டர் : இந்தக் கருத்து நல்லா இருக்குது. 'ஒரிஜினல் சஜஷன்'. இதை நாங்க 'எக்ஸாமின்' பண்ணிப் பார்க்கிரோம். என்ன பண்ணமுடியுமுன்னு. இன்னொன்று கேக்கணும் உங்களை. இப்ப வந்து 'அபார்ஷன்' இருக்குது பாருங்க — கருச்சிதைவு பத்தி பெரிய 'கான்ட்ரவர்சி' சர்க்காரிலே. நான் பத்து வருஷமா



இதைப்பத்தி எழுதிக்கிட்டே வரேன். அவங்க சொல்லுருங்க இந்த 'அபார்ஷனை லீகலேஸ் பண்ணிட்டா..

பெரியார் : அது லீகலேஸ்ஸுன்னு எப்படி சொல்றது? அபார்ஷன்னு 'நேட்சுரல் அபார்ஷனு', மருந்து சாப்பிட்டா . . . . ?

டாக்டர் : மருந்து சாப்பிட்டு . . . அதாவது 'இண்ட்யூஸ்டு அபார்ஷன். அது வந்து தப்புன்னு சொல்லியிருந்தாங்க. வருஷத்துக்கு ஒரு 40 லட்சம் பெண்கள் இந்த மாதிரி சரியான டாக்டர்கள் இல்லாத தவருன டாக்டர்கள்கிட்டே போயிட்டு, அவங்க உடம்பைக்கெடுத்துட்டு, கொலை கூட ஆயிடுது! அந்த மாதிரி ஆகாம 'லீகலேஸ்' பண்ணிட்டா . . . .

பெரியார் : வேணும்கிறவங்க செய்துக்கலாம்.

டாக்டர் : 'தட் இஸ் குட்'! அதுதான் இருக்கணும். 'வாலண்டிரியா' தெரியாம கர்பமாயிட்டா, குழந்தை வேண்டாம்னு சொன்னு சர்க்கார் ஆஸ்பத்திரியிலே போயி அந்த ஆபரேஷன் பண்ணிக்கலாம்.

பெரியார் : அதை 'லீகலேஸ்' பண்ணலாமே. அதிலே யாருக்கும் தகராறு இல்லே.

டாக்டர் : அதுதான் சர்க்காரில் ஒரு பில் கொண்டு வந்து இருக்கோம். அது வந்து ராஜ்ய சபையில் 'அப்ரூவல்' ஆயி செலக்ட் கமிட்டிக்குப் போயிருக்கிறது. அப்புறம் லோக் சபாவிற்கு வரும். அப்புறம் பில் வந்து, 'ஆக்ட்' ஆயிடும்.

பெரியார் : என்ன மாதிரி பதில் சொல்லலாம்னு—அட நாம செய்யாவிட்டா அவங்க செய்துக்கப் போருங்க. அதிலே அபாயங்களுக்கு ஆளாவாங்க. இப்ப நாம் செய்யறதினலே நல்லதனமா குற்றத்துக்கு இடமில்லாம செய்து . . . .

டாக்டர் : சரியான டாக்டர்களை வைத்து, சரியான ஆஸ்பிடலை வைச்சு, ஒன்னும் கெடுதியாகாம சரியா பண்ணணும்னு 'லீகலேஸ்' பண்ணணும்.

பெரியார் : ஆம் . . . . அந்த மாதிரி செய்யணும்.

டாக்டர் : ரொம்ப நன்றி உங்களுக்கு.

# சிறுகுடும்பத்தை ஏற்காதவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறன்

## திருச்சிமாவட்டத்தில் பெரியார் ஆற்றிய பேருரை



மனித சமுதாயம் மற்றப் பிராணிகளைவிட அறிவிலே சிறந்ததாகும். பகுத்தறிவு என்பது விஷயங்களைச் சிந்தித்துப் பார்த்து, அனுபவத்தையொட்டி நன்மை தீமைகள் அறிந்து நன்மைக்கு ஏற்றபடி— வளர்ச்சிக்கு ஏற்றபடி தன்னைத்தானே நடத்திச் செல்ல உதவி செய்யக்கூடிய அறிவாகும். அது மனிதனுக்குத்தான் இருக்கிறது. மற்ற ஜீவராசிகளுக்கு இல்லை. ஆகவே மனிதன்தான் கருத்துடையவன், சுதந்திரமாக வாழத் தகுந்தவன். மனிதன்தான் கவலையற்று சுகமாக வாழ்வதற்கு வசதி படைத்தவன்.

இவ்வளவு பெருமையுள்ள மனிதன் மிருகங்களைப் போல—மிருகங்களை விடக் கேவலமாக, சுதந்திரமற்ற அடிமையாகவும், கவலையோடும், ஒழுக்கம் நாணயம், இவைபற்றிக் கவலையில்லாமலும் வாழ வேண்டிய நிலைமையில் இருக்கின்றன்.

மனிதன் தனக்குள்ள அறிவின் பயனைக் கவலையற்று இருக்கலாம். சுதந்திரமாக இருக்கலாம். ஆனல் ஒழுக்கக் கேடாக—நாணயக்கேடாக நடந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. கவலையற்று எவனாவது இருக்கின்றனா என்றால், இல்லை என்று தான் சொல்ல நேரிடும். மற்றக் கோணங்களிலேயும் தெரிந்தெடுக்க முடியாது. இம்மாதிரியான நிலைமைக்கு ஏன் மனிதன் வருகிறன்? அவனுடைய அறிவு என்னவாயிற்று? சிந்தித்தோமேயானல், அது விளங்கும்.

### அளவற்ற பிள்ளைகளே தொல்லைகளுக்குக் காரணம்

முதலாவதாக அவனுடைய அறிவை இழந்து விடுகிறன். நம்மாலே என்னவாகும்—எல்லாம் கடவுள் செயல் என்று நினைப்பதாலே அறிவை இழக்கிறன். அறிவை இழந்து ஏன் அவ்வாறு பேசுகிறன் என்றால், எல்லாக் காரியங்களையும் அவனே செய்கிறன். எல்லாவற்றையும் அவனே அனுபவிக்கிறன். ஒரு காரியத்தைக் கூடக் கடவுளுக்கென்று ஒதுக்கி வைப்பதில்லை. ஒரு காரியத்தையாவது கடவுள் செய்யட்டுமே யென்று இவன் சும்மாவும் இருப்பதில்லை. அப்படிப் பழக்கத்திலிருக்கிற மனிதன் எல்லாம் கடவுள் செயல் என்று அறிவைப் பறி கொடுத்து விட்டான். எனவே மனிதனுக்கே உரிய அறிவின் ஆற்றலை அநுபவிக்கஅவனுக்கு வாய்ப்பில்லை. இந்த காரணத்தினலேதான் மனிதனகப் பிறந்தவர்களில், ஏறக்குறைய 100-க்கு 90 பேர் அல்லது 95 பேர் கவலைக்கு ஆளாகிறர்கள். கவலையோடு போவதில்லை. ஒழுக்கமாக— நாணயமாக நடந்து கொள்ள வேண்டுமென்கிற கவலையுமில்லை. பலரால் சுதந்திரமாகவும் இருக்க முடிவதில்லை. நமக்கு என்ன மற்றவர்கள் தயவு என்று இருக்கவும் முடிவதில்லை. அப்படிப்பட்ட பெரிய அறிவீனமான காரியத்துக்குக் காரணம் என்ன? மனிதனுக்கு ஏன் அப்படிப்பட்ட தொல்லை வரவேண்டும் என்பதைச் சிந்தித்தால், 100-க்கு 75 பாகம் அல்லது 80 பாகம், அளவற்ற பிள்ளைகள் பெற்றுக் கொள்வதனலேதான் என்பது புரியும். மனிதன் அடிமையாக—கவலை கொண்டவனக இருக்கிறன். ஒழுக்கம், நாணயம் இவைபற்றிக் கவலைப்படுவதில்லை. அப்படியெல்லாம் இருக்க வேண்டிய அவசியம் என்ன? ஏன் வந்தது அந்நிலை? பிள்ளைப் பெற்றுக் கொள்வதனலே பெரும்பாலும் இந்நிலை ஏற்படுகிறது. மனிதன் தன்னைக்கூட மறந்து விட்டான். தன் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டுமென்கிறன். பிள்ளையைப் படிக்க வைக்க வேண்டுமென்கிறன். பிள்ளைக்குச் சொத்துச் சேர்க்க வேண்டுமென்கிறன். பிள்ளை, பிள்ளை என்று நினைத்து இந்தக் காரியங்களுக்கெல்லாம் காரணமில்லாமல் கவலைப்படுகிறன். ஒழுக்கக் கேடாக நடந்துகொள்வதற்கும் துணிவு வந்து விடுகிறது. அனைவரும் அப்படியே இருப்பதால் யாருக்குமே அது புரியாது. கோடீஸ்வரன் எவனாவது நான்கு பிள்ளைகளைப் பெற்று விட்டால் அவற்றிற்காக அவன் தலை வணங்க வேண்டும். குழந்தைகளுக்காக அவன் எப்படி எப்படியோ நடந்து கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட கெட்ட நிலை இந்தக் குழந்தைகளைப் பெற்று கொள்வதாலே மனிதனுக்கு ஏற்படுகிறது.



### எல்லோரும் செய்வதால் அது குற்றமாகாதா ?

எவனும் குழந்தையைக் காப்பாற்றியாக வேண்டும். சாதாரணமாக இவையெல்லாம் தேவையில்லாத காரியங்கள். கவலை என்பது எல்லோருக்கும் தெரியும். துணிந்தே எல்லோரும் செய்கிறர்கள். அனைவரும் செய்வதாலே அதைக் குற்றமென்று யாரும் கருதுவதில்லை. அதனல் ஏற்படுகிற கேடு என்ன என்பதையும் சிந்திப்பதில்லை.

மனிதனுக்குக் குழந்தை வேண்டுமென்பதற்கு என்ன அவசியம்? மன்னிக்க வேண்டும். அவனவன் மனைவியோடு கலவி பண்ணினலும், குழந்தை வேண்டும் என்ற எண்ணத்தோடு அணுகுபவன் 100-க்கு 5 பேராகத்தான் இருக்க முடியும். ஏதோ இயற்கையான உணர்ச்சி காரணமாக அவனவனுக்கு ஏற்பட்டு விடுகிறது. வேண்டுமென்பதில்லை. அது எல்லோருக்கும் ஏற்படுவதனல் இல்லாதவனுக்கு அது பெரிய குறையாகத் தோன்றுகிறது.

இவையெல்லாம் தெரிந்தாலும்கூட அறிவாளி, 'என்னப்பா இப்படிக் கசாமுசாவென்று பெற்றுக் கொண்டாயே?' என்று கேட்டால், 'என் செயலா?' என்கிறன்! யார்? படித்தவன்! மன்னிக்க வேண்டும். டாக்டர் கூட அப்படி உறுதியாகச் சொல்லுகிறன்!.

யாரோ சில டாக்டர்கள் அறிவோடு நடந்து கொள்ளக்கூடும். மற்றவர்களெல்லாம்...? படித்தவன்— எம்.ஏ. அல்லது பி ஏ. படித்தவன்— டாக்டரானவன் இன்னும் பெரிய பெரிய விஞ்ஞானத்திலே கெட்டிக்காரனக இருப்பவன், அவன்கூட அப்படிச் சொல்லுகிறன்! என் செயலா அது?—எனக் கேட்கிறன். அப்படி நினைக்கத் தொடங்கி விட்டால் சில கஷ்டங்களைப்பற்றிச் சிந்திக்க முடியாமல் போய்விடும். ஆகவே, தான் செய்யும் அறிவீனமான காரியத்துக்குத் தானும் பொறுப்பு ஏற்றுக் கொள்ளாமல், முட்டாள்தனமாகத் தனக்குச் சம்பந்தமில்லை என்றும் சொல்லிக்கொண்டு, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதனலே வளர்ந்து கொண்டே வருகிறது இந்தக் காரியம்.



முன்பெல்லாம் எவன் எவ்வளவு பெற்றாலும் சரி, என்ற நிலை இருந்தது. அத்தனைக்கும் தானகவே கேடு வந்து விடும்; எண்ணிக்கை குறைந்து போகும். தொல்லை இல்லை. ஆனல் இப்போது கொஞ்சம் அறிவு வந்தது. அறிவை பயன்படுத்த முனைந்தவர்கள் முட்டாள்தனத்தைத் திருத்துவதற்கு அறிவைப் பயன்படுத்தாமல், வைத்தியம் முதலானவற்றையெல்லாம் செய்து கொள்ள ஆரம்பித்ததனல் நாம் கவலைப்பட வேண்டிய அளவுக்கு மக்கள் தொகை வளர்ந்து போய்விட்டது. பிள்ளைகளைப் பெறுவது என்பது இன்றைக்குத்தான் முட்டாள்தனமான காரியம்.

### வேதனைப்படுமளவுக்கு மக்கள் தொகை

100 அல்லது 200 அல்லது 500 அல்லது 1000 ஆண்டுகளுக்கு முன்னே அது முட்டாள்தனமல்லவே! அவன் பெற்றுக் கொண்டேயிருப்பான். அது செத்துக்கொண்டேயிருக்கும். 10 அல்லது 20 அல்லது 100 ஆண்டுகள் பொறுத்து எண்ணிப் பார்த்தால், பொது மக்களுடைய எண்ணிக்கையிலே ஒரு 5 சதவிகிதம் கூடப் பெருகியிருக்காது. ஏன்? பகவான் கொடுத்தான் பிள்ளையை என்றன். நோய் நொடி வந்து செத்தால், பகவான் கூட்டிக் கொண்டான் என்று சொன்னன். வரவு செலவே சரியாய்ப் போய் விடும். மிஞ்சினல் ஏதோ கொஞ்சம் மிஞ்சும். 200, 300 அல்லது 500 ஆண்டுகளுக்கப்புறந்தான் ஒன்றுக்கு இரண்டாகும். அதனல் அப்போது இந்தக் கஷ்டம் இல்லை. அதை வளர்ப்பதிலேயும் கஷ்டமில்லை. அதனல் மனிதனும் கஷ்டப்பட வேண்டிய நிலை இல்லை. ஆனல் அது எப்போது கவலைப்படக் கூடிய கட்டத்தை அடைந்தது? நோய் முதலானவற்றுக்கு அறிவைப் பயன்படுத்திப் பரிகாரம் தேட ஆரம்பித்ததும் — கடவுளுடைய செயலைப் பற்றிக் கொஞ்சம் அலட்சியமாக இருக்க ஆரம்பித்ததும். அப்புறம் எல்லாவற்றிற்கும் பரிகாரம் தேட ஆரம்பித்து விட்டோம். பரிகாரம் வலுத்து விட்டது. வேதனைப்படும்படியான அளவுக்கு மளமளவென்று மக்கள் தொகை வளர்ந்து விட்டது.

ஏறக்குறைய நம்முடைய நாட்டுக்கு வெள்ளைக்காரன் வராதிருந்தால் இந்தத் தொல்லையே நமக்கிருந்திருக்காது. இந்நமாதிரி கவலைப்பட வேண்டிய நிலையே தோன்றியிருக்காது. பிறக்கவும், சாகவும் கணக்குச் சரியாகப் போய்விடும்! அவன் வந்தான். வைத்தியம் பண்ண ஆரம்பித்தோம். மனிதனுக்குக் கொஞ்சம் அறிவு வரும்படியான சூழ்நிலைகளையெல்லாம் உண்டாக்கினன். மனிதன் இப்போது சாகவே முடியாமல் போய் விட்டது. நீண்டகாலம் வாழ்ந்துதான் சாகிறன். பிறப்பது எல்லாம் கல் போல இருக்கிறது. எளிதில் சாவதுமில்லை.



ஆக, கணக்குப் பார்த்தால், நாம் பயப்படுகிறநிலையை மக்கள் தொகை பெருக்கம் உருவாக்கி விட்டது. ஒரு 50 ஆண்டுகளுக்குள்ளே, 100 ஆண்டுகளுக்குள்ளே, எல்லாம் தலைகீழாகிப் போய் விட்டது. அதற்கு முக்கிய காரணம் வெள்ளைக்காரன் வந்ததேயாகும். நம்முடைய பழைய ராஜாக்களே இருந்திருந்தால் வரவு-செலவு சரியாக இருந்திருக்கும். அவர்கள் எல்லாம் கடவுள் சொன்னபடி நடப்பார்கள், அவ்வளவுதான்!

நமது தாய்மார்களும் பழைய மாதிரியே இருப்பார்கள். வைத்தியம் பார்த்தால் கடவுள் கோபித்துக் கொள்வார் என்று சொல்லுவார்கள். கவலை இருக்காது. இப்போது வைத்தியம் செய்யப்படுகிறது. எல்லா நோய்க்கும் வைத்தியம் — ஏறக்குறைய 100-க்கு 80 நோய்களுக்கு இப்போது வைத்தியம் கண்டுபிடித்து விட்டார்கள். அதனால் கண்டபடி யாரும் சாவதில்லை. மனிதர்களுடைய ஆயுள் வளர்ந்து கொண்டே போகிறது.

இன்றைக்கு நமது நாட்டைப் பொறுத்தவரைக்கும் மனிதனுடைய சராசரி வயது 50–க்கும் மேலாக உள்ளது. நல்ல முறையில் வைத்தியம் செய்து சாகாமல் பார்த்துக் கொள்கிறார்கள். பெருவாரியாகக் கொள்ளை கொண்ட காலரா, அம்மைப் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி விட்டார்கள். முன்பெல்லாம் காலரா, அம்மை வந்து விட்டால் வைத்தியம் செய்யக் கூடாது. செய்து கொள்ளமாட்டார்கள். செய்துகொண்டால் வீட்டில் உள்ளவர்கள் கோபித்துக் கொள்வார்கள்! காரணம் இன்னும் கொஞ்சம் அதிகமாக அம்மை வந்து விடும் என்பதுதான். கணக்குச் சரியாகப் போய்விடும். இன்று மாதிரி ஒன்றுக்கு இரண்டாக மூன்றாக அதிகமாகும் வழக்கம் இருக்காது.



### பகவான் கிருபையால் சாக்காடா?

அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கைப் பார்த்ததில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட தமிழ் நாட்டில் மாத்திரம் 100-க்கு 75 பேர் அதிகமாகியிருக்கிறார்கள் என அறிகிறோம். 1960-ஆம் ஆண்டிலே இருந்த எண்ணிக்கையைவிட, இப்போது மக்கள் தொகை அதிகமாகியிருக்கிறது.

சென்னை மாநகரில் இன்றைக்கு ஏறத்தாழ 30 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். காலரா வேகம் இருந்தால் சுகாதார அதிகாரியைப் பார்த்து, இந்த வாரம் எத்தனைப்பேர் செத்தார்கள் என்று ஒருவன் கேட்பான்; 8 பேர் செத்தார்கள் என்று பதில்வரும். உடனே பிடித்துக் கொள்வான், ஏன் 8 பேர் செத்தார்கள்—எப்படிச் செத்தார்கள் என்று கேட்பான். ''ஆத்தா கொண்டு போய் விட்டாள்—பகவான் பண்ணினார்'' என்று சுகாதார அதிகாரி பதில் சொல்ல முடியுமா? அடுத்த வாரத்தில் நிறுத்தி விடுவோம் என்பார். அதே மாதிரி அடுத்த வாரம் கேட்டால், எட்டிலிருந்து இரண்டுக்கு வந்துவிட்டது என்பார். ஆத்தா கீத்தா, கடவுள் கிடவுள்—அந்தப் பேச்செல்லாம் அங்கே சொல்ல முடியாது? இந்நிலையாலும் மக்கள் தொகை வளருகிறது. இப்போது அதனாலே எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது?



இப்போது இருக்கிற 'விடுதலை' ஆபீஸ் இடத்தைச் சதுர அடி ஒரு ரூபாய் என்று வாங்கினேன். ஒரு லட்சம் சதுர அடி; ஒரு லட்ச ரூபாய்க்கு வாங்கினேன். இன்றைக்கு ஒரு சதுர அடி ரூ. 70 என்று கணக்குப் போட்டு வரிபோட்டு விட்டார்கள்.

அதே ரூ. 70-க்குக் கேட்டால், நான் கொடுக்க மாட்டேன். ஏனென்றால் மக்கள் தொகை பெருகி விட்டது. வியாபாரம், தொழில் முதலியவற்றிற்கெல்லாம் இடம் வேண்டும்.

எங்கள் ஊரிலே எல்லாம் 30 ஆண்டுகளுக்கு முன்னே சதுர அடி



இரண்டு அணா மூன்று அணாவாக இருந்தது. இப்போது அங்கேயெல்லாம் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று ஆகிவிட்டது. மக்கள் தொகைப் பெருக்கம் அந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது. எல்லோருக்கும் வீடு, வாசல் வேண்டும். இடம் வாங்க வேண்டும், கட்டடம் கட்டவேண்டும். கிராக்கி ஆகி விடுகிறது.

### பூமி அதிகம் விளைந்தும் போதவில்லை!

அது மாத்திரமா? 100 ஆண்டுகளுக்கு முன்னே எங்கள் ஐயா சொன்னார் ''ஒரு ரூபாய்க்கு எட்டுபடி அரிசி. அதை வாங்குவதற்கு காசு இல்லை! மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள்! முனிசிபாலிடி வண்டியிலே பிணம் எடுத்துக் கொண்டு போகிறார்கள்!''. என்று தாது வருஷப் பஞ்சம் என்று சொல்லுவார்கள். அது ஏற்பட்டு, ஏறக்குறைய 80 அல்லது 90 ஆண்டுகளாகின்றன. அன்றைக்கு ரூபாய்க்கு 8 படி அரிசி. இன்றைக்கு ஒரு படி அரிசி ஒன்றரை ரூபாய் இரண்டு ரூபாய் என்கிறார்கள். அன்றைக்கு ரூபாய்க்கு 8 படி அரிசி விற்றது, மக்களால் வாங்க முடியவில்லை. காசு இல்லை! செத்தார்கள்! இன்றைக்கு அன்று விளைந்த பூமியை விட 3 அல்லது 4 பங்கு பூமி அதிகமாக விளைகிறது. அப்படி விளைவித்தும் மக்களுக்குப் போதவில்லை. எவ்வளவுதான் விவசாயம் அதிகமானாலும் மக்கள் அதற்கு மேலாகிவிடுகிறார்கள்.

மக்கள் தொகை வளர்ந்து கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் என்ன? மக்கள் ஒருபாவமும் செய்யவில்லை. பண்ணிய அக்கிரமம். கண்ணை மூடிக் கொண்டு பெற்றுத் தள்ளி விட்டதுதான்! கவலையே இல்லாமல் பெற்று விட்டோம். இத்திட்டத்திற்கு இப்பொழுதான் மக்கள் கொஞ்சம் காது கொடுக்கிறார்கள்.

இதற்கு முன்னே அதுகூட இல்லை. கண்ணை மூடிக்கொண்டு பெற்றுக் கொண்டே இருந்தான். ஏன்டா என்று கேட்டால், பகவான் கொடுத்தான், பகவான் கொடுத்தான் என்று சொன்னான். இன்னும் இது இப்படியே போனால் என்னவாகும்? அதற்காகத்தான் இப்பொழுது சொல்லுகிறேன், 25ஆண்டுகளுக்கு ஒருதடவை 100க்கு 50 அதிகமாகி விடுவார்கள். வரப் போகிற ஆண்டுகளில் அதைவிட இன்னும் அதிகமாவார்கள். ஏனென்றால், சாவு அவ்வளவு சுலபமாக ஏற்பட்டு விடுவதில்லை.


எந்த வியாதி வந்தாலும் மருத்துவர்கள் காப்பாற்றி விடுகிறார்கள். நூறு வயது வரை இருந்து, உடம்பெல்லாம் தளர்ந்து, இயந்திரங்களெல்லாம் தேய்ந்து, அதனுடைய சக்தியெல்லாம் தீர்ந்து அப்புறம் செத்தால் சாவார்கள். மற்றபடி சாவதில்லை.

என்னை எடுத்துக் கொள்ளுங்கள். நான் சாதாரணமாக 40 ஆண்டுகளுக்கு முன்பே செத்திருக்க வேண்டும். என்னுடைய சிநேகிதர்கள் எல்லாம் செத்துவிட்டார்கள். 40, 42 அல்லது 50 வயதிலேயே போய் விட்டார்கள். இப்போது எனக்கு 94 வயதாகிறது. நன்றாகத்தானிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் வைத்தியம்தான் காரணம். வேறு ஒன்றுமில்லை. ஏதாவது ஒன்று என்றால் வைத்தியரிடம் போய் விடுகிறார்கள். ஊசி போடுகிறார்கள்.

இந்தமாதிரி வசதிகள் எல்லாம் இருப்பதாலேதான் மக்கள் எளிதில் சாவதில்லை. புதிய புதிய மருந்துகளெல்லாம் கண்டு பிடிக்கிறார்கள். மற்றும் உடல் நலத்துக்குப் புதிய சக்தியெல்லாம் கொடுக்கிறார்கள். இப்படியே மனிதன் பெருகிக் கொண்டே போனால், அப்புறம் என்ன செய்வது? எப்படிச் சமாளிப்பது?

ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு—சோறு—வேலை வாய்ப்பு ஆகியவை தேவை. இதற்கெல்லாம் பரிகாரம் பிறப்பை நிறுத்துவதுதான். பிறப்பை நிறுத்துவோமானால் பிறந்த பிள்ளைகளும் நன்றாக இருக்கும். நான்கு பிள்ளைகள், எட்டு பிள்ளைகள் என்றில்லாமல், இரண்டு பிள்ளை மூன்று பிள்ளை என்றிருந்தால் பிள்ளைகளை, தாயும் நன்றாக நடத்துவாள். படிக்க வைப்பதும் இலகு. சர்க்காருக்கும் அதிக தொல்லை இருக்காது. எதற்காக இந்த சர்க்கார் இவ்வளவு பாடு படுகிறது?

அன்றைக்கெல்லாம் ஏன் பண்ணவில்லையென்றால், அப்போது கவலை இல்லை. உள்ளபடியே கொஞ்சம் எனக்குத்தான் தோன்றியது. ஒரு 30 ஆண்டுகளுக்கு முன்னே 'கர்ப்ப ஆட்சி' என்ற புத்தகம் போட்டேன். வெளிநாடுகளில் நடப்பதை அறிந்ததாலே அப்படி ஒரு புத்தகம் வெளியிட்டேன்.



நான் அன்றைக்கு இதுபற்றிச் சொன்னபோது பலருக்கு வேதனையாக இருந்தது. பிள்ளை பெற்றுக் கொள்ளக் கூடாதென்று உளறுகிறான் என்றார்கள். மதத்தின் பெயரால் கிறித்துவர்கள் கண்டபடி திட்டினார்கள். முகமதியர்களும் அப்படியே திட்டினார்கள். நம்மிடையே இருந்த



பக்திகாரர்களெல்லாம் ''இவனுக்கு ரொம்ப இடம் கொடுத்து விட்டோம்! என்னென்னமோ பேசுகிறான்!'' என்றார்கள். அவ்வளவு வேதனையாக இருந்தது!

## நான் எச்சரிக்கை செய்தது யாருக்கும் புரியவில்லை

அப்பொழுதுதான் இந்த கணக்குப் போட்டேன். எதிர்காலம் நமக்குப் பெரும் வேதனையானதாக இருக்கப் போகிறது—நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொன்னேன். யாருக்கும் புரியவே இல்லை. 1945—50-லேதான் மக்கள் நமது பேச்சுக்குக் காது கொடுத்தார்கள். அதுவரை அரசாங்கமும் காது கொடுக்கவில்லை. அப்புறம் கொஞ்சங் கொஞ்சமாக இதன் அவசியத்தை உணர்ந்து, குழந்தைகளை அதிகமாகப் பெறுவதைக் குறைக்க வேண்டுமென இப்போதுதான் தீவிரமாகச் செயல்படுகிறார்கள்.

குறைக்காவிட்டால் நாம்தான் எதிர்காலத்தில் கஷ்டப்படுவோம், உலகத்திலும் பெரிய கஷ்டம் ஏற்படும். மனிதனும் ஒழுக்கமாய், நாணயமாய் வாழ முடியாது. நாட்டிலே ஒழுக்கம் மிஞ்சாது. எல்லாம் பாழாய்ப்போய் விடும். மனிதனால் என்ன செய்ய முடியும்? பிள்ளைகள் அதிகமானால் வறுமையின்றி வாழ முடியுமா? பிள்ளைகளுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போல் சம்பளம் தான் பெருகுமா? எல்லாம் கணக்காகத்தான் இருக்கும். இரண்டு பிள்ளைகளுக்குச் செலவு செய்பவனும் அதே வரும்படியிலே தான் இருப்பான். எட்டுப் பிள்ளைகளுக்குச் செய்பவனும் அதே வரும்படியிலே தான் இருப்பான்.

பிள்ளை பெற்றுக் கொண்டேயிருந்தால் தொந்தரவு வளர்ந்துகொண்டே தான் போகும். அவன் நன்மைக்காக இன்னொருவன் தயவைக் கெஞ்சிக் கொண்டேயிருப்பான். சாதாரணமாக ஒரு அதிகாரியை அரசாங்கம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றி விட்டால், நம்மிடம் ஓடி வந்து, 'என்னை மாற்றிப் போட்டுட்டாங்கய்யா' என்கிறான். மாற்றினால் என்னய்யா என்று கேட்டால், 'எனக்கு ஆறு பிள்ளைகள்; நடுவில் மாற்றினால் என்னய்யா பண்ணுவேன்' என்கிறான். அட அங்கே போனால் என்ன பண்ணுவாயோ அது தானே இங்கேயும் செய்கிறாய்? அதனாலே என்ன என்று கேட்டால், 'நடுவிலே எப்படி ஐயா போவேன்' என்று ஏதாவது ஒரு சாக்குச் சொல்கிறான். பெண்டாட்டி கர்ப்பமாக இருக்கிறாள் என்று சொல்லுவான்; இல்லை என்றால், தான் போனால் குடும்பம் கெட்டுப் போய்விடும் என்பான்.

இதில் அரைவாசி அல்லது முக்கால் வாசி உண்மையாக இருக்கலாம். இந்த வேதனைக்கெல்லாம் சர்க்காரா பொறுப்பு? இல்லை என்றால் சர்க்கார் மீது கோவித்துக் கொள்கிறான்; இவனுக்குப் பதில் இன்னொருவனைப் போட்டால், அவன்வந்து விடுகிறான். தன்னை இப்படி மாற்றிவிட்டார்களே என்று கூறிக் கொண்டு, பிள்ளை ஐயா பிள்ளை ஐயா என்கிறான்! ஆகவே வாழ்விலே பிள்ளைகளைக் கவலையில்லாமல் பெற்று விடுவது—அப்புறம் இல்லாத கவலையையெல்லாம் தூக்கித் தோளிலே போட்டுக் கொண்டு வேதனைப்படுவது — ஒருவனுக்கு அடிமையாவது— இன்னொருவன் செய்கிற அக்கிரமங்களையெல்லாம் பொறுத்துக் கொள்வது! நாமே சில பல அக்கிரமங்களைச் செய்வது! இந்த மாதிரியான முட்டாள்தனமான காரியங்களை ஏன் செய்ய வேண்டும்? சிந்தித்துப் பார்த்தால் இது மிகமிகச் சுலபமான காரியம் என்பது புரியும்.

கொள்ளி வைக்க ஒரு பையன் வேண்டுமெனச் சொல்கிறான். பின் திவசம் பண்ண ஆள் வேண்டுமென்று கூறுகிறான். பிள்ளை இல்லாதவனைப் பார்த்துப் பாவி என்று சொல்லுகிறான். உன் வீட்டில் சோறு தின்பது பாவம் எனச் சொல்லுகிறான். இவையெல்லாம் எவ்வளவு அயோக்கியத்தனமான காரியம்? பிள்ளையில்லாவிட்டால் நரகத்துக்குப் போவோம் என்று எழுதுகிறான், வயிற்றுப் பிழைப்புக்காக! அதிலே நம்பிக்கையுள்ளவர்கள் நடுங்குகிறார்கள்.

இப்படிப் பல தொல்லைகள் வந்து, பரிகாரம் பண்ண முடியாத கேட்டை உண்டாக்கி விட்டது. இல்லாவிட்டால் இன்றைக்கு எவ்வளவு சௌகரியம் பண்ணமுடியும்? இவ்வளவு கூட்டம், இவ்வளவு தொல்லையில்லாவிட்டால் மக்கள் எவ்வளவு சௌகரியமாக இருக்கலாம்.



ஏதோ சில பேர் உத்தியோகத்திலே சௌகரியமாக இருக்கிறார்களே தவிர மற்றவர்களெல்லாம்— 100-க்கு 80 பேர் சோற்றுக்காக மூட்டை தூக்கவும், வண்டி இழுக்கவும், கடப்பாறையைத் தூக்கவும், சுமக்கவும் வேண்டியிருக்கிறது. 100-க்கு 20 பேர்தான் சௌகரியமாக இருக்கிறார்கள்.

பிள்ளை குட்டிகளை என்னவாவது செய்து வளர்க்க வேண்டியிருக்கிறது. என்னடா, கல்யாணமாகி இரண்டு வருடம் கூட ஆகவில்லை, இப்படி மூன்று பிள்ளைகள் வைத்திருக்கிறாயே என்றால், நான் என்ன பண்ணட்டும் என்று சொல்கிறான்! குழந்தை பெற்றுக் கொள்கிற விஷயத்திலே மக்களுக்குக்கவலையில்லை, அறிவில்லை —மிகுந்த முட்டாள்தனம்—மானமும் இல்லை.

## வெட்கப்பட வேண்டிய காரியமல்ல!

அட மடையா, கடவுள் பிள்ளைகளைக் கொடுப்பதாக இருந்தால், 3 அல்லது 4 பிள்ளைகள் ஆனவுடனேயே, உன்சம்பளம் இவ்வளவுதானே; திண்டாடுவாயே என்று கடவுளுக்குத் தெரியாதா? அல்லது பிழைப்பதற்கு உனக்கு வேறு வழி செய்யமாட்டானா? அதற்கெல்லாம் மட்டும் நீ அலைந்து திரிகிறாய். மற்றவற்றிற்கு மட்டும் கடவுள் மேலே சாக்குப் போடுகிறாயே? சில பேர், 'நான் சொன்னாலும் என் வீட்டுக்காரி சம்மதிக்க மாட்டேன் என்கிறாள்' என்பார்கள். இதனாலே அப்புறம் நீதாண்டா தொல்லைப் படுவே என்றுசொன்னால், 'அவளாலே கூட ஒன்றுமில்லை. அவங்க அம்மா வந்து சொல்லிவிட்டுப் போய் விட்டாள்' என்பான். அதனாலே எவ்வளவு வேதனை வருகிறது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இது மிகத் தெளிவான சங்கதியாகும். வெட்கப்பட வேண்டிய சங்கதி என்று ஒதுக்கக் கூடாது.

மக்கள் பெருக்கத்தினாலே மனித சமுதாயத்துக்கு ஏதாவது நன்மையுண்டா? மக்கள் பெருக்கத்தால் உலக சமுதாய முன்னேற்றத்திற்கான புதிய புதிய முயற்சிகள் ஏதாவது வளர்ந்ததா? பெருகிக் கொண்டே இருக்கிற மக்கள் தொகையால் வேதனையும், தொல்லையும்தான் வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவே மனித சமுதாயம் கவலையற்றதாக இருக்க வேண்டுமானால் —மக்கள் எல்லாம் சுதந்தரமாக இருக்க வேண்டுமானால்—கூடுமான வரையில் ஒழுங்காக வாழ முயற்சிக்க வேண்டுமென்றால், குழந்தைகுட்டிகளால் உண்டாகும் கவலை இருக்கக் கூடாது. மனிதனுக்கு இந்தக் கவலை இல்லாது போனால் தவறு பண்ண வேண்டிய அவசியமே வராது. அதைப்பற்றி யாரும் சொல்லவில்லை; காரண காரியங்களை யாரும் எடுத்துச் சொல்வதில்லை. அவன் பண்ணுகிறான் —இவன் பண்ணுகிறான் — நாமும் அப்படித்தான் இருக்கவேண்டுமெனச் செய்து கொண்டிருக்கிறோம்.

பொது ஒழுக்கம், பொது வாழ்வு, பொது நலம் எல்லாம் பாழாகி விட்டது. அதிகமாய்க் கஷ்டப்பட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது.







## சட்டத்தின் மூலம் நிறுத்த வேண்டும்!

மக்களுக்கு இன்னும் பூரண அறிவு வர வேண்டும். வந்து விட்டால் சட்டத்தின் மூலமே இவற்றையெல்லாம் நிறுத்திப் போட வேண்டும். உத்தியோகம் கொடுப்பதிலேயும் கணக்காகக் கொடுக்க வேண்டும். ஒரு பிள்ளை, இரண்டு பிள்ளைகளுக்கு மேலே பெற்றால் அவனை அங்கேயே மட்டம் தட்ட வேண்டும். பதவி உயர்வு கொடுக்கக் கூடாது. லஞ்சம் வாங்கினவனை மன்னித்தாலும் மன்னிக்கலாம், மூன்று பிள்ளை பெற்றவனை மன்னிக்கக் கூடாது! இப்படிச் சட்டம் போட்டு விட்டால் எவன் சண்டை போடுவான்?





மேலும் இந்தக் கல்யாணம் என்கிற முறைகளையெல்லாம் மாற்ற வேண்டும். இப்போது கல்யாணம் என்று சொன்னால், கேள்வி கேட்பாரே இல்லை. எப்படியாவது நடக்க வேண்டும். பிள்ளை பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

வருங்காலத்திலே கல்யாணத்தைக் கட்டுப் படுத்த வேண்டும். இப்பொழுதே கட்டுப்படுத்த வேண்டும். 20 அல்லது 22 வயதுக்கு முன்னாலே கல்யாணம் செய்யக் கூடாது என்று சொல்லி விட்டால், இரண்டு அல்லது மூன்றுபிள்ளைகளோடு நின்றுபோகும். இப்படியெல்லாம் சர்க்கார் கட்டுப்பாடு பண்ண வேண்டும். வயது வந்தவுடனே கல்யாணம்; கல்யானம் ஆனவுடனேயே குடும்பம்; உடனே பிள்ளை குட்டிகள்! பின் பிள்ளைகுட்டிகளை காப்பாற்ற வேண்டியது! அவனுடைய வாழ்வு அதோடு தீர்ந்து போய்விடும்.

ஒவ்வொருவனும் அவனுடைய குடும்பத்துடன் நின்று விடுகிறான். பிள்ளை இல்லையென்றால் — கவலை இல்லையென்றால் அந்த மனிதன் ஏதாவது வேலை செய்துதானே தீர வேண்டும். புதுமையைக் கண்டு பிடிப்பான். மனித சமுதாய வளர்ச்சிக்கேற்ற காரியங்களைச் செய்வதில் அவன் பயன்படுவான். இப்பொழுது அவனவன் தன் குடும்பத்தைப் பார்த்துக்கொள்வது தவிர எவனும் எதற்கும் பயன்படுவதில்லையே! பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதாலே அத்தனை பேரும் காசுக்கு உதவாத மனிதர்களாகி விட்டார்களே. பெண்கள் யாரும் சமுதாயத்துக்கு உபயோகமாயில்லையே ஏன்? குடும்பத்தை –புருஷனை—பிள்ளை குட்டிகளைப் பாதுகாக்கிற வேலையைத் தவிர வேறு எதிலும் ஈடுபடுவதில்லை. இதனால் எத்தனைக் கோடி பேர் வீணாகி விட்டார்கள்! பிள்ளை பெறுவதும், புருஷனுக்குக் கால் கை பிடித்து விடுவதும் தவிர நமது பெண்கள் சமுதாயப் பணிகளில் ஈடுபடுவதில்லை.

ஏன் நாம் முன்னேறவில்லை? உலகம் முன்னேறினாலும் நாம் ஏன் இன்னும் முட்டாள்களாகவே இருக்கின்றோம்? உலகத்தைத் தெரிந்து கொள்ள நமக்கு வாய்ப்புஇல்லையே. வாழ்க்கையில் வேறு ஒன்றும் இருக்கிறது என்பது புரியவில்லையே. எனவே மனித சமுதாயம் புதிய வாழ்வுக்குப் பயன்பட வேண்டுமானால் ஒரேவழிதான் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணமாய் இருப்பது—





அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதுதான். அது ஒரு பெரிய முட்டாள்தனம், அறிவீனம். அதாவது தனக்கு ஒன்றும் தெரியாது —தன் கையாலே ஒன்றும் ஆகாது—தன்னாலே ஒரு காரியமும் செய்ய முடியாது—எல்லாம் பகவான் செய்வது என எண்ணுகின்ற எண்ணம் முதலில் ஒழிய வேண்டும்.

நான் பகவானைக் குறை சொல்கிறேன் என்று கருதாதீர்கள். பகவான் செயல் என்று சொல்லி விட்டு, எல்லாவற்றையும் இவனே செய்கிறான் இந்த முட்டாள்தனம் மனிதனை எப்படி வாழ வைக்கும்? மனிதனுக்கு இருப்பது உயர்ந்த அறிவு. அந்த அறிவைக் கொண்டு போய் இப்படிப் பாழ் பண்ணி விட்டான் என்றால் அவன் எதற்கு உதவுவான்? மனிதன் பக்குவமடைய வேண்டும். தன்னை—தன் சக்தியை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தத் தெரியாமல் மனிதன் பிணமாகிறான். அதுவும் அவன் பொய்யான காரியத்தை நினைத்துக்கொண்டு முட்டாள்தனமாக வேதனைப்படுகிறான். ஆகவே மனித சமுதாயத்துக்குக் கடவுள் உணர்ச்சி என்பது ஒரு பெரிய கேடாக வந்து சேர்ந்தது.

## 10 மாதம் சுமக்காமல் குழந்தை!

எல்லாம் கடவுள் செயல், நான் என்ன பண்ணுவது? என்பவனுக்குச் சொல்கிறேன் நான். ஆணுடைய இந்திரியம், பெண்ணுடைய இந்திரியம், இந்த இரண்டிலும் உள்ள ஜீவ அணுவை எடுத்துக் கொள்வது. அந்த இரண்டையும் ஒரு பாட்டிலிலே போடுவது. அதற்குள்ளே அது இரண்டும் வளர்ந்து 'கியா' 'கியா' என்று கத்திக்கொண்டிருக்கும். இது ஒன்றும் அதிசயமில்லை. அந்த அம்மாள் கர்ப்பமாக வேண்டியதில்லை. பத்து மாதம் சுமந்துகொண்டு திரிய வேண்டியதில்லை. மருத்துவச்சி வேண்டாம். டாக்டர் வேண்டாம். குழந்தை உண்டாகிவிடும்.

இதெல்லாம் நான் சொல்வதில்லை. பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதாவது கலவி இல்லாமல்—தாயாரும் கர்ப்பமாகாமல்—பத்து மாதம் சுமக்காமல் பிள்ளை பெறுவதுதான் இந்த முறை.

இந்த முறையை நானே எழுதியிருக்கிறேன். 1930-லே நானும் அண்ணாவுமா சேர்ந்து ஒரு கல்யாணத்திலே பேசுகிறபோது, நான் பேசியிருக்கிறேன். பேசியபின் புத்தகத்திலே எழுதியும் இருக்கிறேன்.

பிள்ளைப்பேற்றுக்கு ஆண் பெண் சேர்க்கை என்பது கூட நீக்கப் படலாம். நல்ல திடகாத்திரமான, புத்தி நுட்பமான பொலி காளைகள் போல் தெரிந்தெடுத்த மணிபோன்ற பொதுமக்கள் வளர்க்கப் பட்டு, அவர்கள் இந்திரியத்தை ஊசிமூலம் பெண்கள் கருப்பையில் செலுத்தி, ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்படும். இது எழுதியது 1938-ஆம் ஆண்டிலே. அதிசியமாக இருக்கலாம். முன்பெல்லாம் கோழி முட்டையிட்டால் அது அடை காத்துத் தானே ஆகவேண்டும். இப்போது அப்படியா செய்கிறார்கள். விவசாயப் பண்ணையிலே முட்டைகளையெல்லாம் வாங்கி, மேசை மேலே—அலமாரியிலே வரிசையாக அடுக்கி, கிழே உஷ்ணத்தை விளக்கு மூலமாக ஏற்படுத்துகிறார்கள். குறிப்பிட்ட நாள் வந்ததும் குஞ்சு மூக்கை நீட்டுகிறது. ஆக முட்டை இடுகிற வேலைதான் கோழிக்கு. அதே மாதிரி இது கருவிலே இருந்து எடுத்துப் பண்ணுவதாகும்.



மேலும் அன்றைக்கே எழுதியிருக்கிறேன். மக்கள் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குக் கொண்டு வரப்படும். இது செய்ய வேண்டிய ஒன்று; நடக்கக் கூடியதும் கூட. மனிதனுடைய அறிவுக்கு உட்பட்டு, நம் நாட்டு மக்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லே. காரணம் நேற்று வரைக்கும் 100-க்கு 5 பேர்தான் படித்திருந்தார்கள். எப்போது?

நான் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த அன்றைக்கு, நான் எழுதி வெளியிட்ட அறிக்கையில் நமது நாட்டு மக்களில் 100-க்கு 5 பேர்தான் படித்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இன்றைக்கு நமது மக்களில் ஏறக்குறைய 35 பேர்களோ அல்லது 37 பேர்களோ படித்தவர்களாக இருக்கிருர்கள். ஆண்கள் 57 பேர். பெண்கள் 27 பேர். படிப்பு இன்னும் அதிகம் வேண்டும். மேல்நாட்டிலே 100-க்கு 90 பேர் படித்திருக்கிருர்கள். ஆனல் நமது நாட்டில் 37 பேர். இது இன்னும் அதிகமாகும். எல்லோரும் படித்து விடுவார்கள். எல்லோருக்கும் எல்லா விஷயமும் வெளியில் தெரியும். அப்போது சிந்திக்கிற அறிவும் வரும். நாம் இவ்வளவு மோசமானதற்குக் காரணம் படிப்பே இல்லாததுதான். நமக்குப் பழக்கமானது பூராவும் கடவுள் சங்கதி. கடவுளின் பெயரால் புராணம், கதைகள், ராமன், கிருஷ்ணன், கந்தன், வெங்காயம் இவர்களுடைய கதை. இந்தக் கதையெல்லாம் ஜால வித்தைமாதிரி—அது பண்ணினுன்—இது பண்ணினுன்—மனித சக்திக்கு மேம்பட்டது. ஆக மனிதனே, அறிவே இல்லாமல் கொழுக்கட்டையாக ஆக்கிப்போட்டான். மிகப் பேசுவான் கடவுளேப்பற்றி. நாம் பேசினுல் உனக்கு என்னடா தெரியும் என்று கேட்பான்! அவனும் சிந்திக்கமாட்டான். இந்த மாதிரி மடமை இருந்ததனுலேதான், இப்பொழுது எதைப் பார்த்தாலும் ஏதோ புதுமை மாதிரியே தெரியுது. இப்போது நான் சொல்வதையெல்லாம், வெகு நாளேக்கு முன்பே மற்ற நாட்டார்கள் எல்லாம் நடத்தி விட்டார்கள்.





இதிலே மற்ற விஷயங்களேப்பற்றி நான் சொல்வதை விரிவுபடுத்திக் கொள்ளவில்லே. மனிதனுக்கிருக்கிற பெரிய குறைபாடு, அவனுடைய அறிவைச் சரியாகப் பயன்படுத்தாமல், தவருன வழியிலே விட்டு விட்டு அதன் பின்னுலேயே செல்கிருன் என்பதுதான்.

## கடவுள் பெயரைச் சொல்லி...!

நான் துணிந்துதான் சொல்கிறேன். மனிதனுக்கு இந்தமாதிரிக் காரியங்களிலெல்லாம் உணர்ச்சி வர வேண்டுமானுல், அவனுக்கு இருக்கிற அந்த முட்டாள்தனமான கருத்தை—எல்லாம் கடவுள் செயல், சர்வ சக்தியுள்ள கடவுள் பார்த்துக் கொள்வான் என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டும். ஒரு காரியமும் கடவுளாலே ஆகாது. நாம்தான் முட்டாள்தனமாகச் சொல்லிக் கொண்டிருக்கிருேம் என்ற எண்ணம் வரவேண்டும். அப்படிப்பட்ட கடவுளே எவனும் சொல்லவுமில்லே. அது எங்கேயும் இல்லவுமில்லே.

கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு நாம்தான் மடையர்களாகிருேமே தவிர, நமக்குப் பயன்படும்படியான கடவுள் ஒன்றைக்கூட, கடவுளே உற்பத்தி பண்ணினவன் எவனும் செய்யவே இல்லே. என்னமோ முட்டாள்தனமாகப் பண்ணி விட்டார்கள். மக்கள் அதைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். அதைப் பரப்புவதற்குப் பல ஸ்தாபனங்களே வைத்து விட்டார்கள். அதனுலே பயன் அடைய சிலர் ஏற்பட்டு விட்டார்கள். அது மாற மாட்டேனென்கிறது. அந்த எண்ணம் மாற வேண்டும்.

அறிவுக்குப் பயன்பட்டால் எடுத்துக் கொள்ளலாம். நம்பித்தான் ஆகவேண்டுமென்கிற ஒன்றைக்கூட நாம் பயன்படுத்தக்கூடாது. மனிதன் உண்மையைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பே இல்லே. பள்ளிக்கூடத்திலும் அந்தக் கருத்துத்தான். இந்தக் கருத்தைப்பற்றி கேள்வி இல்லே. அதற்கு எவ்வளவு உரிமை கொடுக்கிருர்களோ, அவ்வளவு அறிவுக்கும் கொடுத்து மக்களிடையே பிரச்சாரம் செய்தால், பிள்ளேகளுக்கு அறிவைப் புகட்டியிருந்தால், இதற்கு இவ்வளவு நாள் வேண்டியதில்லேயே. அது கூடாது—அதையெல்லாம் பேசக்கூடாது—அது நாத்திகம் — அது கடவுளுக்கு விரோதம் — அது சாஸ்திரத்துக்கு விரோதம்— இப்படிச் சொல்லிச் சொல்லி அடக்கிக் கொண்டே வந்ததனுலேதான், அயோக்கியனும் வளருகிருன், மடத்தனமும் வளர்ந்து கொண்டே வருகிறது!





இப்பொழுது நமது நாட்டிலே பெரியதொரு உணர்ச்சி வளர்ந்து வருகிறது. அதுதான் பகுத்தறிவு உணர்ச்சி. அதன்வழி எங்கு பார்த்தாலும் பகுத்தறிவுக் கழகம் ஏற்பட்டு வருகிறது. இப்போது 100 அல்லது 150 உள்ளன.

கண்டவர்களெல்லாம் சேருகிற கழகமல்ல அது. பெரிய அறிவாளிகள், கலெக்டர்கள், மந்திரிகள், பெரிய பெரிய உத்தியோகத்திலே இருக்கிற அறிவாளிகள் ஆகிய இப்படிப் பட்டவர்கள் அதற்கு ஆதரவு கொடுக்கிருர்கள், அது வளர்ந்துகொண்டேயிருக்கிறது.

நாம் ஒருவரையொருவர் சந்திக்கும்போதெல்லாம் மூடநம்பிக்கைகளேப்பற்றி எடுத்துப் பேச வேண்டும். வெளிநாட்டிலே உண்டாகியிருக்கிற விஞ்ஞான அதிசய அற்புதங்களேயெல்லாம் பார்க்க வேண்டும். பகுத்தறிவுக்கென்றே பத்திரிகைகள், புத்தகங்கள் இவைகளேயெல்லாம் வாங்கிப் படிக்க வேண்டும்.

நம்புங்கள் என்று நான் சொல்லவில்லே. படிக்க வேண்டும், சிந்திக்க



வேண்டும். சிந்தித்து உனக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அறிவுக்குத் தோன்றினாலும், மதத்துக்கு விரோதம். கடவுளுக்கு விரோதம் என்னும் முட்டாள் தனமான கருத்தே இருக்கக்கூடாது. இருந்தால் சரியாய்ப் போய் விடும். இப்போது குழந்தை பெற்றுக் கொள்வதிலேயும் ஏராளமான கருத்துக்கள். அது வந்து புகுந்ததும்தானே மனிதனுக்கு கொஞ்சங்கூட புரியமாட்டேனென்கிறது.

நான் கேட்டுக் கொள்வதெல்லாம் சொன்னதையெல்லாம் நம்புங்கள் என்பதில்லை. நான் சொன்னபடி நடக்க வேண்டுமென்பதில்லை. நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். கேட்டதைப் போய் உட்கார்ந்துகொண்டு சிந்தியுங்கள். சரியா தப்பா என்ன, ஏதென்று ஆராயுங்கள்.

உங்கள் ஆராய்ச்சியிலே எது சரியென்று படுகிறதோ அதையே எடுத்துக் கொள்ளுங்கள். அப்படியல்லாமல் யார், எதைச் சொன்னாலும் நம்பித்தான் ஆகவேண்டும் என்றால், அப்பொழுது இன்னொருத்தன் சொல்லுவதையும் நம்பு என்று தான்சொல்லுவான். இன்றைய வரைக்கும் சொன்னதையெல்லாம் நம்பி நம்பி, கண்டது என்ன?

பொதுவாக நம்முடைய முன்னேற்றமே, நாம் பிள்ளை பெறுவதை எவ்வளவு குறைத்துக்கொள்கிறோமோ அதிலேதான் இருக்கிறது. அதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

இப்பொழுது நமது அரசாங்கம் பிள்ளையே பெற்றுக் கொள்ளக் கூடாது என்று சொல்லவில்லை. இரண்டு போதுமென்றுதான் சொல்லுகிறார்கள். அதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும. ஒவ்வொரு திருமணத்திலேயும் அதைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் புரியும்படியாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதற்கு வேண்டிய திட்டமெல்லாம் நாளாக நாளாக—நமது மக்களுக்கு அறிவு வளர வளர—நமது அரசாங்கத்துக்குத் துணிவு ஏற்பட ஏற்பட நடக்கும். நடக்காது என்று நினைக்காதீர்கள்; நடக்கும். அதற்கு யாரும் முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. ஆதரவு அளிக்க வேண்டுமென்பதுதான் என் வேண்டுகோளாகும்.





# அடுத்த ஆண்டு முதல் பல் மருத்துவப்பிரிவு தனித்துறையாக இயங்கும்!

தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. ஆர்.



சென்னை மருத்துவக் கல்லூரி பல் மருத்துவப் பிரிவின் வெள்ளி விழாவையொட்டி திருச்சி ஆமூர் கிராமத்தில் நடத்தப்பட்ட பல் மருத்துவ முகாமிற்கு வருகை தந்த முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், கிராமக் குழந்தைகளுக்குப் பல் விளக்குவதற்கான 'பிரஷ்' முதலானவற்றை வழங்கினார்.

*[மதுரை மாநகரில் 28-7-78-ம் நாளன்று நடந்த பல் மருத்துவப் பிரிவு வெள்ளி விழாவைத் துவக்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய உரை.]*

மக்கள் நல்வாழ்வு என்று சொல்லி வெவ்வேறு உடல் உறுப்புக்களுக்கான பல்வேறு பிரிவுகள் மருத்துவக் கல்வித்துறையில் இருக்கின்றபோது, எங்களுக்கும் ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்கின்ற உங்களது உரிமையை நான் மதிக்கின்றேன். உண்மையிலேயே அதில் எங்களுக்கு அக்கறை இருக்கிறதென்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காசோலை தந்து இருப்பவர்கள், எந்தக் காரணத்திற்காகத் தந்திருக்கிறார்கள் என்பதையும் என்னால் ஊகிக்க முடிகிறது. ஏதோ ஆயிரக்கணக்காக, நூற்றுக் கணக்காகச் சம்பாதிக்கின்ற நாங்களே இப்படி கொடுக்கின்றோம். கோடிக்கணக்காக பணத்தை வரியாக வாங்குகின்ற நீங்கள் இதைச் செய்யக் கூடாதா என்ற கேள்வி அதோடு தொக்கி நிற்கிறது என்பதையும் நான் உணராமல் இல்லை.

உண்மையில் நான் பற்களை எப்படிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்—எந்த அளவுக்குத் தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டவன் என்பதைச் சொல்லிக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். இடத்திற்குத் தக்கவாறு பேசி மக்களுடைய கை தட்டை வாங்கி போய் விடுகின்றவன் நான் அல்ல என்பதை நீங்கள் உணர்வீர்கள். என் உள்ளத்திற்கு எது சரியென்றுபடுகின்றதோ அதை, மற்றவர்கள் கோபித்துக் கொண்டாலும் கூட வெளியிடுகின்றவன் நான் என்பதும் உங்களுக்குத் தெரியும். அந்த வகையில்தான் நான் என்னுடைய கருத்துக்களை மக்கள் முன் எடுத்து வைக்கின்ற பணியைச் செய்து கொண்டிருக்கிறேன்.

பற்கள் சுத்தமாக இல்லாவிட்டால் உண்ணுகின்ற உணவுகள் அத்தனையும், எந்தளவுக்குக் கெட்டுப்போன பொருளாக வயிற்றுக்குள் செல்லுகின்றது என்பதை இன்னமும் பலர் புரிந்து கொள்ளவில்லை என்பதை நான் நன்றாக உணர்ந்தவன். பெருமைக்காகச் சொல்லவில்லை. நான் அசைவ உணவை ஆசையோடு சாப்பிடுகின்றவன். அதிலும் எலும்புகளைக் கடித்துச் சாப்பிடுவது என்றால் சுவைத்து ரசித்துச் சாப்பிடுகின்றவன். அந்த அளவுக்கு இன்னமும் எனக்கு பற்கள் உறுதியாக இருக்கின்றன. அதற்குக் காரணம் என்னுடைய தாய் எனக்கு செய்த உதவி என்றும், தந்த உபதேசம் என்றும் கூடச் சொல்லலாம்.

மூன்று பழமொழிகள் உண்டு.

குத்தினால் பல் கெடும்

இதை யாரும் தெரிந்து கொள்வதில்லை. சாப்பிட்ட பிற்பாடு தனியாக குச்சி ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு பல்லைக் குத்திக் கொண்டே இருப்பார்கள். அதைப் பெருமையாகக் கூட சிலர் கருதுவார்கள். அந்தக் காரியத்தை மிகுந்த விடாமுயற்சியோடு செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அது போல்

''தொட்டு கெடும் கண்'' என்பார்கள். கண்ணை கையால் அடிக்கடி தொட்டுஅசுத்தமாக்கிக் கொண்டிருந்தால் கண் விரைவிலே பாழாகி விடும்.

''தொடாமல் கெடும் தலை'' என்பார்கள். சரியாக குளித்துச் சீவி, சிக்கு எடுத்து முறையாக வைத்துக் கொள்

ளாவிட்டால் தலை கெட்டு விடும். அதனால் பல தீமைகள் ஏற்படுவதுண்டு. இதுபோல் பற்களுடைய ஈறை வலுவாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதும், எதை யெதைக் கொண்டு பல் துலக்க வேண்டுமென்பதும்' ஏதாவது ஒரு பல் வலிக்கின்றதென்றால் உடனடியாக மருத்துவரைக் காண வேண்டுமென்றும் எண்ணிச் செயல்படுவதில்லை. ஏதோ மருத்துவம் என்று கருதி யார் யாரோ சொல்வதையெல்லாம் கேட்டுக் கடைசியில் அந்தப் பல் கெட்டுப் போய்விட்டது என்று சொல்வது போல ஒரு பல்லை பிடுங்கப்போய் கடைசியில் எல்லாப் பற்களையும் இழந்து புதிதாக பல் கட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு சிலர் ஆளாவதை நாம் பார்க்கின்றோம்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதை நான் வேடிக்கைக்காகக் குறிப்பிடவில்லை. வேடிக்கையாக குறிப்பிடவில்லை. உண்மையிலேயே உணர்ந்து சொல்லுகின்றேன். பற்களை நன்றாக சுத்தமாக வைத்துக் கொள்ளும் பொழுது அதனால் ஏற்படுகின்ற நல்ல விளைவுகள் உடலைப் பேணிப் பாதுகாக்கின்ற முறைகளில் ஒன்று என்பதை நாட்டு மக்களுக்குச் சொல்வது நல்லதொரு பணியாகும்.

## பல் மருத்துவம் தனிப்பிரிவாகும்!

அந்தப் பணியைச் செய்கின்ற நீங்கள், மற்ற மருத்துவப் பிரிவுகளிலே பணிபுரிபவர்களைவிட கீழானவர்கள் என்று பிறர் கருதுகின்றார்களோ என்று ஐயப்பாடு எழுகின்ற அளவுக்கு, உங்களுடைய வசதியும், வாய்ப்பும் அல்லது உங்களுக்குத் தந்திருக்கின்ற தகுதி உயர்வும் குறைவாக இருப்பது போன்ற மனக்குறை உங்களுக்கு இருக்கிறதென்பதை இங்கே சொல்லப்பட்ட தகவல்களிலிருந்து நான் அறிகிறேன். அது நிச்சயமாகப் போக்கப்படும். அடுத்த ஆண்டு இதற்கென தனி ஒரு பிரிவு ஏற்படுத்த நிதிநிலை அறிக்கையில் நிச்சயமாக அதற்காகவென்று பணம் ஒதுக்கப்படும் என்றும் நான் இங்கே மனநிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நிதியை ஒதுக்கிவிட்டால் மட்டும் போதாது. அதைப் பயன் படுத்திக் கொள்கின்ற நீங்கள் எந்த உணர்ச்சியோடு, எந்த எண்ணத்தோடு கருத்துக்களை எடுத்து வைத்தீர்களோ அதேபோல் பெரும் பொறுப்போடு செயலாற்றவும் வேண்டும்.

குறிப்பாகக் கிராமப்புற மக்கள் எப்படி எப்படியெல்லாம் பல் துலக்குகிறார்கள் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. வேப்பங்குச்சி, ஆலம் குச்சி போன்றவைகளையெல்லாம் கூடப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்

கள். சில பெரியவர்கள் கூட சொல்வார்கள். ''எனக்கு 75 வயதாகி விட்டது. பல் அசைவது கிடையாது. என்னுடைய பற்களிலே ஒரு குற்றமும் இல்லை; குறையும் இல்லை. அதற்குக் காரணம் நான் இப்படித்தான் பல் துலக்குவேன்''. என்று சொல்வாரும் உண்டு. ஆனால் அதுதான் முடிவான முடிவா என்பது பற்றி ஆராய்ச்சி செய்யலாம். அவர்களுக்குத் தேவையானவற்றை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

எல்லோரும் பல் துலக்குவதற்கு ''டூத் பிரஷ்'' வைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது. அதுவும் வானொலியிலே வருகின்ற விளம்பரங்கள், ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கின்ற விளம்பரங்கள் ஆகியவற்றை எல்லாம் பார்க்கின்ற போது வெவ்வேறு கருத்துக்கள் உருவாகும். ஒரு விளம்பரத்தைப் பார்த்து பற்களை பாதுகாத்துக் கொள்ள இந்த பேஸ்ட்டை வாங்கலாம் என்று கருதி, மறுபுறம் திரும்பினால் அங்கே இன்னொரு விளம்பரம் இருக்கும். அதிலேயும் டாக்டர்களாலே அனுமதிக்கப்பட்ட பற்பசை என்று குறிப்பிடப்பட்டிருக்கும். டாக்டர்களே ஆராய்ந்து கண்டுபிடித்துக் கொடுத்திருக்கின்றார்கள் என்று இன்னொரு விளம்பரம் கூறும். இதை யார் தேர்ந்தெடுப்பது? எது மக்களுக்குத் தேவை என்பது பற்றி யார் முடிவு எடுப்பது என்பது உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் முடிவு சொல்லியாக வேண்டும். சில சமயம் வியாபாரத்தில் தங்களுக்கு குறை ஏற்படுவதற்குக் காரணமாக யாராவது இருக்கின்றார்களென்றால் உடனே கோர்ட்டுக்குப் போய் விடுவார்கள். எங்களுடைய தயாரிப்பைக் குறை கூறுகிறார்கள். ஆகையாலே எங்களுக்கு வியாபாரம் கெட்டு விட்டது, எனவே இந்த டாக்டர்கள் மீது வழக்குத் தொடர்கிறோம் என்று கோர்ட்டுக்குப் போய் விடுவார்கள். ஆனால் குழு அமைத்து ஆராய்ச்சி செய்து அதைப்பற்றிச் சொல்லுகின்ற நிலையில் நீங்கள் இருந்து அதற்கு அரசே துணை இருக்குமானால், யாரும் வழக்குப் போடமுடியாது என்று நான் கருதுகின்றேன். அந்த வகையில் உங்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற அளவுக்குச் சட்டத்தை ஏற்படுத்தியாக வேண்டும். உத்திரவுகளை நாம் போட்டாக வேண்டும். தமிழக அரசு இதற்காக நிச்சயமாகத் தன்னுடைய கடமையைச் செய்யும். நாட்டு மக்களுக்காக இதைச் செய்து தர வேண்டுமென்று விரும்புகிற உங்களை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளும். நீங்கள் இந்த அரசையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்— உங்களது ஆற்றலை, அறிவை பயன்படுத்திக் கிராமப்புற மக்களுக்குச் சேவை செய்தாக வேண்டும்.

ஒவ்வொரு கிராமமாகத் தேர்ந்தெடுத்து அந்த கிராமங்களுக்குச் சென்று, பணியாற்றி குறிப்பை எடுத்துக் கொண்டு, அந்தப் பணியைச் செய்து முடித்த பிறகு வேண்டுமானால் மதுரை நகரத்திலே வந்து தங்குங்கள். நீங்கள் அந்தக் கிராமங்களிலேதான் தங்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் இந்த நாட்டில் எதற்கெடுத்தாலும், எதைச் சொன்னாலும் குற்றம் காண்கின்றவர்கள் இருக்கிறார்கள் என்பதை

நீங்கள் மறந்து விடக்கூடாது. எனவே எச்சரிக்கையோடு நீங்கள் காரியத்தைச் செய்தால்தான் நீங்கள் கேட்டதும், நாங்கள் ஒப்புக் கொண்டதும் நிறைவேறுகின்ற நேரத்தில் வெற்றி தரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்கு உத்திரவாதம் தாருங்கள் என்று உங்களை கேட்டுக் கொண்டு, இந்த வெள்ளி விழா ஆண்டை துவக்கி வைக்கின்ற வாய்ப்பை தந்த அனைவருக்கும் நன்றி கூறி விடை பெற்றுக் கொள்கிறேன்.

முதல்வர் அவர்கள் மருத்துவர்களுடன் உரையாடுகிறார்.



# புரட்சித்தலைவரின் தொண்டால் மருத்துவத் துறையில் மறுமலர்ச்சி!

நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. திருச்சி. ஆர். சௌந்தரராசன்

(பல் மருத்துவப் பிரிவின் வெள்ளி விழாவையொட்டி மதுரை சென்னை, ஆகிய நகரங்களில் முறையே 23—7—78-ஆம் நாளன்றும், 6—8—78 ஆம் நாளன்றும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு)

பல் மருத்துவப்பிரிவு 25-ஆண்டுகள் பணியாற்றி முடித்திருப்பதை ஒட்டி, வெள்ளி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று அவர்கள் எல்லாம் சொன்ன நேரத்தில், இந்த விழா சென்னையில் நடைபெறுவதைவிட மதுரையம்பதியிலே நடப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் எனக் கருத்தறிவித்தேன்.

இது போன்ற விழாக்களைச் சென்னையில் நடத்துவதற்குப் பதிலாக தமிழகத்தின் பல பகுதிகளில் நடத்தி, அந்தந்தப் பகுதிகளிலே வாழும் மக்கள் இதனால் பலன் பெறும் வாய்ப்பை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். பல் மருத்துவத்தைப்பற்றி மிகச் சிறப்பாக இங்கே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் உரை நிகழ்த்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்பார்கள். அத்தகைய இடத்தைப் பெற்றுள்ள சிரசிலே பல் முக்கியமானது என்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட பல்லைப் பாதுகாப்பது எப்படி என்பதுபற்றி வெள்ளிவிழாவின் தொடர்பாகக் கருத்தரங்குகளை நடத்தி பல்லிலே ஏற்படக் கூடிய வியாதிகளைப் போக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து, அந்த வியாதிகள் வராமல் தடுக்க என்ன செய்வது என்பதுபற்றிய முடிவுகளைத் தர இருக்கிறீர்கள். ஆனால் இத்தகைய ஆராய்ச்சிகள் எத்தனையோ நடத்தி புதிய மருந்துகளைக் கண்டு பிடித்தாலும், புதிய புதிய வியாதிகளை இயற்கை உற்பத்தி செய்து கொண்டேயிருக்கிறது. ஆகவே இந்தத் துறைக்கும் வியாதி என்ற அந்த அரக்கனுக்கும் நடைபெறுகின்ற இந்தத் தொடர்போராட்டம் இன்னமும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஒரு கால கட்டத்தில் இந்தப் போராட்டத்தினுடைய வெற்றியை நீங்கள் சந்திக்கத்தான் போகிறீர்கள் என்பதையும், அப்படிப்பட்ட வாய்ப்பினை இந்த உலகம் பெறும் என்பதனையும், அப்போது மக்கள் நோயற்ற வாழ்வு என்ற எல்லைக்குப் போவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாகக் கிராமப்புறங்களில் வாழ்பவர்கள் பல் வைத்தியத்தைப் பற்றி சரியானபடி உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் சொன்னதைப் போல ஏதோ ஒரு குச்சி கையிலே கிடைத்தால் போதுமென்று, அதை வைத்துப் பல்துலக்க ஆரம்பிக்கிறார்கள்.

சரியாக அந்தக் குச்சி மசியாத காரணத்தினாலே, குச்சியின் ஈக்கி ஈறிலே குத்தி இரத்தம் வடிய ஆரம்பிக்கிறது. பிறகு அந்த இரத்தத்தை அடைக்கப் பொடியை வைத்துச் சிலர் தடவிக் கொள்கிறார்கள். சில ஆண்டுகளுக்குப்பின் அந்த இடத்திலே புற்று நோய் போன்ற வியாதி ஆரம்பித்து விடுகிறது. இப்படிப்பட்ட நிலையில் பல்நோயாலே அதிக அளவு பாதிக்கப்பட்டவர்களைக் கிராமப்புறங்களிலேதான் இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நகரத்திலே இருக்கின்றவர்களுக்கு இல்லையா என்று கேட்டால், கிராமப்புறத்திலே நாற்பது வயதுக்கு மேலே வருகின்ற பல்வியாதி நகர்ப்புறத்திலே பத்து வயதுக் குழந்தைக்கே வந்து விடுகிறது. காரணம் நகர்ப்புறத்திலே இருக்கின்றவர்கள், நாகரிகத்திலே மயங்கி, குழந்தைகள் அழாமல் இருந்தால் போதும் என்று கருதி சாக்லேட், ஐஸ் கிரீம் போன்றவைகளை வாங்கித் தந்து பழக்கப்படுத்தி, அவற்றை அந்தக் குழந்தைகள் அதிகமாகத் தின்று தின்று, பற்கள் பலத்தை இழந்து, குழந்தையாக இருக்கும் போதே, சிறு பிராயத்தை தாண்டுவதற்குள்ளேயே, பல்லின் பலத்தை இழக்கக் கூடிய நிலையிலும், பொய்ப்பல் கட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயச் சூழ்நிலையிலும் இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

## பெரியார் பல்லின் பலம்!

நான் ஒன்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தந்தைப் பெரியார் அவர்களை உங்களுக்கு நினைவு இருக்கும். சிலர் பார்த்திருப்பீர்கள், பழகி இருப்பீர்கள். நான் அவரோடு மிக நெருங்கிப் பழகியவன் என்ற முறையில், அவர் இறப்பதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே கூட அவரோடு ஒன்றாகச் சாப்பிட்டிருக்கிறேன். சாப்பிடுகின்ற நேரத்தில், கிட்டத்தட்ட 90 வயதுக்கு மேலே ஆன தந்தைப் பெரியார் அவர்கள் எலும்புகளைச் சர்வ சாதாரணமாகக் கடித்துத் துப்புவதை நானே பார்த்திருக்கிறேன். அப்போது சந்தேகம் வருவதுண்டு. ஒரு வேளை பொய்ப் பல் கட்டியிருப்பாரோ என்று வேடிக்கையாக அவரிடத்திலே கேட்ட போது, 'என்னுடைய பல்லை எடுக்க வருபவரின் பல்லை நான் எடுப்பேனே தவிர, என் பல்லை எடுக்க விடமாட்டேன்' என்று சொன்னார்கள். மேலும் 'எவன் ஒருவன் பல்லை இழக்கிறானோ அவன் பலத்திலே ஒரு பகுதியை இழக்கிறான். எவன் பல்லை இழக்கிறானோ அவன் சொல்லை இழந்து விடுகிறான்!'' என்று தந்தைப் பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அப்படிப் பட்ட நிலையில் உடலிலே இருக்கின்ற வலுவை பல் இணைத்திருக்கிறது என்று எடுத்துச் சொன்னார். அதை இன்று நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னிடத்திலே கோரிக்கையைத் தந்துள்ளார்கள். நான் அந்த கோரிக்கையை முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். 'இந்தக் கோரிக்கையை யோசித்துச் செய்வோம்' என்று சொல்லிவிட்டு, அது குறித்து நல்ல முடிவை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே புரட்சித் தலைவர் அவர்களின் இன்றைய தமிழக அரசு கேட்பதை நிச்சயமாகத் தரும். ஆனால் அதன்வழி ஏற்படும் நன்மைகள் பொது மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்பதில்,

பல் மருத்துவக் கண்காட்சியை நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் பார்வையிடுகிறார்.



இந்த அரசு முழு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

1953-ஆம் ஆண்டு கருவிலே இருந்து வெளி வந்த பல் மருத்துவப்பிரிவு என்ற இந்தக் குழந்தை இன்றைக்கு 25 ஆண்டுகளைக் கடந்து, வாலிபப் பருவத்தில் நடை போட்டுக் கொண்டிருக்கிறது. அதைப் பெற்றெடுத்தவர்களும் வளர்த்தவர்களும் உண்மையிலேயே பூரிப்படைந்தார்கள்.

வளர்ந்து விட்ட இந்தப் பையனைப் பார்த்து மாலையிட இன்றைக்குப் பலபேர் இருந்தாலும் தகுதி நிறைந்த வரை இந்த வாலிபன் மாலையிட வேண்டுமென்பதற்காகத்தான், இங்கே இருந்து மாலையிடுவதை விட, ஊர் சுற்றிப் பார்த்து எல்லோராலும் பாராட்டப்பட வேண்டுமென்று தமிழகம் முழுவதும் சுற்றிவர வேண்டுமென அனுப்பி வைத்தோம்.

## தனித்துச் செயலாற்றும் வயது!

நான் இதற்கு இன்னொரு உதாரணத்தைச் சொல்ல வேண்டும். இதுவரையிலே இந்தத் துறை, என்னுடைய அரசியல் வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் கட்டுப்பாட்டுக்குள்ளே—சுய அதிகாரமில்லாமல், அதிகாரங்கள் ஒரு இடத்திலே குவிந்து கிடக்கக் கூடாது, பிரித்துத் தரப்பட வேண்டும் எனச் சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில், அது தனித்து இயங்குவதற்கான அதிகாரமில்லாத நிலையில் இருந்தது. இதுவரையில் இருந்தது என்னவோ சரியான முறைதான். காரணம் 25 வயதை அது எட்டவில்லை. இப்போது 25 வயதை எட்டிவிட்ட காரணத்தினால், இந்தத் துறைக்குத் தனித்துப் பட்டத்தைச் சூட்டி விடலாம் என்ற நிலை வந்திருக்கிறது. இத்துறை தனித்து இயங்க ஆவன செய்யப்படும் என முதல்வர் அவர்கள் மதுரை மாநகரத்தில் சொல்லியதைச் சுட்டிக்காட்டி, அதற்கான வழிவகைகள் செய்யப்படும் என்பதற்கு நான் உறுதியளிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தத்துறை எத்தகைய பணியைச் செய்திருக்கிறது என்பதைப் பார்த்தாக வேண்டும். கிராமப் புறங்களில் பல் மருத்துவத்துறை நடத்திய முகாம்களில் அதிகப்படியாகக் கலந்து கொள்ள முடியாவிட்டாலும், மதுரை அனுப்பானடி என்ற இடத்தில் நடந்த கண்காட்சியில் மக்களோடு மக்களாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். பல் மருத்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதிலும், பல்லைப் பராமரித்துக் கொள்ள வேண்டுமென்பதிலும் எந்த அளவுக்கு ஈடுபாட்டைக் காட்டினார்கள் என்பதை நான் அன்றைக்கு நேரடியாகப் பார்த்தேன்.

## புரட்சித் தலைவர் பார்த்த மருத்துவம் !

அடுத்து எனது சொந்த மாவட்டமான திருச்சியில் ஆமூர் என்பது ஒரு சிறிய கிராமம். காவிரிக்கரை, கொள்ளிடக்கரை இரண்டையும் தொட்டு அது அமைந்திருக்கிறது. அதற்கெனத் தனியொரு வரலாற்றுச் சிறப்பே உண்டு. மதுரை வீரனுடைய கதை அந்தப் பகுதியிலேதான் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். அங்கேதான் தொட்டியத்துக்குச் சொந்தக்காரன் ஆண்டதாக வரலாறு இருக்கிறது. வெள்ளையம்மாளை மதுரை வீரன் சிறை எடுத்தது அந்த இடம்தான் என்பதற்கு வரலாறுகள் இருக்கின்றன. அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் பல் மருத்துவர்கள் தங்கள் மருத்துவப் பணியை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் எதிர்பாராமல் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே வருகை தந்தார்கள். வந்து கலந்து கொண்டார் என்று சொல்லுவதைவிட, அவரே ஒரு மருத்துவராக மாறி மக்களோடு மக்களாகக் கிட்டத் தட்ட ஒன்றரை மணி நேரம் அங்கே இருந்தார்கள். எந்த அளவுக்கு இந்தத் துறையைப் பற்றி மக்கள் புரிந்த நிலையில் தமிழகத்தில் இருந்தார்கள், எத்தகைய துறையை இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறது, அதிலே எத்தகைய நிபுணர்கள் இருக்கிறார்கள் என்பதை இன்றைக்குக் கிராமப்புறத்து மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

கிட்டத்தட்ட 25100 பேர்களை கடந்த 10 நாட்களில் பல் மருத்துவத் துறையினர் பரிசோதித்து மருந்துகளைத் தந்திருக்கிறார்கள். 25 ஆண்டுகளை முடித்துள்ள இந்தத்துறை 25000 கிராமப்புற மக்களைச்சந்தித்துள்ளது என்பதிலுள்ள ஒற்றுமையைப் பார்க்க வேண்டும். இத்தகைய நிகழ்ச்சிகள் ஒரு நாட்டிலே ஏற்படுகிறதென்றால், அவை ஒரு தலைவனாலேதான் ஏற்படமுடியும். மறுமலர்ச்சி என்று சொன்னால், அந்த மறுமலர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டியது ஒரு தலைவனுடைய பொறுப்பாகும். அப்படி பதினைன்காம் நூற்றாண்டில் கல்வியில் மறுமலர்ச்சி கான்ஸ்டாண்டிநோபிளில் நடந்தது. அதைப்போல மருத்துவத்துறையில் ஒரு மறுமலர்ச்சியை தமிழகம் கண்டு கொண்டிருக்கிறது என்றால், அத்தகைய மறுமலர்ச்சியை மருத்துவத்துறை காணப் போகிறது என்றால் அதற்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தொண்டு காரணம் என்பதை உளமார—மனமார எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

இந்த அரசைப் பொறுத்த வரையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித்தலைவரைப் பொறுத்த வரையில் நீங்கள் ஆற்றுகின்ற பணிகளுக்கு உங்களுக்கு

திருச்சி ஆமூர் கிராமத்தில் நடந்த பல் மருத்துவ முகாமில்(இ-வ) நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன், முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், பார்லிமெண்டரி செயலாளர் திரு. முசிறிப்புத்தன், திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. சங்கர் முதலியோர்.



நிழலாக இருப்போம். நீங்கள் கேட்பதைச் செய்து தருவோம். உங்களுக்குத் தேவையானதை முடித்துத் தருவோம். உங்களை விட்டு வலகி, அவர்கள் செய்யட்டும் பார்ப்போம் என்று தள்ளியிருந்து விடமாட்டோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்திக் கொள்கிறேன்.

எதிர்காலச் சமுதாயத்துக்குப் பயன்படும் வகையில் உங்கள் ஆராய்ச்சிகள் அமைய வேண்டும். ஆராய்ச்சியின் முடிவுகள் மனித குலத்திற்கு நீங்கள் அளிக்கும் சாதாரண மருந்தாக மட்டும் இருந்தால் போதாது. சஞ்சீவி மருந்தாக அமைந்து பயன் தர வேண்டும். உங்களுடைய உழைப்பு வெல்லட்டும். அது தமிழ் மக்களுக்கு வெல்லமாகக் கிடைக்கட்டும். அதன்மூலம் தமிழ் மக்களின் வாழ்வு இனிப்பாக மாறட்டும் என்று சொல்லி விடை பெறுகிறேன்.

# பல் மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழா!

'பல்போனால் சொல் போகும்' என்பார்கள்! சொல் சுத்தமாக இருப்பதற்குப் பல் பத்திரமாகப் பாதுகாக்கப் பட்டாக வேண்டும் ! பல்லைப் பாதுகாக்கும் பழக்கம் பண்டைய நாள் முதல் தமிழகத்திற்குச் சொந்தம்! 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி' என்ற பண்டைய பழமொழியே அதற்குச் சான்று ! என்றாலும் வளர்ந்து வரும் நாகரீகம் காரணமாகப் பல் துலக்காமல் கூட பானங்களை அருந்தும் வேண்டாத பழக்கங்கள் நம்மிடையே வளர்ந்து வருகின்றன. மருத்துவ விஞ்ஞானம் பல்லைப் பாதுகாத்துக் கொள்வதற்கான பல் வேறு வழிமுறைகளை மக்களுக்கு நல்கிவருகிறது!

உடலில் ஏற்படும் எத்தனையோ நோய்களுக்குப் பற்கள்தான் காரணமாகின்றன என்பது எல்லோரும் அறிந்திருக்கும்உண்மையாக இல்லை. 'பல்லைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாதவர்களைப் பார்க்கும் போது, 'யானை பல்லா விளக்குகிறது?' என்ற கேலி மொழி பேசப்படுவதை நாம் அறிவோம். அந்தளவுக்குப் பல் தூய்மை வலிறுத்தப்பட்டுள்ளது! இதயநோய்க்கும், தோல்வியாதிக்கும், கீல்வாதம், உணவுக் குழாய் நோய், கண் நோய், நரம்பு மண்டல நோய், சிறுநீரகக் கோளாறு அத்தனைக்கும் கூட பற்கள் பலமாக அமைந்து விடுகின்றன என்பது மருத்துவ உலகத்தின் கூற்றாக உள்ளது! நீரிழிவு நோய் உள்ளவர்கள் மருத்துவர்களைக் கலந்து ஆலோசித்த பிறகே பற்களைப் பிடுங்க வேண்டும் என்பது அனைவரும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியதாக உள்ளது! இதய நோயோ, உப்பிசப் புற்று நோயோ, சர்க்கரை வியாதியோ வந்தால், எடுக்க வேண்டிய பல்நோய்த் தடுப்பு முறைகள் ஏராளம் என்றும், ஆனால் மக்கள் இதில் அக்கறை செலுத்துவதில்லை என்றும் மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

உடலின் வாயிலில் உள்ளவை பற்கள்! அவற்றை ஒழுங்காக, முறையாகப் பேணிப்பாதுகாக்காவிட்டால் உடல் நலக் கோளாறு உறுதியாகி விடும். எனவே அதற்கான தனி மருத்துவம் தேவை என உணர்ந்து, தென் இந்தியாவிலேயே தமிழகத்தில் 1953 ஆம் ஆண்டு முதல் தனி மருத்துவப் படிப்பிற்கு தக்க வசதி செய்து தந்துள்ளனர். சென்னை மருத்துவக் கல்லூரியின் அங்கமான அந்தப் பல் மருத்துவப் பிரிவுக்குத்தான் வெள்ளிவிழா! 'பால் போன்றும் முத்துக்கள் போன்றும்' பற்களை வைத்துக் கொள்ள வேண்டியகின் அவசியத்தை மக்களிடையே பரப்பிய பல் மருத்துவப் பிரிவுக்கு வெள்ளிவிழா! வெண்மையின் இருப்பிடமாக பற்கள் இருந்தாக வேண்டும்! வெண்மைதானே தூய்மைக்குத் துணை என நல்வாழ்வுக் கல்வியை மக்களிடையே பரப்பிய பல் மருத்துவப் பிரிவுக்கு வெள்ளிவிழா!

இன்றைக்கு பல் மருத்துவத்திற்கென்றே தனியொரு மருத்துவமனை சென்னை கோட்டை இரயில் நிலையத்திற்கு எதிரே ஓங்கி உயர்ந்து நிற்கிறது. அதுதான் பல் மருத்துவமனை—பல் மருத்துவக் கல்லூரி! பல் மருத்துவக் கல்விக்கு இந்த ஆண்டு வெள்ளி விழா ஆண்டு! சென்னையில் மட்டுமல்லாது தமிழ்நாட்டின்தாலுகா மருத்துவ மனைகளிலெல்லாம் பல் மருத்துவ சிகிச்சைக்கு அரசு வசதி செய்து தந்துள்ளது. இன்றைய சென்னை பல்மருத்துவக் கல்லூரியில் பத்துப் பேராசிரியர்கள் 25 உதவிப் பேராசிரியர்கள் என எத்தனையோ வகையினர் பணியாற்றுகின்றனர்! ஆனால், தென்மாநிலங்களிலேயே முதன் முதலாக 1953-ல் தமிழகத்தில் பல் மருத்துவக்கல்லூரி துவக்கப்பட்ட நேரத்தில் பதினைந்து மாணவர்களும் இரண்டு ஆசிரியர்களுமே இருந்தனர்! பேராசிரியர்கள் வெவ்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்து வந்தார்கள்! பம்பாய் போன்ற இடங்களிலிருந்து வந்தார்கள். வெள்ளி விழாக் கொண்டாடும் இன்றைய பல் மருத்துவப் பிரிவு, வசதிகள் பலவற்றைப் பெறத் தமிழ்நாடு அரசு ஆவன செய்து உதவி வருகிறது! 1966-ஆம் ஆண்டில் பல் மருத்துவத்தில் மேற்கல்விக்கான பிரிவு தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆராய்ச்சிப்பகுதியும் 'ஐ.சி.எம்.ஆர்' போன்ற பகுதியும் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் மாநில, மத்திய அரசுகளின் உதவியோடும், அனைத்துலக நிறுவனங்களின் துணையோடும் இங்கு பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன!

பல் அடைக்க, பல்லை எடுக்க, பல்லைச் சுத்தம் செய்ய—சீரமைக்க என்பவற்றிற்கும், பல்கட்டுவது, பல் பாதுகாப்பு, குழந்தைகளின்பற்களைப் பாதுகாப்பது போன்றவற்றிற்கும் இம்மருத்துவமனையில் தனித்தனிப் பிரிவுகள் இருந்து செயல் படுகின்றன. பல் சொத்தை உடையவர்கள் இங்கு சென்றால், தேதி குறிப்பிட்டு வரச் சொல்லி ஆவன செய்து விடுகிறார்கள். அண்மைக்கால நவீன மருத்துவக் கருவிகள் அனைத்தும் இம்மருத்துவமனையில் இடம் பெற்றுள்ளன!

முழுமையாகப்பற்கள் கட்ட முப்பது ரூபாயே கட்டணம் பெறப்படுகிறது. ஒருபல் கட்ட நாலு ரூபாய்தான்

சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவ வெள்ளி விழாவை முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் துவக்கி வைத்தார்.



பெறுகிறார்கள். பல்லை அழகு படுத்துவதால் இந்தக் கட்டணம் வசூலிக்கப் படுவதாகக் கூறப்படுகிறது! பல் கட்டுவதற்கு மட்டும்'தான் கட்டணம்! பல்லைப் பிடுங்க, பல்லைப் பாதுகாக்க கட்டணம் ஏதுமில்லை. மாதவருமானம முந்நூறு ரூபாய்க்குக் கீழ் உள்ள அனைவருக்கும் மருத்துவம் இலவசமாகவே செய்யப்படுகிறது! ஆண்டு தோறும் இந்த மருத்துவமனையில் ஏறத்தாழ இரண்டு லட்சம் நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். 'அவசரகால பல் மருத்துவ நிலையம்' (An Emergency Clinic in Dental



சென்னை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த பல் மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி. ஆர். சௌந்தரராசன் உரையாற்றுகிறார்.



திருநெல்வேலி மாவட்டம் வீரபாண்டியன் பட்டினத்தில் நடந்த பல் மருத்துவ முகாமில் மருத்துவர்கள் பரிசோதனை செய்கிறார்கள்.


Wing) ஒன்று அலுவல் நாட்களில் காலை 10-30 மணிமுதல் மாலை 4-00 மணிவரை இயங்குகிறது. அவசர பல் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கென்றே சென்னை பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் இரவிலும் பணியாற்றி வருகிறார்கள்!

இந்தப் பல் மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழா கடந்த 23-7-78 முதல் 10—8—78 வரை மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் நடத்தப்பட்டது. வெள்ளி விழா நிகழ்ச்சிகள் வழக்கம் போல் சென்னையில் நடத்தப்படவில்லை. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்களால் மதுரை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 23—7—78-ஆம் நாள் துவக்கி வைக்கப்பட்டது. நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு நல்வாழ்வு குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள் தலைமை வகித்தார். 'வெள்ளி விழா நிதி (The Silver Jubilee Endownment Fund) என்ற பெயரில் மருத்துவர்கள் அளித்த காசோலைகளை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் நிதியொன்றைத் துவக்கி வைத்தார். வெள்ளிவிழாச் சிறப்புமலர் ஒன்றினை மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ். ஞானதேசிகன் அவர்கள் வெளியிட்டார். வெள்ளி விழாவைத் துவக்கி வைத்த மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பல் மருத்துவக் கல்லூரி தனித்தியங்க ஆவன செய்யப்படும் என அறிவித்தது பல் மருத்துவ உலகத்தின் பெரு மகிழ்ச்சிக்கு வித்தாக அமைந்தது எனலாம்!

வெள்ளி விழாத் தொடர்பாக மதுரை மருத்துவக் கல்லூரியிலும், சென்னைப் பல் மருத்துவப் பிரிவிலும் சிறந்த முறையில் பல் மருத்துவக் கண்காட்சி அமைக்கப்பட்டு நடத்தப் பட்டது. 23-7-78 முதல் 13-8-78 வரை நடந்த இந்தக் கண்காட்சியை 15000-க்கும் மேற்பட்ட குழந்தைகளும், மற்றவர்களும் பார்த்துப்பலன் அடைந்தனர்!

பல் மருத்துவ முகாம்கள் கிராம மக்கள் நன்மைபெறும் வகையில் நடத்தப்பட்டது என்பது பல்மருத்துவப் பிரிவு வெள்ளி விழாவின் தனிச் சிறப்பாகும். வெள்ளி விழாவையொட்டி, குக்கிராமங்களில் வாழும் மக்களுக்கும் பல்பாதுகாப்பு பற்றிய தகவல்கள் போய்ச் சேரும் வகையில் பல் மருத்துவ முகாம்கள் நடத்தப் பட்டன. மாநில அளவிலான பல் மருத்துவ முகாம் மதுரை மருத்துவக் கல்லூரியில் 23—8—78 ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி ஆர். அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

உண்மையிலேயே, பல் மருத்துவ சிகிச்சை முகாம்கள் மூலம் கிராம மக்களிடையே பல் பாதுகாப்பு பற்றி நல்ல ஒரு தெளிவை ஏற்படுத்த இந்த வெள்ளி விழா பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமங்களில் பல் துலக்குவதற்கு அவ்வளவு முக்கியத்துவம் தருவதில்லை. கருவேலங்குச்சி, வேப்பங்குச்சி, ஆலவிழுது போன்றவை கிராம மக்களுக்குக் கிட்டும் நிலையில் உள்ளன என்ற போதிலும், பம்பரச் சுழற்சி போன்ற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் பயன்படுத்துவதில்லை. மேலும் அடுப்புக்கரி, உப்புடன், நெல் உமியை முனை மழுங்கப் பொடியாக்கி, நன்றாகத் துணியிலிட்டு வஸ்திர காயம் செய்து, பல் துலக்கப் பயன்படுத்தினால் மிகவும் நல்லது என தெரிந்திருந்தும் கிராமங்களில் இது வெகுவாகப் பயன்படுத்தப்படவில்லை. செங்கல்லும், மண்ணும், சாம்பலும் இயல்பாகக் கிராம மக்கள் பயன்படுத்தும் பற்பசையாக இருக்கின்றன! 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என அடிக்கடி பேசிய போதிலும், நோய்களுக்கு அடித்தளமாக அமைகின்ற பற்களின் பாதுகாப்பில் தக்க கவனம் செலுத்தப்படவில்லை என்பது மருத்துவ அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது! இன்றை நிலையில் பல் மருத்துவத்தின்படி, அதிக அளவு பாதிப்பு



குற்றாலத்தில் நடந்த மாவட்ட மருத்துவ, குடும்பநல, நல்வாழ்வு அலுவலர்கள் மாநாட்டை செயலாளர் திரு. பி. முராரி அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றுகிறார்.

ஏற்படுமுன் தடுக்க முடியும் எனக் கூறப்படுகிறது. வாயிலே ஏற்படும் புற்று நோய் காரணமாக ஐந்து முதல் பத்து விழுக்காடு அளவினர் இறப்புக்கு உள்ளாக வேண்டியுள்ளது என்று நிபுணர்கள் கருத்தறிவித்துள்ளார்கள்!

1978-ஆம் ஆண்டு வெள்ளிவிழா தொடர்பாக மதுரை மாவட்டம் அனுப்பானடியிலும், டி. கல்லுப் பட்டியிலும், தென் ஆற்காடு மாவட்டம் வடலூரிலும், வட ஆற்காடு மாவட்டம் காவானூரிலும், தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினத்திலும், திருச்சி மாவட்டம் ஆமூரிலும், இராம நாத புரம் மாவட்டம் அத்திபட்டியிலும், நீலகிரி மாவட்டம் சோளூரிலும், கோவை மாவட்டம், செல்ல பாளையத்திலும், சேலம் மாவட்டம் குருசாமி பாளையத்திலும், தஞ்சை மாவட்டம் சீர்காழி, பாபநாசத்திலும், திருநெல்வேலி மாவட்டம் வீரபாண்டியன் பட்டிணத்திலும், செங்கல்பட்டு மாவட்டம் முடிச்சூர், போரூர் ஆகிய இடங்களிலும் பல் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இம் முகாம்களில் ஏறத்தாழ பதின் மூவாயிரத்து ஐநூறு பேர்கள் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர். புற்று நோய் இருப்பதுகூடக் கண்டுபிடிக்கப் பட்டு சிகிச்சைக்கு வழிப்படுத்தப் பட்டனர்.



தென் ஆர்க்காடு மாவட்டம் வடலூர் பல் மருத்துவ முகாமில் பல் மருத்துவப் பரிசோதனை.

திருச்சி மாவட்டம் ஆமூர் கிராமத்தில் நடத்தப்பட்ட பல் மருத்துவ சிகிச்சை முகாமிற்கு 30-7-78-ஆம் நாள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள், மாண்புமிகு குடும்பநல நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தீரராசன் அவர்கள், அரசு நல்வாழ்வு–குடும்பநலத் துறை ஆணையரும், செயலாளருமான திரு. பி. முராரி அவர்கள் ஆகியோர் உடன்வர எதிர்பாராத விதமாக வருகை தந்தார். முகாமில் கலந்து கொண்டிருந்தோர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கண்டதும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. நாற்பத்தி ஐந்து நிமிடங்களுக்கு மேல் முகாமில் இருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், மிகுந்த அக்கறையோடு அனைத்தையும் கேட்டறிந்தார். அங்கு குழந்தைகளுக்குப் பல் துலக்கும் பிரஷ்களை மாண்புமிகுமுதல்வர்திரு.எம் ஜி.ஆர். அவர்கள் இலவசமாக வழங்கினார்! மதுரை மாவட்டம் அனுப்பானடி சிந்தாமணி கிராமத்தில் நடத்தப்பட்ட முகாமிற்கு மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள் வருகை தந்து முகாம் நடவடிக்கைகளை அரை மணி நேரத்திற்கும் மேலாக இருந்து கண்டறிந்தார்! பொது மக்களுக்குப் பற்பசை வழங்கினார்!

பயனுள்ள வகையில் எடுக்கப்பட்ட பல்மருத்துவப் பிரிவு வெள்ளிவிழாவுக்கான நிறைவு விழா நிகழ்ச்சிகள் 6-8-78 ஆம் நாள் காலை, சென்னை பல் மருத்துவ மனையில் சீறும் சிறப்புமாக நடந்தேறியது. வெள்ளிவிழாத் தொடர்பான 'கல் வெட்டை', நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள் திறந்து வைத்தார்! தமிழ்நாடு அரசு நல்வாழ்வு குடும்பநலத்துறைச் செயலாளர் திரு. பி.முராரி அவர்கள் வெள்ளிவிழாச் சிறப்புரையாற்றினார்.

பல் பாதுகாப்புத்தான் உடல்நலத்திற்கு அச்சாணி என்பதை கிராம மக்களுக்கு விளக்க எண்ணித் தமிழ் நாடு அரசு நடத்திய பல் மருத்துவ முகாம்கள் அவர்களிடையே நல்லதொரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கியிருக்கின்றன!.

—எஸ். முத்துராமலிங்கம்

# கதிரின் காணிக்கை



இருண்டு கிடந்த தமிழர் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றியவர் தந்தை பெரியார் ஆவார். அவர் ஆற்றியுள்ள சமூகச் சீர்திருத்தங்கள்—அவற்றிலே அவர் அடைந்துள்ள வெற்றிகள்—பலப்பல!

அவற்றில் ஒன்றுதான் சிறுகுடும்ப நெறியைப் பற்றி அய்யா அவர்கள் சொன்னதாகும்.

யாருமே எண்ணிப் பார்க்காத காலத்தில்—யார் மனதிலும் அத்தகைய சிந்தனை எழாத நாட்களில்—ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, குடும்பக்கட்டுப்பாடு பற்றி பெரியார் அவர்கள், தீவிரமாக பேசியிருக்கிறார், எழுதியிருக்கிறார்! 1931-ல் குடும்பநலம் பற்றி அவர் 'குடியரசு' இதழில் எழுதிய அரிய தலையங்கம், இந்தச் சிறப்பிதழில் இடம் பெற்றிருக்கிறது.

தந்தை பெரியார் அவர்கள் குடும்ப நலம் பற்றி பேசியது, எழுதியது, உகுத்த அரிய கருத்துக்கள் ஆகியவற்றை, இயன்ற அளவு திரட்டித் தொகுத்துத் தந்திருக்கிறோம்.

தமிழகத்தில், ஏன் இந்தியாவிலேயே, குடும்ப நலத்தைப்பற்றி முதன்முதலாக எடுத்துச் சொன்னவர் பெரியார் அவர்களே ஆவார்கள்.

குடும்பநலத் திட்டத்தின் தந்தை அய்யா அவர்களுக்கு 'குடும்ப நலச் செய்திக் கதிர்' தனது இச்சிறு காணிக்கையைச் செலுத்துகிறது.

—கே. ஜி. இராதாமணாளன்,
ஆசிரியர்.



Printed and Published by:
S. GNANADESIKAN, M.D.,
Director of Medical Services and Family Welfare [Incharge] at
49, Pantheon Road, Madras-600 008
—Sasco Family Welfare Press,
79/84, Anna Salai, Madras-600 006
Editor: K. G. RADHAMANALAN
Associate Editor:



# தமிழகத்தில் குழந்தைகள் நல விழா!

## நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிவிப்பு!

தந்தை பெரியார் அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 17-ஆம் நாள் முதல், உலகப் பெரியார் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாள் வரை, தமிழகம் முழுவதும் குழந்தைகள்நல இருவார விழாவாகக் கொண்டாடப் படும் என்று, நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் அவர்கள் 4-9-78-ஆம் நாள் இரவு அவரைச் சந்தித்தபோது கூறினார்.

தமிழகம் முழுவதிலுமுள்ள அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிளை நிலையங்கள் அனைத்தின் வாயிலாகவும் சேய் நலம் காப்பதற்கான முனைப்பான பணிகளாற்றப்படும். நோய்கள் வராமல் தடுப்பதற்கான தடுப்பு மருந்துகள் இலவசமாகப் போடப்படும். மாலைக் கண் நோயிலிருந்து குழந்தைகளைக் காக்க 'வைட்டமின் ஏ' மருந்து கொடுக்கப்படும். சத்துணவுக் குறையை நீக்கச் சத்து மிக்க மாத்திரைகள் வழங்கப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள வாகனங்கள் மூலம் கிராமம் கிராமமாகச் சென்று குழந்தைகள் நலத்திற்கான பணிகள் ஆற்றப்படும்.

இப்பணிகளுக்கு உதவும் வகையில் ஸ்பென்சர் நிறுவனம் 10 லட்சம் சத்து மாத்திரைகளை வழங்கி உதவ முன் வந்திருக்கிறது. பதினைந்துதினங்களுக்கு வருமாறு, பதினைந்து மாத்திரைகள் அடங்கிய பொட்டலம் தேவையான குழந்தைகளுக்கு வழங்கப்படும்.

மேற்கண்ட விவரங்களைக் கூறிய மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் காந்தியடிகளும் குழந்தைகள் நலம் ஓங்க வேண்டுமென்பதில் தனி அக்கறை காட்டினர் என்றார்.

# குடும்பநல இருவார விழா!

## அக்டோபரில் நடக்கும்!

நம நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக குடும்ப நல இருவார விழாவை இந்தியஅரசு தள்ளி வைத்துள்ளது. வரும் அக்டோபர் 16-ஆம் நாள் முதல் குடும்ப நல இருவார விழா இந்தியா முழுவதும் எடுக்கப்படும்!

